www.tamilarangam.net

குழந்தை ம. சண்முகலிங்கம்

# மண் சுமந்த மேனியர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மண் சுமந்த மேனியர்

SEELAN BOOKS ★ NORWAY ★
SIGNATURE

குழந்தை ம. சண்முகலிங்கம்

தேசிய கலை இலக்கியப் பேரவை

சவுத் விஷன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Man Sumantha Meniyar
Kuzhanthai M. Shanmugalingam
First Edition : May 1998
Published in Association with
National Association for Art and Literature
by

SOUTH VISION
6, Thayar Sahib II Lane
Chennai - 600 002.

Rs. 50.00

Published and Distributed in Sri Lanka by
Vasantham (Pvt.) Ltd.
South Asian Books
44, 3rd Floor, CCSM Complex, Colombo - 11.
Tel : 335844 Fax : 00941 - 333279

தேசிய கலை இலக்கியப் பேரவையின்
25வது ஆண்டு நிறைவு
வெளியீட்டு வரிசையில் ஐந்தாவது நூல்

மண் சுமந்த மேனியர்
குழந்தை ம. சண்முகலிங்கம்
முதற் பதிப்பு : மே 1998
வெளியீடு
தேசிய கலை இலக்கிய பேரவையுடன்
இணைந்து

சவுத் விஷன்
6, தாயார் சாகிப் 2வது சந்து,
சென்னை - 600 002.

ரூபா : 50.00

அச்சாக்கம் : மணி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 005. ■ லேசர் அச்சு : ஆதவ் கிராபர்ஸ், சென்னை - 600 014. ■ அட்டை அச்சு : பிரிண்ட் ஸ்பெஷாலிடி. சென்னை - 600 014.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பதிப்புரை

இலங்கைத் தமிழ் மக்களின் தனித்துவமான பாரம்பரிய தாயகம் மீது திணிக்கப்பட்ட யுத்தக்கொடுமைகளுக்கு எதிராக விடுதலை வேண்டி நிற்கும் தமிழ் மக்களின் சுயசார்புத் தேடலின் முனைப்பே 'மண் சுமந்த மேனியரில்' காணலாம்.

மக்களின் தேவைகளை, விரக்தியை, வேதனையை நம்பிக்கைத் துளிர்களை நவீன வெகுஜன ஊடகத்தின் வசதிகளற்ற யாழ்மண்ணில் வெளிக்கொணரும் அரங்காக நவீன நாடக அரங்கு அமையத் தொடங்கிய வரலாற்றின் தொடர்ச்சியில் முக்கியத்துவமுடைய நாடகம் இந்நாடகமாகும்.

குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் இந்நாடகப் பிரதியினையும், விமர்சனங்களையும் இணைத்து வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம். அவரது 'அன்னை இட்ட தீ' ஏற்கனவே வெளிவந்த நாடக இலக்கியமாகும்.

நூல் பற்றிய விமர்சனங்களை வரவேற்கிறோம்.

தேசிய கலை இலக்கியப் பேரவை

S.44, மூன்றாவது மாடி.
கொழும்பு மத்திய சந்தைக்
கட்டிடத் தொகுதி
கொழும்பு - 11.

www.tamilarangam.net

# பொருளடக்கம்

1. முன்னுரை 5

2. மண் சுமந்த மேனியர் I 10

3. விமர்சனங்கள் 59

4. மண் சுமந்த மேனியர் II 86

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன்னுரை

1983இல் ஈழத்தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டம் இன்னொரு பரிமாணம் எடுத்தது. போராட்டத்தின் அரசியல் இராணுவப் பரிமாணங்கள் முனைப்புப் பெற்றிருந்தன. இதனால் அரங்க கலை வெளிப்பாடுகளுக்கு காலம் உகந்ததாக இல்லை என்ற ஒரு மயக்கம் அன்றிருந்த இராணுவ நடமாட்டம் காரணமாக பலரிடையே பரவியிருந்தது. இந்நிலையில் பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு கலாசார முயற்சியொன்றைத் துவக்குவது என்று ஒரு சிறிய குழு (நால்வர்) தீர்மானித்துக் கொண்டது. பல்கலைக் கழக் வளாகத்தினுள்ளேயே ஒரு "கலாசார நாள்" ஒன்றை நடத்திப் பார்ப்பது என்பது முதல்கட்டமாக இருந்தது. கலாசார நாளின் முக்கிய வெளிப்பாடுகளாக நாடகமும், கவிதா நிகழ்வும் அமைந்திருந்தன.

அந்நாடகமே "மண் சுமந்த மேனியர்", கவிதா நிகழ்வு "எங்கள் மண்ணும் இந்த நாட்களும்".

மண் சுமந்த மேனியரின் அனுபவக் குறிப்புகளை எழுதுவதே இங்கு நோக்கம்.

தேசிய விடுதலைப் போராட்டத்தின் பாடுகள் அரங்க வெளிப்பாடாக கொண்டுவரப்பட வேண்டுமென்ற தேவை எம்மில் சிலரை ஒன்று கூட்டி சிந்திக்க வைத்தது.

நாடகம் எழுதுவதற்காக குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களை அணுகுவது எனத் தீர்மானித்தோம். இன்னொருவரை அணுகுவதை விடுத்து நாமே எழுதிக்கொள்வது சிறந்தது என வாதம் எழுந்தது.

எனினும் சண்முகலிங்கத்தை அணுகியபோது தனியாக அவர் மனதில் தோன்றுவதை எழுதுவதை விடுத்து குழுவாக கூடிக் கதைத்து பிரச்சினைகளை இனங்கண்டு பின் நாடக பாடத்தை சண்முகலிங்கம் தயாரிப்பது என்ற சிந்தனை எழுந்தது.

இந்த எண்ணத்தோடு சமூகத்தின் பல்வேறு மட்டங்களுக்கும் ஊடுருவினோம்.

ஊடுருவிப் பெற்ற அனுபவத்தை அ. ரவி (சிறுகதை எழுத்தாளன்) மூலம் ஒரு இலக்கிய எழுத்தாக்கி சண்முகலிங்கத்திடம் கையளித்தோம். அத்தோடு பல்வேறு கவிதை நூல்களும் (இரண்டாவது சூரிய உதயம், பாலஸ்தீனக் கவிதைகள்), நாட்டார் பாடல் தொகுப்புகளும் கையளிக்கப்பட்டன. சண்முகலிங்கம் நாடகபாடத்தை எழுதப் புகுந்தார்.

www.tamilarangam.net

நாம் நாடகத்தில் நடிப்பதற்கு ஆட்களைத் தேடினோம். பல்வேறு பார்வைகள் (தேசிய விடுதலைப் போராட்டம் பற்றி) உள்ளவர்களை இணைத்து கொண்டோம். இணைந்தவர்களைப் பார்த்தால் நாடகத்தில் ஆர்வமுள்ளவர்கள் என்பதைவிட தேசியவிடுதலைப் போராட்ட உணர்வும், ஆர்வமும் உடையவர்களாகவே இருந்தனர்.

நாடகபாடம் இன்னமும் நெறியாளரின் கைக்கு வரவில்லை. எனினும் கலைஞர்கள் சந்தித்துக் கொண்டோம். கத்தினோம், ஆடினோம், பாடினோம், கதைத்தோம். "விசர்" எனக்கூறி சிலர் விலகிச்சென்றனர். மீதமிருந்தவர் ஒன்றாக ஆகினோம்.

இப்போதுதான் (முதல் சந்திப்பிலிருந்து ஏறக்குறைய 10 நாட்களின் பின்) நாடகபாடம் - மண்சுமந்த மேனியர் - கையில் கிடைத்தது. மீதமிருந்த அத்தனை பேரினதும் ஈடுபாட்டோடு ம்ண்சுமந்த மேனியர் வளர்ந்தது. ஈடுபட்டவர்களில் அநேகர் முன் நாடக அனுபவம் எதுவுமில்லாதவர்கள். சிறந்த நடிகர்கள் என்று பேரெடுக்காதவர்கள்.

ஆனால் ஈடுபாடு இருந்தது. இந்த ஈடுபாடுதான் மண்சுமந்த மேனியரின் வெற்றிக்கு முக்கிய காரணியாக இருந்தது என்பது பின்னர் புரியப்பட்ட ஒரு செய்தி.

கலைஞர்களிடையே நட்பு வளரத் தொடங்கியது. ஒத்திகை நேரங்களைவிட வேறு நேரங்களிலும் சந்தித்தோம். மண் சுமந்த மேனியரைப் பற்றியே பேசினோம். திட்டமிட்டோம். மண்சுமந்த மேனியர் விவரித்த பிரச்சினையின் களங்களுக்குச் சென்றோம். பட்டறிந்தோம்.

மண்சுமந்த மேனியர் நாடகபாடத்தில் பல நாட்டார் பாடல்கள் இருந்தன. அவற்றை பேராசிரியர் சண்முகதாஸ் பாடித்தந்தார். ஒத்திகைகளின் போது இசைக்கலைஞர் கண்ணன், அவர் பாடித்தந்த இராகங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு நாடக மனநிலைக்குத் தக்கதான இராகங்களை இணக்கினார்.

ஒத்திகைகள் மிகுந்த கட்டுப்பாட்டோடு நடந்தன. நேரத்தைக் கடைப்பிடித்தல் முக்கியமானதாக இருந்தது. நாடகம் மெதுமெதுவாகவே வளர்ந்தது. கலந்துகொண்டவர்களில் பலருக்கு இது ஒரு புதிய அனுபவமாக விளங்கியது. "இந்த நாடகம் சரிவருமா..." என்றவாறுகூட ஒருவர் சந்தேகத்தைக் கிளப்பினார்.

த்யாரிப்பின் இறுதிநிலையில் பார்வையாளர் இதனை ஏற்றுக்கொள்வார்களா என்ற ஒரு சந்தேகம் பற்றி கலந்துரையாடப்பட்டது.

www.tamilarangam.net

கட்டணம் அறவிடாமல் மண்டபத்தில் வெக்கையில்லாத காலை நேரத்தில் (இரவில் ஊடரங்கு உத்தரவு) நாடகத்தை மேடையேற்றுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரைக் கொண்டு நாடகத்தை அமைதியாகப் பார்க்குமாறு பார்வையாளரை வேண்டிக்கொள்ளவும் முடிவெடுத்தோம்.

பார்வையாளர் பற்றிய பயத்தோடும் அநேக கலைஞர்களுக்கு முதல் அனுபவமாகையால் அதற்குரிய பதட்டத்தோடும் 1985 மார்ச் 30இல் நாடகம் மேடையேறியது. பார்வையாளரிடம் பாராட்டுக்கிடைத்தது. கலைஞர்களுக்கு உற்சாகம்.

இரண்டாம் நாள் மண்டபம் நிரம்பி வழிந்தது. பாடுனர்கள், இசைஞர்களுக்காகப் போடப்பட்டிருந்த இடங்களையும் பார்வையாளர் பிடித்துக்கொண்டனர். மண்டபத்தின் கதவுகளும், ஜன்னல்களும் தலைகளால் நிரம்பியிருந்தன. நிறைய அரசியல் போராளிகள் வந்திருந்தனர்.

மூன்றாம் நாளும் நாடகத்தை மேடையேற்ற வேண்டி வந்தது.

அரங்கு வெளிப்படுத்தப்பட்டவிதம் பற்றி பலரும் வியப்புத் தெரிவித்தனர். சஞ்சிகைகள், பத்திரிகைகளில் விமர்சனங்கள் வெளிவந்தன (இணைக்கப்பட்டுள்ளன). கலைஞர்களுக்கும், அரசியல் போராளிகளுக்குமிடையில் ஒரு நல்ல உறவு பரிணமித்தது. அரசியல் வேலையின் ஒரு பகுதியாக மண்சுமந்த மேனியர் ஊர் ஊராகச் செல்லவேண்டும் என அரசியல் போராளிகள் விரும்பினர். ஊர் ஊராக ஏற்பாடுகளும் செய்தனர்.

மண்சுமந்த மேனியர் ஊர் ஊராக பவனி வந்தனர். போகப்போக இந்தப் பவனியில் மேலும் பலர் நட்போடு இணைந்துகொண்டனர். மண் சுமந்த மேனியருக்கு ஊர் ஊராக வரவேற்பு கிடைத்தது. வெயிலிலும், மக்கள் காத்து நின்றனர். இராணுவ நடமாட்டம் இருந்ததால் நிதானித்து, நிதானித்தே கலைப்பவனியை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இதனால் குறித்த நேரத்தைவிட தாமதமடைந்ததும் உண்டு. இவ்வாறு ஒருமுறை ஊரெழு என்ற கிராமத்திற்கு தாமதித்துச் சென்றபோது மக்கள் குடைகளைப் பிடித்தபடி நடுவெயிலில் காத்து நின்றனர். மண்சுமந்த மேனியரைப் பார்ப்பதில் மக்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். கோயில் திருவிழாவிற்குச் செல்வதுபோல் மக்கள் சாரிசாரியாக மண் சுமந்த மேனியரைக் காணவந்தனர். பல இடங்களில் கலைஞர்களே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்வையாளரைக் கட்டுப்படுத்தவேண்டி இருந்தது. பார்வையாளருடன் ஆத்திரப்பட்டுக் கதைக்கவேண்டி இருந்தது. இவ்வாறு ஆத்திரப்பட்டது எந்தவிதப் பிரச்சினையையும் கொண்டுவரவில்லை.

அதாவது கலைஞர்களிடம் ஒருவகை அதிகாரம் இருந்தது. அதனை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். அல்லது பொறுத்துக்கொண்டனர். ஏன் அவர்கள் அந்த அதிகாரத்தை ஏற்றுக்கொண்டனர் அல்லது பொறுத்துக் கொண்டனர்.

இது ஒரு முக்கியமான விஷயம். ஏனென்றால் இது கலைஞனுக்கும் மக்களுக்குமான உறவு பற்றிய பிரச்சினை. யாழ்ப்பாணத்தில் வெளிவரும் 'சிரித்திரன்' சஞ்சிகையின் ஆசிரியர் என்னிடம் பின்வருமாறு கூறினார்,

> "நாங்கள் சாத்திரியிடமும், வைத்தியரிடமும் மிகவும் கவனமாகக் காதுகொடுத்துக் கேட்போம். ஏனென்றால் அவர்கள் எங்களுடைய பிரச்சினையைப் பற்றிச் சொல்கிறார்கள். அதுபோலத்தான் மண்சுமந்த மேனியரையும் கவனமாகப் பார்க்கிறோம்."

மக்கள் தம்மை 'மண் சுமந்த மேனியரில்' கண்டனர்.

கொக்குவிலில் நிகழ்ச்சி முடிந்தபின்னர் ஒருவர் கேட்டார் "என்னெண்டு இப்பிடியெல்லாம் கண்டுபிடிச்சனீங்கள்."

தமது பிரச்சினையின் கனபரிமாணத்தை மண்சுமந்த மேனியர் கண்டுபிடித்து விவரித்த விதத்தை அவர்கள் வியப்புடன் நோக்கினர்.

'மண்சுமந்த மேனியரை' நிகழ்த்திக்கொண்டு போகப் போக எம்மில் ஒரு மாற்றம் தெரிந்தது. 'மண்சுமந்த மேனியரைப்' போட்டு திறமையான நடிகர் என்று பெயரெடுப்பதைவிட மண் சுமந்த மேனியரை நிகழ்த்துவதில் ஆர்வம் காட்டினோம். நிகழ்ச்சி முடியும் போதும் மேடையைவிட்டு வெளியே வந்து மக்களையும் சேர்த்துக்கொண்டு 'தானையும் ஏகுவீரே' (நாடகத்தின் இறுதியில் வரும் வரி) என்று பாடுவதில் மகிழ்ச்சியடைந்தோம். இது பின்னர் போரிடவே வருக என வளர்ச்சியடைந்தது. மக்களுடன் கதைப்பதில் ஆர்வம் காட்டினோம். (இவையெல்லாம் படித்த, நாடகமும் தெரிந்தவர்களுக்கு சினம் கொடுத்த விடயங்கள்) இவற்றை நாம் போலியான மனோபாவத்துடன் செய்யவில்லை. எமக்குத் தெரிந்தவரையில் உண்மையாகவே செய்தோம்.

www.tamilarangam.net

கலைஞர்களிடம் ஒரு அர்ப்பணிப்பு மனோபாவம் இருந்தது. உண்மையில் அந்த நாட்கள் நமது வாழ்வில் மிகவும் மகிழ்ச்சியான நாட்கள்.

இப்படியான ஒரு நிலையில்தான் நாம் மக்களின் முன்னிலையில் சில கணங்களில் அதிகாரத்துடன் நடந்த போதும் அது பிரச்சினையாய் எழவில்லை என எண்ணுகிறேன்.

மண் சுமந்த மேனியர் 60 தடவைகள் நிகழ்த்தப்பட்டன. ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு அனுபவம். சில இடங்களில் ஒழுங்கான மேடை இருக்கும். வேறுசில இடங்களில் ஒழுங்கான மேடை இருக்காது. ஆரம்பத்தில் சிரமப்பட்ட போதும் பின் இடத்திற்கு ஏற்றவாறு நாடகத்தை நெகிழ்ச்சி உடையதாக்கினோம். 'மக்களைச் சந்தித்தல்' என்பது முக்கியம் பெற இயல்பாகவே இந்த நிலைக்கு நாம் மாறினோம். ஆனால் ஒரு கட்டத்திற்கு மேல் இது சாத்தியமற்றுப்போய் விட்டது. மண் சுமந்த மேனியர் போகமுடியாத இடங்களும் இருந்தன. மண்சுமந்த மேனியர் நெகிழ்ச்சி அடையக் கூடிய வடிவமாக இருந்தபோதிலும் அது சில குறைந்தபட்ச வசதிகளைக் கோரி நின்றது. அந்த வசதிகளைத் தரமுடியாத மக்களும் இருந்தனர். எனவே அந்த மக்களைச் சந்திப்பதற்குப் பொருத்தமான இன்னொரு அரங்கவடிவத்தை தேடவேண்டி ஏற்பட்டது.

'தெரு வெளி அரங்கு' வடிவம் இத்தேடலின் விளைவே. இன்று தொண்ணூறுகளில் தெருவெளி அரங்கு ஈழத்தமிழரிடையே ஓர் முக்கிய அரங்க வடிவமாக மேற்கிளம்பியுள்ளது.

நுண்கலைத்துறை **க. சிதம்பரநாதன்**
யாழ் பல்கலைக்கழகம்
24-04-1995.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மண் சுமந்த மேனியர் - I

## 14.02.1985

திரை விலகுவதற்கு முன்னர் பாடகர்குழு பின்வரும் பாடலைப் பஜனைப் பாணியில் பாடுவர்

பாடகர்

தெந்தின தினனாத் - தினதின தினனா
தின தின் தினனாத் - தினனானா

1. திக்கிட தரிகிட கணபதி சரணம்
சீரிய யானைக் கன்றே சரணம்
2. விக்கின வினாயக கணபதி சரணம்
மைக்கரு மேனியன் மருகா சரணம்
3. வாரண மதமுள கணபதி சரணம்
அன்புடை யமரர்கள் நாதா சரணம்
4. ஆபத் துணையே கணபதி சரணம்
இண்டைச் சடைமுடி இறைவா சரணம்

மேற்படி பாடல் பாடப்பட்ட பின்னரும் முன்திரை மூடப்பட்டவாறே இருக்கும். மேடைக்குள்ளிருந்து மூன்று உரைஞர் முன்திரையைச் சற்று விலக்கிக் கொண்டு வந்து முன்மேடையில் நிற்பர். விரும்பினால் அவர்கள் பார்வையாளருக்கு வணக்கம் தெரிவிப்பதால் தவறேதும் நேர்ந்துவிடாது. பாடகர் பின்வரும் பாடலுக்கான தருவை இசைப்பர். அதையடுத்து உரைஞர் பாடலைப் பாடுவர். பாடகர் 'பிற்பாட்டைப் பாடுவர்தானே.

www.tamilarangam.net

**பாடகர் :**

தந்தனத் தான தனாதன தந்தன
தந்தனத் தானானா - தன
தந்தனத் தான தனாதன தந்தன
தந்தனத் தானானா.

**முதலாம் உரைஞர் :**

தார்க் கொன்றை போகியிளம் பிறை யாறு
தரித்த சடையவனே - உமை
சார்கின்ற பங்கனே சங்கர னேபதம்
தந்து ரெட்சித் தருளே

**இரண்டாம் உரைஞர் :**

ஏது மறியாத ஏழை கவிதை
இசைத்திட எண்ணியதால் - உந்தன்
பாதகமல மெப்போது முதவிப்
பரிந்தெனைக் காத்தருள்வாய்

**மூன்றாம் உரைஞர் :**

காத்தருளுங்கரு ணாகர ணேகம
லாசணி காவலனே - வையங்
காத்திட மாவலி தன்னை யடக்கிய
கஞ்ச மலர்க் கண்ணனே.

திரை விலகும். விலகும் திரையுடன் உரைஞரும் சேர்ந்து விலகித் தமக்குரிய இடங்களில் நிற்பர். மேடையில் ஒரு குடும்பம், அதன் உற்றார், உறவினர், அயலவர் சூழ இருக்கும். அக்குடும்பம் ஒரு தந்தை, தாய், மகன், இரு பெண் பிள்ளைகளைக் கொண்டது. வீட்டோடு இருக்கும் ஒரு மகனைவிட வேறொரு மகனும் இருப்பான், - உரைஞராக. உற்றார், உறவினர், அயலவர் வசதிபோல், பலராகவும் சிலராகவும் இருக்கலாம். ''குடும்பக்கட்டுப்பாடு'' அவர்களுக்கில்லை. இந்த மனிதர்கள் அனைவரும் ஏதோ ஒரு நிகழ்ச்சியைப் பார்ப்பதற்குக் கூடியிருப்பதுபோல், மேடைப் பின் திரைக்கு முதுகுகாட்டி இருப்பர். உரைஞர் மூவரும் ஏதோ ஒன்றை நிகழ்த்திக் காட்டும் பாவனையில் முன்மேடையில், வலது புறமாக, அவர்களைப் பார்த்தவாறு நிற்பர். உரைஞரைப் பொறுத்தவரையில் இப்போ பார்வையாளர் மேடையில்

www.tamilarangam.net

இருப்பவர்கள்தான்; மண்டபத்தில் இருப்பவர்களல்ல. முன்திரை விலகி முடிந்ததும் உரைஞர் தமது அலுவல்களைத் தொடங்கிவிடலாம். பின்வரும் பாடலுக்குரிய இயக்கங்களை நிகழ்த்திக் காட்டுவது அவசியம். உரைஞர்களே பல பாத்திரங்களையும் தம்முள் பகிர்ந்து நடிப்பது மிக அவசியம். எவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து எவ்வாறு நடிப்பதென்பது நெறியாளரின் விருப்புக்கும் வியாக்கியானத்துக்குமுரியதல்லவா? அதில் தலையிட நான் யார்?

**முதலாம் உரைஞர் :**

அருள் பெருகு குருநாடு தனியரசு புரியும்
ஐவர்நூற்றொருவரும் அரசாளும் நாளில்
பரிவிட னேசூது விளையாட வாருமென்று
பாண்டவ ருடன்துரி யோதனன் உரைக்க
சுருதிமொழி தவறாத தருமரும் அப்போ
தொல்லுலகில் ஓட்டமிட் டேசூது பொரவே
வஞ்சசகு ணிசூது தவறாய்உ றுட்டியே
மாநகரி ழந்துமட மாதைவைத் தனரே

**இரண்டாம் உரைஞர் :**

ஓதரிய துரியோதனன் தானும் அப்போ
உயர்தம்பி துச்சாத னன்தன்னை அழைத்து
மாதுடைய துகிலதனை நீர்உரியு மெல்ல
மாயவனும்அன்னேர மேமன மிரங்கி
கோதுகுழல் மாதுதுகில் உரிய உரியாமல்
கூறரிய சாபமவர் தானளித் தனரே
வேகமொடு வீமனும் தெண்டதை எடுத்தான்
வில்லரிய பார்த்தனும் வில்லெடுத் தனனே

பின்வரும் பகுதிக்காயினும் முக்கியத்துவம் கொடுத்து நிகழ்த்திக் காட்டுவது நல்லது. உ-ம். பாடலை இடைநிறுத்தி...

**மூன்றாம் உரைஞர் :**

துரியோதனன், தம்பி துச்சாதனன் தன்னை அழைத்து...

**முதலாம் உரைஞர் :**

(துரியோதனாக) மாதுடைய துகிலதனை நீர் உரியும்.

www.tamilarangam.net

- இரண்டாம் உரைஞர் பாஞ்சாலியாகப் பாவனை செய்ய மூன்றாம் உரைஞர் துச்சாதனனாகச் சென்று, துகிலினை உரிய முற்பட-

**இரண்டாம் உரைஞர் :**

(பாஞ்சாலியாக) கண்ணா! கண்ணா!! கண்ணா!!!

**பாடகர் :**

காத்தருளுங் கரு ணாகர னேகம
லாசனி காவலனே - வையங்
காத்திட மாவலி தன்னை யடக்கிய
கஞ்ச மலர்க் கண்ணனே!!
கஞ்ச மலர்க் கண்ணனே!!!
கஞ்ச மலர்க் கண்ணனே!!!!!
கஞ்ச மலர்க் கண்ணா!!!.....

"கஞ்ச மலர்க் கண்ணா" என்பது மீண்டும் மீண்டும் கூறப்படும்; துரிதகதியை அடையும்; மேடையில் உள்ள "பார்வையாளரும்" "கண்ணா!!" "கண்ணா"!! என்று உருவந்தவர்களாகக் கத்தி இயங்குவர்... ஒரு கட்டத்தில்...

**முதலாம் உரைஞர் :**

மாயவனும் அன்னேர மேமன மிரங்கி
கோதுகுழல் மாதுதுகில் உரிய உரியாமல்
கூறரிய சாபமவர் தானளித் தனரே!!!

- முதலாம் உரைஞர், கண்ணனாக நின்று அபயகரம் காட்டி ஆசீர்வதித்து நிற்கலாம். மீண்டும் "கஞ்சமலர்க் கண்ணா" ஒலி ஓங்கலாம். துச்சாதனன், கைசோர்ந்து, மெய்சோர்ந்து சரியலாம். மேடைப் "பார்வையாளர்" எல்லோரும் 'கண்ணா', 'அரோகரா' என்று கத்திப் பரவசக் கிறக்கத்தில் மெய்மறந்து நிற்கலாம். அப்பொழுது உரைஞர், தாம் தற்காலி கமாக ஏற்றிருந்த பாத்திரங்களிலிருந்து விடுபட்டுப் பார்வையாளரை (அதாவது உண்மையான பார்வையாளரை) நோக்கி...

**முதலாம் உரைஞர் :**

இது நடந்தது பாரதத்திலை

**இரண்டாம் உரைஞர் :**

பாரதம், இதிகாசம்; அது வரலாறில்லை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**மூன்றாம் உரைஞர் :**

எங்கடை வாழ்வு இதிகாசமில்லை; அது வரலாறு.

**முதலாம் உரைஞர் :**

இதிகாசத்திலை, அதாவது கதையிலை கண்ணன் வருவான்; மானங்காப்பான்.

**இரண்டாம் உரைஞர் :**

அந்தக் கதையிலும் கூட, கடைசியிலை, வில்லெடுத்த பார்த்தனுக்கே அவன் சாரதியானான்.

**மூன்றாம் உரைஞர் :**

கையிற் கதையெடுத்த வீமனுக்கே துணைபுரிந்தான்.

**முதலாம் உரைஞர் :**

தண்டெடுத்த தருமனுக்கே துணையானான்.

**இரண்டாம் உரைஞர் :**

படையெடுத்த பாண்டவர்க்கே பலமானான்.

**மூன்றாம் உரைஞர் :**

கதையிலை கூடக் கடைசியிலை அதுதான் கதியெண்டால்... வாழ்விலை!!!!!

மீண்டும் "ஓதரிய" என்ற பாடல் பாடகர் ஒருவரால் பாடப்படும். அப்பாடலின் இறுதி இரண்டு வரிகளுக்கும் அழுத்தம் கொடுக்கப்படும். அப்போது உரைஞர் இருவர் வீமனாகவும் அருச்சுனனாகவும் பாவனை செய்து உரிய நடிப்பைச் செய்வர்.

**இரண்டாம் உரைஞர் :**

கண்ணா, நீ இனிக் கண்ணனாய் வராதை அப்பு;
வாற நோக்கமிருந்தால், பார்த்தனுக்குச் சாரதியா
வா ராசா; அது போதும்.

விரும்பினால் இரண்டாம் உரைஞர், வில்லேந்தி விஜயனாக நிற்கும் உரைஞருக்கு முன்னால் நின்று தேர்க்குதிரைகளைச் செலுத்தும் பாவனையில் நிற்கலாம்.

பின்வரும் உரையாடல் நடக்கும்போது மேடையில் இருந்த

www.tamilarangam.net

குடும்பத்தில் உரியவர்கள் மட்டும் அசைந்து அடுத்த நிகழ்விற்குரிய ஆயத்தங்களைச் செய்வர். முக்கியமாக ஒரு கதிரை மேசை என்பன கொண்டுவந்து வைக்கப்படும். இரண்டாவது மகன் அதில் இருந்து படிப்பான்; பாடங்களைத்தான் -

**முதலாம் உரைஞர் :**

பாரம் பரியமாய்ப் புராணம் கேட்டுப்
பழகிவந்த பரம்பரை நாங்கள்

**இரண்டாம் உரைஞர் :**

பாரதம், இராமாயணம் கேள்விச் செவியாலை
பாடம் எங்களுக்கு

**கிழவன் :**

வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவர்க் கேற்ப நயம்பட வுரைத்த நாவும்
தாரணி மௌலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும்...
எது??...!! சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே விட்டு
வெறுங் கையோடிலங்கை புக்கான்!!
எது??...!! வெறுங்கையோடிலங்கை புக்கான்...!!!

**மூன்றாம் உரைஞர் :**

இலங்கை வேந்தர், அன்றும் இரவல் ஆயுதத்தில்தான் வீரம் புரிந்தனர்.

**கிழவன் :**

சங்கரன் கொடுத்த வாள்!!!!!

**முதலாம் உரைஞர் :**

புராண படனமா(ய்) கதாப்பிரசங்கமா(ய்) வில்லுப்பாட்டா(ய்) சப்புக்கொட்டிக் கேட்ட பழக்கம்!!

**இரண்டாம் உரைஞர் :**

ஊரிலை நடக்கிற சம்பவங்களையும் வேடிக்கை பார்த்து விசிலடிச்ச பழக்கம்.

**மூன்றாம் உரைஞர் :**

ஊர் அலுவலெல்லாம் ஊரவன்றை அலுவல்

www.tamilarangam.net

எண்டு விலத்திநிண்டு பாத்த பழக்கம்

– இவற்றை நடிகரைக் கொண்டு காட்சிப்படுத்தலாம். இதையடுத்து இவர்கள், அதாவது ஊரவர் கதைக்கின்றனர்.

**உற்றார் :**

என்ன இருந்தாலும், அவங்கள் குறிவைச்சால் தவறாது; பொட்டுத்தான்.

**உறவினர் :**

ஆர்பெத்த பிள்ளையோ!! என்ன பாடுகள் படுகிதுகளோ!!

**நண்பர் :**

நல்லவேளை, எங்கடை அயலிலை உதுகளொண்டும் இல்லை.

**சுற்றத்தார் :**

ஊரிலை, அயலிலை ஒண்டும் நடவாததாலை
தலங்காவல் பிள்ளையாருக்கு, ஆயிரத்தெட்டு மோதகம்
அவிச்சு அன்னதானமும் செய்திருக்கிறம்.

**உற்றார் :**

எல்லாம் அவன் செயல்!!

**கிழவன் :**

(தன்பாட்டுக்கு) எல்லாம் அ...வன்செயல்.

**இரண்டாம் உரைஞர் :**

"எழுதப்படாத சரித்திரம்
துயர் சூழ்ந்து
ரத்தம் சிந்திய நிலங்களின் மீது
நெல் விளைகிறது; சணல் பூக்கிறது;
மழை பெய்கிறது..."
("இரண்டாவது சூரியோதயம்" - சேரன்)

**இரண்டாம் உரைஞர் :**

"உனது வீட்டில் நெருப்பு வரும் வரை
உறங்கிக் கிடப்பாய்!
உறக்கம் கலையவும்
அவசரமாக எழுந்து வந்து

www.tamilarangam.net

காணி உறுதியைப்
பத்திரப் படுத்துவாய்...
உனது பொருட்களை
மீட்டு எடுக்கிறாய்..."

**(இரண்டாவது சூரியோதயம் - சேரன்)**

- அன்னை, படித்துக் கொண்டிருக்கும் மகனிடம் சென்று -

**அன்னை :**

உன்னைத்தான் ராசா, மலைபோல நம்பி இருக்கிறன்!

**தந்தை :**

ஓம் மோனே; நல்லாப் படிச்சு,
வடிவாப் பாஸ் பண்ணிப்போடு மோனே

**அன்னை :**

உன்னை நம்பித்தான் இந்தக் குடும்பம் இருக்குதையா;
குமர் ரெண்டு குந்தி இருக்குது.

**தந்தை :**

கொண்ணனை நம்பி மோசம் போனம்.

**அக்கா :**

குடும்பத்தின்ரை வாயிலை மண்ணைப்போட்டிட்டு
ஊர்த் துளவாரம் பாத்துத் திரியிறார்.

**அன்னை :**

குடும்பப் பொறுப்பில்லாத பிள்ளையும் ஒரு பிள்ளேயே?!

**உறவினர் :**

பேய்க்குச் சமானம்!

**கிழவன் :**

"மாடுண்டு கண்டுண்டு மக்களுண்டு என்று
மகிழ்வதெல்லாம் கேடு..."

**அன்னை :**

பெண்ணைப் பெத்தனான், அதுகளைக் கரை சேர்க்காட்டில், அடுத்த பிறவியிலை பேயாய்ப் பிறப்பனாம்!

www.tamilarangam.net

**நண்பர் :**

கன்னிகழியாப் பாவம், பேந்து விறுமசத்தி பிடிக்கும்

**சுற்றம் :**

பழிகளுக்கை எல்லாம் பெரும்பழி, குமர்ப்பழி;
பேந்து விமோசனமில்லை! விடுதலை இல்லை!!

**முதலாம் உரைஞர் :**

பெண்டு பாஞ்சாலி, அன்று விடுதலை வேண்டிப்
பஞ்சவர் தயவை நாடி நின்றாள்.

**இரண்டாம் உரைஞர் :**

பெண்டுகள் இன்று விடுதலை வேண்டிப்
பிள்ளையின் படிப்பை நம்பி நிற்கிறார்.

**இரண்டாம் உரைஞர் :**

அறிவுக்காகப் படிக்கிறதுக்கு நாங்கள்
புளிச்சலேவறைக் காரரில்லை.

**முதலாம் உரைஞர் :**

எங்களைப் பொறுத்த வரையிலை; பல்கலைப் படிப்பு, பட்டம் எல்லாம், முதலைப் பெருக்கிற மூலதனம் தான்.

**அன்னை :**

நாளைக்கு உனக்குச் சோதினை தம்பி; சன்னதியானிட்டைப் போட்டு வாறன். கடவுள் உன்னைக் கைவிடமாட்டார்.

**தந்தை :**

கிரகநிலையும் வசதியா இருக்கு; இம்முறை நிச்சயம் பாசுதானாம். இல்லையெண்டால், "தொழிலை விடுவன்", எண்டு சொல்லுறார் சாத்திரி சுப்பர்.

**கிழவன் :**

சுத்திச் சுத்திச் சுப்பற்ரை கொல்லேக்கை தான்.

**தங்கை :**

அப்பூக்கு விசர்; சும்மா புசத்திறார்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**மூன்றாம் உரைஞர் :**

எங்களைப் போல சுப்பரவை இருந்தால், சாத்திரி சுப்பரவைக்குச் "சுப்பர் மார்க்கெட்" யாவாரந்தான்.

- மேற்கூறியதைக் காட்சிப்படுத்தலாம் : -

**இரண்டாம் உரைஞர் :**

"துயரங்களின் தோழர்களே
தலையுண்ட நண்பர்களே
வாருங்கள்
என்றென்றும் தோல்வியுறா
அணி வகுத்துச் செல்வோம்
நாம் எதையும் இழக்கோம்
நமது சவப்பெட்டிகளைத் தவிர"

**(பலஸ்தீனக் கவிதைகள் - நுஃமான்)**

வேண்டுமானால் அனைவரும் சன்னதிக்கு நடக்கலாம்.

**உற்றார் :**

மெய்யே தம்பி, சன்னதிப் பக்கம்போய் வரலாமே.

**முதலாம் உரைஞர் :**

போகிட்டு வாங்கோவன், பிரச்சினை இல்லை.

**உறவினர் :**

சுன்னாகத்திலை ஏதோ கரைச்சலாம்; பெரிசாய்ச் சத்தமும் ரெண்டொண்டு கேட்டிது.

**கிழவன் :**

மூக்கிருக்கும் வரைக்கும் சளியும் இருக்கத்தான் செய்யும்.

**நண்பர் :**

கிழவன் ஏதோ புலம்புது.

**இரண்டாம் உரைஞர் :**

எங்கை அம்மான் வெளிக்கிட்டு விட்டியள்?

**சுற்றம் :**

சன்னதியானிட்டை... மெய்யே தம்பி,
சில்லாலேலை அவைக்குச் சேதங் கனக்கவே?

www.tamilarangam.net

**உற்றார் :**

சேதங்கனக்கவோ?! பத்தெண்டாலும் பிரண்டிருக்கும்
பொடியளென்ன பிசுக்கங்காயளே?!!

**கிழவன் :**

ஊராவீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே!

**உறவினர் :**

கிழவனுக்கு நல்லா அறளை பேந்து போச்சுது!

**கிழவன் :**

தன்குஞ்சு பொன்குஞ்சு எண்டு சொல்லி, உங்கடையளை
வீட்டுக்கை பூட்டி வையுங்கோ; ஊரவன்
பெத்ததுகள்ளை வீரங்கள் பறையுங்கோ.

**இரண்டாம் உரைஞர் :**

"அப்புறமாக
வெளியில் வந்து
வாசலில் நின்று
பக்கத்து வீட்டின்
சுந்தரம்பிள்ளையை, அல்லது
சண்முக சாமியை
உரத்த குரலில்
அழைத்துப் பார்ப்பாய்...
ஒன்றுமே இராது"

**(இரண்டாவது சூரியோதயம் - சேரன்)**

- மேலே உள்ளதை காட்சிப்படுத்தலாம் -

- சன்னிதியான் சன்னிதிக்கு வந்துவிட்டனர். அன்னை முன்புறம் வந்து வணங்கலாம். இறைவன் சன்னிதானம் பார்வையாளர் கூடத்துள் இருப்பதாகப் பாவிக்கலாம். ஏனையோரும் வணங்குவர் -

**அன்னை :**

சன்னதிக் கந்தா, சரணம் அப்பு!
என்ரை இளையவன் சோதினை எடுக்கிறான்.
மூத்தவனை நம்பி மோசம் போனன்.

www.tamilarangam.net

ஊருக்கு உழைக்கிறன் எண்டு அலையிறான்.
இளையவனைப் பாசுபண்ண வையப்பு.
மூட்டை அரிசி அவிச்சுப் போடுவன்.

**தந்தை :**

ஐயா, அஞ்சு ரூவாய்க்கு அரிச்சனை ஒண்டு;
உத்தராடம், உதயகுமாரன்.

**அக்கா :**

பாசெண்டு வருகுதோண்டு பூக்கட்டிப் பாப்பமே?

**அன்னை :**

இப்ப வேண்டாம். மாறிவந்தால் தம்பி, மனஞ் சோந்து போவான்.

**தந்தை :**

சோதினை முடியட்டும் பூக்கட்டிப் பாப்பம்.

**தங்கை :**

அங்கை, ஐயர் பஞ்சாலாத்தி காட்டிறார்,
இஞ்சை நீங்கள் கதைச்சுக் கொண்டு நில்லுங்கோ

**அனைவரும் :**

அரோகரா!! அரோகரா!!

**தந்தை :**

சன்னதி முருகா!!

**அன்னை :**

அன்னக் கந்தா!!

**உற்றார் :**

சண்முகவேலா!!

**அனைவரும் :**

அரோகரா!! அரோகரா!!! அரோகரா!!!

**கிழவன் :**

அப்பனே முருகா, சரவணபவனே, கார்த்திகேயா, முக்கண்ணனார் புத்திரனே, உக்கிரவேலா, அடியாரை ரெட்சிப்பாயே!!

www.tamilarangam.net

பாடகர் :

கரியதொரு விறுமனும் வைகாளி அப்பரும்
கஞ்சவீர பத்திரரும் யாப்பை வன்னியரும்
அறு அறு பூதனும் ஐயனும் காளியும்
அம்புவியு லுள்ளவோர் தெய்வமத் தனையும்
குபேரன் அறுமுகக் குமரவே லாயுதன்
குன்றுடைக் குறமகள் வள்ளிபங் காளன்
முருகன் முள்ளியவளைக் கலியாண வேலவரை
முதல்வனைச் சேவிக்க முழுதும் வந்தனரே!

**(வன்னி வள நாட்டுப்பாடல்; பக்கம் 29)**

சங்கு சேமக்கல ஒலி ஓங்கும் – "அரோகரா" ஓசையும் வானைத் தொடும். பின்னர்...

தந்தை :

இம்முறை பொயிலை நல்லா விளைய
கருணை செய்யப்பு சன்னதி அப்பா!

உற்றார் :

நானும் பொயிலை நட்டிருக்கிறன் அப்பு
என்ரை தரையிலும் கடைக்கண் வையப்பு!

அன்னை :

பொடியன் சோதினை எழுதப்போறான்;
பேனையிலை மையா ஊறி வந்து
பாசெண்டு தேற எழுதி விடப்பு!

கிழவன் :

சன்னதிக் கந்தனுக்கும் சோதினை வருகுது.

அக்கா :

சும்மா கிடவப்பு விசரலம்பாமல்!

கிழவன் :

'என் செய லாவதினி யாதொன்று மில்லைத் தெய்வமே
உன் செயலே என்று உணரப் பெற்றேன்...'

முதலாம் உரைஞர் :

நம்பிக்கை மனிசருக்கு அவசியம் வேணும்...

www.tamilarangam.net

**இரண்டாம் உரைஞர் :**

அந்த நம்பிக்கை தன்னம்பிக்கையை வளர்க்கிறதா இருக்க வேணும்..

**மூன்றாம் உரைஞர் :**

என்னாலை ஆகக்கூடியது ஒண்டுமில்லை,
எல்லாம் உன்னாலைதான் ஆக வேணும்...

**முதலாம் உரைஞர் :**

எண்டு எல்லாத்துக்கும் ஆரையும் நம்பி
ஆற்றை கையையும் பாத்திருக்க ஏலுமே?!

– விபூதி, சந்தணம், தீர்த்தம், வேறுபிரசாதம் கொடுக்கப்படலாம்–

**கிழவன் :**

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம்.

**இரண்டாம் உரைஞர் :**

கோயிலையே நம்பிக் குடியிருக்கப் பார்க்கிறம்.

**மூன்றாம் உரைஞர் :**

கடவுளாய் எல்லாரையும் நம்பி இருக்கிறம்

**கிழவன் :**

தன் கையே தனக்குதவி

**முதலாம் உரைஞர் :**

எங்கடை முயற்சியிலை எங்களுக்கே நம்பிக்கை இல்லை.

**இரண்டாம் உரைஞர் :**

சப்பாணி கட்டிச் சும்மா இருக்கிறம்.

**மூன்றாம் உரைஞர் :**

கூரையைப் பொத்துத் தாறவை தருவினை
எண்ட நினைப்பிலை குந்தி இருக்கிறம்

**கிழவன் :**

குடுக்கிற கடவுள் கூரையைப் பிச்சுக்கொண்டு குடுப்பார்.

**தங்கை :**

பீரங்கிச் சன்னம் கூரையைப் பிக்குது!

www.tamilarangam.net

**கிழவன் :**

குடுக்கிறவன் குடுக்கிறான் கையேந்தி வேண்டுங்கோ
"ஆண்டவன்" குடுக்கிறான் அண்ணாந்து வேண்டுங்கோ
- உரிய அசைவுகள் இயக்கங்கள் புரியலாம் -

**முதலாம் உரைஞர் :**

சீன வெடிக்குப் பறக்கிற காகங்களா(ய்) சில்லறைச் சத்தத்திற்கெல்லாம் சிதறி ஓடுறம்.

**இரண்டாம் உரைஞர் :**

சந்தடி குறைய, பதுங்கிப் பதுங்கித் திரும்பவும் கூடுறம்.

**கிழவன் :**

"தந்தை, தாய், தமர், தாரம், மகவெனினும் இவையெலாம் சந்தையில் கூட்டம்..."

**மூன்றாம் உரைஞர் :**

என்ரை காணி!

**முதலாம் உரைஞர் :**

என்ரை நிலம்!

**இரண்டாம் உரைஞர் :**

என்ரை பிள்ளை!

**மூன்றாம் உரைஞர் :**

என்ரை சொத்து!

**முதலாம் உரைஞர் :**

எண்ட நினைப்பு மட்டுமே உண்டு.

**இரண்டாம் உரைஞர் :**

எங்கடை ஊர்!

**மூன்றாம் உரைஞர் :**

எங்கடை தேசம்!

**இரண்டாம் உரைஞர் :**

எங்கடை மண்!

www.tamilarangam.net

**மூன்றாம் உரைஞர் :**

எங்கடை நிலம்

**முதலாம் உரைஞர் :**

எண்ட விஷயங்களை ஆரும் பாப்பினை.

**இரண்டாம் உரைஞர் :**

நாங்கள் நோகாமல் இருந்து கொள்ளுவம்.

**மூன்றாம் உரைஞர் :**

ரெண்டு கையையும் ஏந்தி வேண்டுவம்.

**முதலாம் உரைஞர் :**

எண்ட நினைப்பிலை இருக்கப் பாக்கிறம்.

**உறவினர் :**

தம்பி இப்ப நேரமென்ன?

**முதலாம் உரைஞர் :**

அஞ்சரை ஆகுது.

**கிழவன் :**

ஆறுக்கு முன்னம் அடங்கிவிட வேணும்.
அரை நிமிஷம் தவறினால் ஐம்புலனும் அடக்கும்,
கூட்டோடை கைலாயம், தெருவிலை சாம்பல்!

**நண்பர் :**

என்ன இடி எங்கை விழுந்தாலும் ஆறரை மணிக்கு நான் வீட்டை நிப்பன்.

**சுற்றம் :**

அதுக்கிடையிலை பசிச்சுப் போடுமே?

**அக்கா :**

கோழி மரத்திலை ஏறுமுன்னர் சாப்பிட்டு விடுவியளே?

**நண்பர் :**

பசியுமில்லைக் கிசியுமில்லை!

**சுற்றம் :**

பின்னை

www.tamilarangam.net

**நண்பர் :**

செய்தி கேக்க; மாநிலச் செய்தி கேக்க வேணும்.

**கிழவன் :**

அடியடா படலேலை எண்டானாம்!
'மாநிலச் செய்தி' மூலம் அந்த ஆட்சி இஞ்ச வந்திடுமெண்டு,
வாயைப் பிளந்து வடக்கை பாக்கிற கூட்டம்.

**இரண்டாம் உரைஞர் :**

உலகச் செய்திகள் கேக்கத்தான் வேணும்

**மூன்றாம் உரைஞர் :**

கேக்கிற தோடை நிண்டுவிடக் கூடாது.

**உற்றார் :**

கேக்கிறதோடை நிண்டுவிடுகிறதோ?!
நாலு பேருக்கதைச் சொல்லாமல் விட்டால்
அவருக்கு நித்திரை வராது; திண்டது செமியாது.

**முதலாம் உரைஞர் :**

கேட்ட செய்தியை நாலு பேரோடை கலந்து பேசிறது அறிவுக்கு நல்லது.

**இரண்டாம் உரைஞர் :**

ஆனால், அதோடை நில்லாமல், நாங்களும் நாலைச்செய்து, செய்தி படைக்க முன்னுக்கு வரவேணும்.

**உறவினர் :**

நீங்கள் படையுங்கோ எங்களுக்கு உதுகளுக்கு நேரமில்லை.

**நண்பர் :**

எங்கடை ஆசிகள் நிறைய இருக்கு... ஆனால் ஒண்டு, மாநிலச் செய்தியிலை விஷயமிருக்கு.

**சுற்றம் :**

அதிலைதான் விஷயமிருக்கு; இல்லையெண்டால் விமோசனமில்லை

www.tamilarangam.net

**கிழவன் :**

அரிச்சனைத் தட்டை ஐயா தாறார்; ரெண்டு கையாலையும் ஏந்திக் கொள்ளுங்கோ... மாநிலச்செய்தி அதிலும் இருக்கும்... ஆசீர்வதிச்ச அரிச்சனைச் சாமான்.

**உற்றார் :**

கும்பிட்டது காணுமினி, வாருங்கோ போவம்.

**தந்தை :**

ஓமோம், நேரமாகுது போவம், போவம்...

**தங்கை :**

ஊரடங்கிவிட்டுதப்பு; எட்டி நடவுங்கோ.

**அன்னை :**

முருகா, போகிட்டு வாறனப்பு; என்ரை பிள்ளையை மறந்திடாதை.

**உறவினர் :**

எட்டி நடவுங்கோ; காத்தாடிக்கப்பல் பனைவட்டுக்கு மேலை உறுமிக் கேக்குது.

**தங்கை :**

இண்டைக் கேதுங் கரைச்சலோ?! நேரத்தோடை பறக்கத் துவங்கிவிட்டினை!

**நண்பர் :**

ஓடி நடவுங்கோ; செய்திக்கு நேரமாகுது!

**கிழவன் :**

கண்டறியாத செய்தியைக் கண்டிட்டார்.

(வீதியோரத்தில் ஒண்டுக்கிருந்து எழுந்து) எடேய், வடக்கை வானம் வெளுக்கு மெண்டு புடுக்கைச் சொறிஞ்சு பாத்துக்கொண்டு நில்லுங்கோ பேப்ப்ப்... எனக்கு வாற ஆத்திரத்துக்கு...!...

**அக்கா :**

கிழவனுக்கு நல்லா அறளை பேந்து போச்சுது.

**சுற்றம் :**

கோயிலாலை வரேக்கை பேசிற பேச்சே உது.

www.tamilarangam.net

மூன்றாம் உரைஞர் :

"ஆண்டாண்டு காலமாய், அடித்து நொறுக்கிச் சிதறப்பட்ட மக்களாய் வாழ்ந்தோம்"

முதலாம் உரைஞர் :

"பெருந்தன்மையும் வீரமும் மிக்க மக்களே நாங்கள்"

இரண்டாம் உரைஞர் :

"அனைத்துக் காதலும் பெறுவதற்குரிய அருகதை முழுமையாய் உடையவர் நாங்கள்"

மூன்றாம் உரைஞர் :

"நட்புடன் வாழ நாங்கள் செய்யும் கடைசி முயற்சி இதுவேயாகும்"

முதலாம் உரைஞர் :

"ஒரு புது ஒழுக்கம் உருவாக்குமாறு உலகிடம் நாங்கள் விண்ணப்பம் செய்கிறோம்"

பாடகர் :

"ஓ நாய்களாக, வேட்டைப் பறவையாய்
ஒவ்வொரு நாளும் பலியிடப் படுகிற
ஆட்டுக் கடாக்களாய்
கணிக்கப் படுவதை நாங்கள் வெறுக்கிறோம்"

முதலாம் உரைஞர் :

"எமது இளைஞரின் எமது பெண்களின்"

இரண்டாம் உரைஞர் :

"எமது சிறார்களின் வேண்டுதல் எல்லாம்"

மூன்றாம் உரைஞர் :

"உமது நெஞ்சினை உலுப்பவே இல்லை!'

**(பலஸ்தீனக் கவிதைகள்)**

உரைஞர் :

அதனால்...

"துப்பாக்கி முழக்கம் சொற்களை விடவும் உரத்துப் பேசின"

**(பலஸ்தீனக் கவிதைகள்)**

www.tamilarangam.net

**கிழவன் :**

அதுதானே இப்ப எங்கும் வடிவாய்ப் பேசுது!

**உற்றார் :**

காடு வா, வா எண்ணுது, கிழவன்றை வாய்க்கொழுப்பு!

**கிழவன் :**

எடேய், இண்டைக்கு ஊரிலை காடென்ன காடு, வீடென்ன வீட்டா? காடு, வீடு, வயல்வெளி, தெருவீதியெல்லாம், சாம்பல் பூத்த சுடுகாடாத்தானே கிடக்குது... வெய்யில் கொழுத்திக் கொள்ளிவைக்க, சோனாவாரி பொழிஞ்சு காடாத்துது.

(இதற்கிடையில் அவர்கள் ஊர்வந்து சேருகிறார்கள்)

**தந்தை :**

கடவுள் காத்தது, வீடுவந்து சேந்தது.

**கிழவன் :**

அடேய், வீடுவந்து, சேர இல்லையடா, நாங்கள்தான் வீட்டைவந்து சேந்திருக்கிறம். சும்மா இருக்க எதுவும் வராதடா, பாடுபட்டால்தான் பட்டத்துக்கிருக்கலாம்.

**அன்னை :**

விடு, விடு உன்ரை தொலுக்காரிப்புக் காணும்.

**நண்பர் :**

இஞ்சை விடுங்கோ, செய்திக்கு நேரமாப் போச்சுது.

(அவர் அவசர அவசரமாகச் சென்று ஒரு உரைஞரின் செவியை முறுக்க, உரைஞர் "கர் புர்ர்ர்...கூ...ஊ..." என்று வானொலிப்பெட்டி போன்று ஓசை ஒலியெலாம் எழுப்புகிறார்... கிழவன் அதைக் கூர்ந்து பார்த்து விட்டு...

**கிழவன் :**

ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலாம் ஆனாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே

www.tamilarangam.net

பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதி

**நண்பர் :**

அப்பு குளறாதை! செய்தி துவங்கப் போகுது "திரிச்சீலை" விட்டிட்டன்.

**கிழவன் :**

காதுக்கையும் திரிச்சீலை விட்டுக் குடைஞ்செடு!
ஆற்றையும் கையிலை குடுமியைக் குடுத்திட்டுத்,
தலையைக் குனிஞ்சுகொண்டு நிக்கிற சனியன்கள்.

**சுற்றம் :**

அலட்டாதை அப்பு!!!!!

(முதலாம் உரைஞர் "ரேடியோ"வாகப் பாவனை செய்து செய்தி சொல்லுதல்)

**முதலாம் உரைஞர் :**

ஆல் இந்தியா ரேடியோ, மாநிலச் செய்திகள் வாசிப்பது சுவாமிநாதன்.

போபால் எரிவரயுக் கம்பெனி விபத்தை விசாரணை செய்ய மத்திய அரசு ஒரு உயர்மட்டக் கமிஷனை அமைத்துள்ளது

(வானொலி கேட்போர் முகங்களில் அவ்வளவு திருப்தி இல்லை. அவர்கள் எதிர்பார்க்கும் செய்தியில்லை இது)

மறைந்த பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தியின் அஸ்தி இமய மலை முகடுகளில் தூவப்பட்டது.

(வானொலி கேட்போருக்கு மேலும் அதிருப்தி)

மத்திய மாநில அரசுகளுக்கிடையில் உறவு பலப்படுத்தப்பட வேண்டுமென்று உள்துறை 'ஸ்டேட் மந்திரி' கூறியுள்ளார்.

(வானொலி கேட்போருக்கு மிகுந்த எரிச்சல் ஏற்படுகிறது)

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான...

**சிலர் :**

(மிகுந்த ஆர்வத்துடன்) ஆ!!!...

www.tamilarangam.net

(அவர்கள் செவிகளைக் கூர்மைப் படுத்திக்கொண்டு கேட்கின்றனர்)

**முதலாம் உரைஞர் :**

மூன்றுநாள் "டெஸ்ட் கிறிக்கெற்" போட்டி இன்று சென்னையில் ஆரம்பமானது.

**நண்பர் :**

கண்டறியாத கிறிக்கெற்!

**முதலாம் உரைஞர் :**

போபால் எரிவாயுக் கம்பெனி விபத்தை விசாரணை செய்...

(நண்பர் எரிச்சலோடு 'ரேடியோவை' உடனே நிறுத்திவிட்டு)

**நண்பர் :**

இவங்களும் இப்ப சேந்து விளையாடுறாங்கள்.

**கிழவன் :**

(கிண்டலாக) என்ன, 'கிறிக்கெட்டோ'?!

**சுற்றம் :**

நீ சும்மா அலட்டாதை!!

**கிழவன் :**

எடேய், வெள்ளைக்காரப் புலவர் ஒருத்தர் இருந்தவராம். அவரிட்டை ஆரோ ஒருத்தன் போய் "கிறிக்கெற்" எண்டால் என்ன எண்டு கேட்டானாம்...

**தம்பி :**

கேக்க?!

**தந்தை :**

நீ படியடா!!! நாளைக்குச் சோதினை; இஞ்சை வாயை ஆவெண்ணுறா(ய்)!!

**கிழவன் :**

கேக்க, அவர் சொன்னாராம்...' பதினொரு பெடியள் விளையாட, பதினோராயிரம் பேயர் சுத்திவர நிண்டு வேடிக்கை பாக்கிற விளையாட்டுத்தான் அது எண்டு.

www.tamilarangam.net

**தங்கை :**

அவர் அப்பிடிச் சொன்னதுக்கு இப்ப என்னணை அப்பு?

**கிழவன் :**

நாங்கள் அப்பிடித்தான் எப்பவும் ஆரும் பெடியள் விளையாடட்டும்; நாங்கள் விலத்திநிண்டு, நெஞ்சிலை நோகாமல், விசில் அடிச்சுக் "கீக்கிப்புறே" சொல்லக் காத்துக் கொண்டு நிக்கிறம்.

**தந்தை :**

உந்த விடுகதையளை விட்டுட்டு, சோத்தைக் கொண்டாருங்கோடியாத்தை, திண்டுட்டுப் படுப்பம்.

**உற்றார் :**

தோட்டத்துக் கிறைக்கிற மிசினுக்கே மண்ணெண்ணைத் தட்டுப்பாடு. இந்த வள்ளல்லை விளக்கெரிச்சேன் வீணாக்குவான்... நீயும் கொண்டாணை சோத்தை.

(அனைவரும் உண்கின்றனர். உற்றார், உறவினர், நண்பர், சுற்றத்தார் தத்தம் மனைகளில் உணவு உண்பதாகக் காட்சி தொடரலாம். படிக்கும் மகனுக்கு அன்னை குழைத்துக் கொடுக்க, அவன் உணவை உண்டவாறு படிக்கிறான். உரைஞரும் குடும்பங்களோடு உண்கின்றனர் இவை நிகழும்போது பின்வரும் பாடல் பாடப்படும்)

**பாடகர் :**

கோயிலென்ற கோயிலெல்லாம் கும்பிட்ட நாங்கள்
குஞ்சுதர வேணுமென்று நாங்கள் நின்றோமே
சொல்லமுடி யாதுதுயர் நாங்கள்பட்ட பாடுகளால்
சோபனங்கள் சொல்லிப்பசி யாறுங்கோ மக்காள்

**உறவினர் :**

தம்பி வடிவாச் சாப்பிட வேணும். இந்த ஒரு விஷயத்திலை எவரும் வெக்கப்படக்கூடாது.

**முதலாம் உரைஞர் :**

இல்லைப் போதும் அம்மான்.

**கிழவன் :**

போதுமெண்ட மனமே பொன்செய்யும் மருந்து

www.tamilarangam.net

அதுக்காகப் பாடுபடாமல் 'சிவனே' எண்டிட்டுச் சும்மா இருக்கிறதல்ல.

**தந்தை :**

என்ன, அதுக்கிடையிலை எழும்பி விட்டீர்?!

**இரண்டாம் உரைஞர் :**

எனக்கு நல்லாப் போதும்.

**அன்னை :**

சாப்பிட்ட மட்டுக்குத்தான் தைரியம்... இதையும் தின்ராசா

**தம்பி :**

எனக்குப் போதும்.

**அக்கா :**

அண்ணை என்ன போட?

**மூன்றாம் உரைஞர் :**

குழம்பிலை கொஞ்சம் விடு;...,.... போதும்.

**கிழவன் :**

எங்கடை பாடும் வெள்ளாமையள் பிழைக்குது. அட்டமத்தான் எட்டிப் பாக்கிறான். ஏதோ ஊரோடை ஒத்ததுதானே எல்லாருக்கும்.

(அனைவரும் படுக்கைக்கு ஆயத்தமாகிறார்கள் தம்பி தொடர்ந்து படிக்கிறான். உரைஞர் மெதுவாக முன்மேடைக்கு வருகின்றார்கள்)

**பாடகர் :**

சோபஞ்சோ பனமெங்கள் துய்யமக்க ளேநீங்கள்
சோபனங்கள் சொல்லிவிழி துஞ்சுங்கோ மக்காள்
துஞ்சியகண் தூங்கமுன்னம் கொண்டிவரைக் கொண்டுவந்தோம்
சோபனங்கள் சொல்லிவிழி துஞ்சுங்கோ மக்காள்

**அன்னை :**

தம்பி, கோப்பி கொஞ்சம் சுடச்சுடத் தரட்டே?

**தம்பி :**

வேண்டாமம்மா, நீங்கள் படுங்கோ; நான் கொஞ்சம் பொறுத்துப் படுக்கிறன்.

www.tamilarangam.net

(அன்னை, ஏற்கனவே படுத்திருக்கும் தன் மகளின் போர்வையைச் சரிசெய்துவிட்டுத் தன் முந்தானையை விரித்துப் படுத்துக் கொள்கிறாள்)

**முதலாம் உரைஞர் :**

இதிலை இப்ப படுத்திருக்கிறவை வானத்தாலை இறங்கின மனிசரல்ல.

**இரண்டாம் உரைஞர் :**

அவை எங்கடை குடும்பம், உற்றார், உறவினர், நண்பர், சுற்றத்தார்.

**மூன்றாம் உரைஞர் :**

"உற்றார், உறவினர், நண்பர், குடும்பத்தார், சுற்றம் சூழ வந்து ஆசீர்வதித்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்'' எண்டு அழைப்பிதழ்கள்ளை போடுவம்.

**முதலாம் உரைஞர் :**

அந்த அழைப்பைத்தான் இப்பவும் விடுகிறம்; இந்தக் குடும்பத்துக்கும், அதன் உற்றார், உறவினர், நண்பர், சுற்றத்தார்க்கும்.

**இரண்டாம் உரைஞர் :**

எங்கடை இந்தக் குடும்பமும் சுற்றமும் இப்ப நித்திரையா(ய்)க் கிடக்கிது. சிலர் விழிப்பாயும் இருக்கினை.

**மூன்றாம் உரைஞர் :**

நீங்களும் சிலர் இருட்டுக்கை நித்திரையாய் இருப்பியள்.

**முதலாம் உரைஞர் :**

மேடையிலை, உங்களுக்கு முன்னாலை, ஒரு நாடகம் நடக்குது எண்ட நினைப்பிலை, ஓரளவு அன்னியமா இருந்து பாத்துக் கொண்டிருப்பியள்.

**இரண்டாம் உரைஞர் :**

ஒரு சிலர், "இது எங்கடை பிரச்சினை", எண்ட உணர்வோடை, சுற்றம் சூழ உள்ள இந்த குடும்பத்தோடை கலந்தும் இருப்பியள்.

(இப்பொழுது படித்துக் களைத்த தம்பி இருந்த இரையில் சோம்பல் முறித்துப் பெரிதாகக் கொட்டாவி விடுகிறான்).

**மூன்றாம் உரைஞர் :**

அங்கை பாருங்கோ அந்தப் பெடியனை.

www.tamilarangam.net

**முதலாம் உரைஞர் :**

நாய்படாப் பாடுபட்டுப் படிக்கிறான்.

**இரண்டாம் உரைஞர் :**

குருஷேத்திரக் களத்தின்ரை நடுமையத்திலை ஒற்றைக் காலிலை நிண்டு கடுந்தவஞ் செய்யத் தெண்டிக்கிறான்.

**மூன்றாம் உரைஞர் :**

மனம் ஒடுங்கிச்சுதோ!? தவம் பலிக்குமோ?? வரம் கிடைக்குமோ?!

**முதலாம் உரைஞர் :**

ஆர் அறிவார்?!

(தம்பி இவர்களை நோக்கி எழுந்து வந்து)

**தம்பி :**

நான் இந்தமுறை வடிவா(ய்)ச் சோதினை எழுதுவனெண்டு நினைக்க இல்லை.

**இரண்டாம் உரைஞர் :**

ஏன் தம்பி?

**தம்பி :**

வாழுற சூழல்லை இருந்து விடுபட்டு அன்னியப்பட்டு இருக்கிறதுக்கு, நான் முற்றும் துறந்த முனிவனில்லை.

**மூன்றாம் உரைஞர் :**

முற்றுந் துறக்கிற முனிவர்மார் சூழல்லை இருந்து கொண்டல்ல எல்லாத்தையும் துறக்கிறவை.

**முதலாம் உரைஞர் :**

அவை மனிச சமூகத்தை விட்டுக் காட்டுக்குப் போறவை.

**இரண்டாம் உரைஞர் :**

இப்பவும் எங்கள் மத்தியிலை, முனிவர்மார் மலிஞ்சு போச்சினை.

**மூன்றாம் உரைஞர் :**

ஓம், இப்பத்தே முனிகள், தவமிருந்து வரம் வேண்ட வெளிநாடு போகுதுகள்.

www.tamilarangam.net

**முதலாம் உரைஞர் :**

தாங்கள் வாழுற சமூகத்தை விட்டு, சனத்தை விட்டு, பிரச்சினைகளை விட்டு, தங்கடை தங்கடை தனித்தனி ஈடேற்றத்துக்காக...

**இரண்டாம் உரைஞர் :**

இல்லை அது ஈடேற்ற மில்லை; அப்பிடி அவை நினைச்சுக் கொண்டு வெளிநாடுகளுக்குப் பறக்கினை.

**மூன்றாம் உரைஞர் :**

எத்தினை வகையான பறப் பிராந்துகள் ?! காகக் கூட்டங்கள்!

**முதலாம் உரைஞர் :**

எத்தினை வகையான பறப்புக்கள், தினிசுகள்?!

**உரைஞர் :**

எத்தினை வகையான பறப்புக்கள், தினிசுகள்?!

(இச்சந்தர்ப்பத்தில் பெரிய அல்லோல கல்லோலமான பயங்கரச் சத்தங்கள், ஓலங்கள், ஒலிகள், அவலக்குரல்கள் எழுகின்றன. மேடையில் துயின்று கிடந்த அனைவரும், உரைஞரும் இந்த அவலத்துள் அகப்பட்டு மாய்வர். இதில் சிலர் தாக்குபவராகவும் ஏனையோர் தாக்கப்படுபவராகவும் செய்து காட்டுவர். தந்தை, உற்றார், உறவினர் சுற்றம் யாவரும் வீழ்ந்து மடியலாம். சிலர் வெளிநாடு செல்பவராக, வீழ்ந்து கிடக்கும் பிணங்களைக் கடந்து செல்வர். இந்த மயான பூமியில் பின்வரும் சோகப்பாடலும் ஒப்பாரியும் எழுகின்றன)

**கிழவன் :**

"இனிப்பட முடியாது இத்துயரம்
பட்டதெல்லாம் போதும், அப்பா..."

**அன்னை :**

"முத்துப் பதித்த முகம்
முதலிமார் மதித்த முகம்
தங்கம் பதித்த முகம்
தரணிமார் மதித்த முகம்
முந்நூறு வேதியர் முன் - எனக்கு
முகூர்த்த மிட்ட மங்கிலியம்
மூவர் சபையிலேயே - நீர்
முறித்தெறிந்தும் போனீரோ!

www.tamilarangam.net

**நண்பர் :**

தம்பி, பேப்பரிலை நேற்றேப் புதினம் வடிவா வந்திருக்கோ?

**தம்பி :**

கனபேர் செத்ததாப் போட்டிருக்கு.

**நண்பர் :**

எங்கடை ஆக்கள் செத்ததும் போட்டிருக்கே?

**தம்பி :**

ஓம் எல்லாம் விபரமாப் போட்டிருக்கு.

**நண்பர் :**

அப்பப் பேந்தென்ன, ஊரிலை உள்ள காசுக்காரருக்குக் கொண்டாட்டந்தான்.

**கிழவன் :**

நெய்க்குடம் உடைஞ்சால் நரிக்கு வேட்டை;
மனிசர் செத்தால் 'கழுகுகளுக்கு' வேட்டை;
பேந்தென்ன, 'திருக்கழுக்குன்றந்தான்.

(பாடகர் ஒருவர் எழுந்தோடி வந்து)

**பாடகர் :**

அண்ணை நீங்கள் வாசிக்கிற 'இங்கிலிஸ்' பேப்பரிலை உயிர்ச் சேதங்கள் பற்றி விபரமாப் போட்டிருக்கே?

**முதலாம் உரைஞர் :**

இல்லைத்தம்பி, தமிழ்ப் பேப்பரிலைதான் இருக்கு.

**இரண்டாம் உரைஞர் :**

ஏன் தம்பி கேக்கிறீர்?

**பாடகர் :**

'பேப்பர் கட்டிங்ஸ்' எடுக்க. "இங்கிலிஸ்" பேப்பர் எண்டால் நல்லது, இனி என்ன் செய்யிறது தமிழ்ழை உள்ளதையாவது வெட்டி எடுப்பம்.

(பாடகர் திரும்பத் தமது இடத்துக்குச் செல்கிறார்)

**தம்பி :**

உவை ஏன் இந்தப் புதினத்திலை உவ்வளவு அக்கறையா இருக்கினை?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிழவன் :

சோளியன் குடுமி சும்மா ஆடுமே?
செத்த பிணங்களை விக்கிற சீவன்கள்!

மூன்றாம் உரைஞர் :

உவைதான் வெளிநாடு பறக்கிற, முற்றுந்
துறந்த நவீன முனிகள்

முதலாம் உரைஞர் :

அயலவை, சகோதரங்கள் அவலமாச் செத்தால்,

இரண்டாம் உரைஞர் :

அந்த விபரங்கள் பேப்பரிலை வந்தால் - அதுவும் இங்கிலிஸ் பேப்பர் எண்டால் வெளிநாட்டவனுக்கு விளங்கும் சுகமா.

மூன்றாம் உரைஞர் :

அதைக்காட்டித் தாங்கள் வெளிநாடுகள்ளை அகதிகள் முகாங்கள்ளை இருந்து, பிச்சைக்காசு எடுக்க வசதி எண்டு கருதிற கூட்டம்.

தம்பி :

ஊரவன் சாக, அதைப் பயன்படுத்தி உயர்ர கூட்டம்.

கிழவன் :

கொஞ்சம் கொஞ்சமா ஆக்கள் சாகிறதிலை
உவைக்கு வேலை இல்லை . கூட்டோடை
கயிலாயம் கனபேர் போகவேணும். அப்பதான்
அவங்களுக்குக் கொண்டாட்டம்.

பாடகர் :

"இஞ்சிக்கு ஏலம் கொண்டாட்டம்
அந்த எலுமிச்சம் பழத்திற்குப் புளிப்புக் கொண்டாட்டம்
கஞ்சிக்குக் களனி கொண்டாட்டம்
அந்தக் கடைகெட்ட மூளிக்குக் கோபம் கொண்டாட்டம்.

(மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள்)

கிழவன் :

காடைக்குக் கலகம் கொண்டாட்டம் - இந்தக்
கடைகெட்ட நாய்களுக்கு மரணம் கொண்டாட்டம்.

www.tamilarangam.net

**முதலாம் உரைஞர் :**

1983 யூலாய்க் கலவரம் ஆரைப் பாதிச்சிது?
ஏழைத் தமிழரை, பணக்காரத் தமிழரை அல்ல.

**இரண்டாம் உரைஞர் :**

காசுக் காரத் தமிழ்ரெல்லாம் அதைச் சாட்டா வச்சு
சென்னையிலை சுகமா குடியும் குடித்தனமுமா இருக்கினை.

**மூன்றாம் உரைஞர் :**

அவையின்றை பிள்ளையள் அங்கை "பிளஸ் ட்டு" +2 தொடக்கம 'மெடிசின்', 'எஞ்சினியரிங்' வரை செய்யினை

**தம்பி :**

ஏழையள் நாங்கள் அங்கை போக ஏலுமே?

**கிழவன் :**

முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படக்கூடாது.

**முதலாம் உரைஞர் :**

தம்பி, இதைச் சாட்டா வச்சு, வெளிநாட்டிற்கு நாங்கள் போறது சரியே?

**இரண்டாம் உரைஞர் :**

அப்பிடிப் போறதாலை எங்கடை பிரச்சினைகள் தீர்ந்து போகுமே?

**மூன்றாம் உரைஞர் :**

நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது இஞ்சை நிண்டுதான் ஆகவேணும்.

**தம்பி :**

அவைக்கு வேறை வழி இல்லை.

**முதலாம் உரைஞர் :**

"வேறை வழி இல்லை" எண்டதல்ல ஞாயம். சரியான வழி எது எண்டதுதான் கேள்வி.

**கிழவன் :**

செட்டை கட்டிப் பரதேசம் பறக்கிற பணக்காரனைத் தடுக்கப் பரமசிவனாலும் முடியாது.

www.tamilarangam.net

**இரண்டாம் உரைஞர் :**

பணக்காரன் எண்டொரு இனம் இருக்கும் வரைதானே அவன் எப்பவும் தன் கருமத்தையே முடிக்க நினைப்பான்.

**மூன்றாம் உரைஞர் :**

அவனைப்பாத்து அரை குறையளும் வெளிநாடு போகிட்டால் தங்கடை பிரச்சினையள் தீர்ந்துபோய் விடுமெண்டு...

**முதலாம் உரைஞர் :**

உலகத்து அகதிகள் முகாம்களை நிரப்பி வருகுதுகள்.

**இரண்டாம் உரைஞர் :**

அங்கை பிச்சையாய்க் கிள்ளிப் போடுறதை
இஞ்சை "டிராப்ட்டா" அனுப்புதுகள்.

**மூன்றாம் உரைஞர் :**

போதை வஸ்துக்களைக் கடத்திக்குடுத்து, மானங்கெட்ட உழைப்பு உழைக்குதுகள்.

**தம்பி :**

நீங்கள் சொல்லுறது எனக்கு ஏதோ ஒரு அளவுக்கு விளங்குது.

**முதலாம் உரைஞர் :**

முழு விளக்கம் வரும்வரை, நீ இந்தச் சூழ்நிலையிலை படிக்கக் கூடியவரை படி தம்பி.

**தம்பி :**

ஆனால் ஐயா, அம்மாதான் சரியா மனக்கஷ்டப்படுகினை.

**கிழவன் :**

அன்னையும் பிதாவும் பின்னடிக் கிடைஞ்சல்.

விடியப் போகுது: எல்லாரும் குறட்டைப் போட்டியிலை நிக்கிறியள். டேய்!... எழும்புங்கோடா... தோட்டத்துக்கு, வயலுக்குப் போறதில்லையே!...

(தம்பி மேசை அருகால் உள்ளே செல்கிறான் எல்லோரும் துயில் எழுகின்றனர்)

**மூன்றாம் உரைஞர் :**

நான் ஐயாவுக்குத் தோட்டத்திலை உதவி செய்து போட்டு வாறன்.

www.tamilarangam.net

(அனைவரும் எழுந்து தம் கருமம் முடித்து, தோட்டத்தில் வேலை செய்கிறார்கள். கூட்டாகப் பல வேலைகளைப் புரிகிறார்கள். ஏனைய உரைஞரும் இவர்களோடு இணைந்து வேலை செய்வதில் குற்றமில்லை; நன்மையே விளையும். இவ்வேலைகளின் பின்னணியில் பாடல்கள்; அதற்கேற்ப நிகழ்த்திக் காட்டல்களும் இடையிடையே)

பாடகர் :

பூமியை நம்பி புத்திரரைத் தேடி வந்தோம்,
பூமி பலியெடுக்க புத்திரர் பரதேசம்
மானத்தை நம்பி மக்களைத் தேடி வந்தோம்
மானம் பலியெடுக்க மக்களெல்லாம் பரதேசம்
ஏர்பிடிக்கும் தம்பியெல்லாம் பின்னப்பட்டு நிக்கிறாங்க
அந்தக் குறை கேட்டு வந்திறங்கு வர்ணதேவா
மேழி பிடிக்கும் தம்பியெல்லாம் முகம் சோர்ந்து நிக்கிறாங்க
அந்தக் குறை கேட்டு வந்திறங்கு வர்ணதேவா
மேழி பிடிக்கும் தம்பியெல்லாம் முகம் சோர்ந்து நிக்கிறாங்க
அந்தக் குறை கேட்டு வந்திறங்கு வர்ணதேவா
மேழி பிடிக்கும் தம்பியெல்லாம் முகம் சோர்ந்து நிக்கிறாங்க
அந்தக் குறை கேட்டு வந்திறங்கு வர்ணதேவா,
காட்டுத் தழை பறித்துக் கையெல்லாம் கொப்புளங்கள்
கடிமழை பெய்யவில்லை கொப்புளங்கள் ஆறவில்லை
வேலித்தழை பறித்து விரலெல்லாம் கொப்புளங்கள்
விரைந்து மழை பெய்யவில்லை வருத்தங்கள் தீரவில்லை
மானம் விடிவதெப்போ, எங்க நாட்டுப்பஞ்சம் தீர்வதெப்போ?
ஓடி விதைச்ச நெல்லு ஐயோ! வருணதேவா வீடுவந்து சேரவில்லை!
பாடி விதைச்ச நெல்லு ஐயோ! வருணதேவா பானை வந்து சேரவில்லை.

www.tamilarangam.net

பாடகர் :

வானத்தை நம்பியல்லோ மக்களைத் தேடிவந்தோம்
மானம் பலியெடுக்க மக்கள் பரதேசம்
மன்னரெல்லாம் தன்நாசம்
பூமி பலியெடுக்க புத்திரர் பரதேசம் - புண்ணியரும் தன்னாசம்
சோறு சோறு என்று சொலலித் துள்ளுது பாலரெல்லாம்
அன்னம் அன்னம் என்று சொல்லி அழுகுது பாலரெல்லாம்
கோடை அழியவேணும், கொள்ளை மழை பெய்யவேணும்,
மாவு கொதிக்கவேணும் - குழந்தை பசியாற வேணும்
பூமி விளையவேணும், புள்ள பசியாற வேணும்.

**(தமிழர் நாட்டுப்பாடல்)**

தந்தை :

நாலு தலைமுறையா இந்த மூண்டு பரப்புக் காணியை
கிண்டிக் கிண்டி நாங்கள் கண்டது என்னத்தை?

கிழவன் :

சுத்திச் சுத்திச் சுப்பற்றை கொல்லேக்கை தான்.

உற்றார் :

உங்களுக் கெண்டாலும் உந்தக் காணித்துண்டேனும் கிடக்குது.

உறவினர் :

எங்கடைபாடு வெறுங் கூலிப் பிழைப்புத்தான்.

அன்னை :

மூண்டு பரப்பிலை முக்கி முக்கி நட்டாலும்
முழுக்குடும்பத்துக்கும் போதியது வருகுதே?!

தந்தை :

மிச்ச நாளெல்லாம் கூலிப் பிழைப்புத்தான்.

அன்னை :

குமர்ப்பிள்ளையளை வீட்டை வச்சுச் சோறுபோட முடிய இல்லை

www.tamilarangam.net

**நண்பர் :**

அதுகளையும் கூலிக்குப் புல்லுப் புடுங்க, வெங்காயம் கிண்ட, அருவிவெட்டவிட்டுத்தான் வயிறு வளக்க வேண்டிக்கிடக்கிது"

**அக்கா :**

நாங்கள் பாடுபட்டும் பலன் என்ன?

**தங்கை :**

வரிசம் வரிசம் கடன்தான் ஏறுது.

**கிழவன் :**

காலைக் கடன் ஒண்டுதான் ஒழுங்கா இறங்குது.

**தந்தை :**

அவன் வேலுப்பிள்ளையின்ரை பெடியன் வெளிநாடு போய் ஆறுமாதமாக இல்லை, மூவாயிரம் அனுப்பிப்போட்டான் தேப்பனுக்கு.

**அன்னை :**

அதுகளுக்கினி என்ன, நிமிந்திடுங்கள்.

**கிழவன் :**

மோனே, உனக்குத்தான் விழுகுது எறி.

**மூன்றாம் உரைஞர் :**

நான் என்னப்பு செய்ய? ஐயாவுக்கும் அம்மாவுக்கும் எப்பிடிச் சொன்னாலும் விளங்குதில்லை.

**நண்பர் :**

எனக்கு நீங்கள் சொல்லுறது ஒரு அளவுக்கு விளங்குது. நீங்கள் சொல்லுறதிலை ஞாயம் இருக்குது.

**முதலாம் உரைஞர் :**

அதை நீங்கள் இவன்றை தாய் தகப்பனுக்கு விளங்கப் படுத்துங்கோவன்.

**நண்பர் :**

நான் சொல்லப் போனால், தங்கடை குடும்பம் நல்லா வந்திடும்எண்ட பொறாமையிலை சொல்லுறன், எண்டு அவை நினைச்சாலும் நினைச்சுப் போடுவினை.

www.tamilarangam.net

**இரண்டாம் உரைஞர் :**

அம்மான், நாங்கள் நினைக்கிறது தான் சரி எண்ட நம்பிக்கை எங்களுக்கு இருந்தால், அதை ஆருக்கும் சொல்லவும், எந்தச் சந்தர்ப்பத்திலை சொல்லவும், எப்படிச் சொல்லவும் நாங்கள் பயப்பிடக்கூடா.

**மூன்றாம் உரைஞர் :**

துவக்குத் தொண்டையைக் குறி வச்சாலும் தயங்காமல் சொல்லுற துணிவு வேணும்.

**கிழவன் :**

"நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம், நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணி அறியோம், பணிவோம் அல்லோம்
இன்பமே என்னாளும் துன்பமில்லை..."
டேய் குழையை வடிவா மூடி மண்ணைப் போடடா.

**முதலாம் உரைஞர் :**

அப்புவைப் போல எல்லாரும் இருந்தால், இந்த நாட்டை விட்டு ஆரும் போகவும் தேவையில்லை, எந்த நாடும் இங்கை வரவும் தேவையில்லை.

**இரண்டாம் உரைஞர் :**

அப்புவின்ரை துணிவு, அப்புவின்ரை தைரியம் எல்லாருக்கும் வந்தே ஆகவேணும்.

**நண்பர் :**

அதோடை உங்கடை நினைவுகளும் சேரவேணும்

**கிழவன் :**

தாட்டுக் கொத்தடா, மேலாலை சொறியாமல்.

**தந்தை :**

பிள்ளை எப்பன் தண்ணி கொண்டா.

**சுற்றம் :**

ஏர்க்காலைத் தட்டி உழடா.

www.tamilarangam.net

**தந்தை :**

விதைச்ச பயிரை வெட்டக் காசில்லை
பட்ட கடனுக்கு வட்டி ஏறுது

**அக்கா :**

ஐயா, கல்வீட்டு வேலுப்பிள்ளையர், உங்களைத் தேடினதெண்டு சொல்லச் சொன்னவர்.

**தந்தை :**

வட்டிகட்டவே முடிய இல்லை; அவர் வட்டியையும் முதலையும் சட்டென்று கட்டென்று நிக்கிறார்.

**உற்றார் :**

(தந்தையிடம் சென்று) அண்ணை அரிவு வெட்டிக் கடனைக் களிக்கிறன், காசு கொஞ்சம் கடனாத் தாவன்

**கிழவன் :**

கொடுக்கைப் பிடிக்கிறான் கடன்காரன்
இரப்பானைப் பிடிக்குது பறப்பிராந்து

**தந்தை :**

தம்பி, உங்கடை கஷ்டம் எனக்கு விளங்காமலே! அரிவு வெட்டக் கடன்படுவமெண்டிருக்க, முந்தின கடனை உடனை கட்டெண்டு நிக்கிறான் தந்தவன்.

**உறவினர் :**

நட்ட கண்டுக்கு இறைக்க மண்ணெண்ணை இல்லை.

**அன்னை :**

அது விக்கிற விலையிலை வேண்டக் காசும் இல்லை.

**அக்கா :**

இந்த வள்ளல்லை, தம்பியை நாலிடத்திலை விட்டுப் படிப்பிக்க, காசுக்கெங்கை நாங்கள் போறது.

**நண்பர் :**

பணக்காரருக்குத்தான் உதுகள் ஏலும் எண்ட நிலைமை தான் இஞ்சை நிலவுது.

www.tamilarangam.net

**முதலாம் உரைஞர் :**

ஏழையள் இன்னும் ஏழையளாகி
வாழைத் தண்டா(ய்) வதங்கி, வாடி

**இரண்டாம் உரைஞர் :**

சருகுகளாகச் செத்து மடியிற
நிலைமையள் தான் இந்தமண்ணிலை நிலவுது

**அன்னை :**

கடனுக்கு மேலை கடனைப் பட்டு, வட்டிக்கு மேலை வட்டி ஏற, எங்கடை குடும்பம் எப்ப உய்யிறது.

**அக்கா :**

அம்மா, சோதினை முடியத் தம்பியை வெளிநாட்டுக்கு அனுப்புவம் எண்டியள்?

**அன்னை :**

கொண்ணன் 'போக மாட்டன்' எண்டிட்டான்
ஊர்த்துளவாரம் அவருக்குப் பெரிசாப் போச்சுது.

**அக்கா :**

அண்ணை சொல்லுறதிலையும் நியாயம் இருக்கிறதாத்தான் எனக்கு இப்ப படுகுது.

**அன்னை :**

இப்ப உமக்குப் படுகுதோ?! பொத்தடி வாயை!!!

**மூன்றாம் உரைஞர் :**

கோவிக்கிறதாலை நாங்கள் உண்மையளை அறிஞ்சு கொள்ள முடியாதம்மா.

**அன்னை :**

நீதான் நாசமாப் போனா(ய்) எண்டால், அவன் தம்பியையும் கெடுத்துப் போடாதை: உனக்குப் புண்ணியம் கிடைக்கும்.

**தங்கை :**

இப்ப என்ன நடந்து போட்டுதெண்டு அழுகிறியள் அம்மா?!

www.tamilarangam.net

**அன்னை :**

என்ரை தலையிலை இடிவிழ இல்லை எண்டு அழுகிறன். பிள்ளையளைப் பெத்து நான் என்ன பலனை அனுபவிச்சுப் போட்டன்!

**தந்தை :**

எடியேய்! வேலையை விட்டுப்போட்டு உங்கை என்னடி கதைச்சுக் கொண்டு நிக்கிறியள்.

**கிழவன் :**

வட்டமேசை மாநாடு கூடுகினை. வருஷம் செல்லும் "முட்டையா(ய்) முடிய!

**அன்னை :**

இவை பெண்டுகளும் தமயனுக்கு வக்காலத்து வாங்க வெளிக்கிடுகினை.

**தந்தை :**

டேய், நீ அமளியா வெளிக்கிட்டனி, பேந்தேன் இஞ்சை வாறா(ய்), இருக்கிறதுகளைக் கெடுக்க.

**நண்பர் :**

அண்ணை அவனை ஏன் கலைக்கிறா(ய்)?

**தந்தை :**

கலையாமல் தூக்கி மடியிலை வைச்சிருக்கிறதே.

**நண்பர் :**

அண்ணை, அவங்கள் பொடியள் சொல்லுறதுபோல ஊர் திருந்தினால் எங்கள் எல்லாருக்கும் நல்லதுதானே.

**அன்னை :**

தங்களைத் திருத்த ஏலாது, ஊரைத் திருத்த வெளிக்கிட்டிட்டினை.

**சுற்றம் :**

அப்பிடி இல்லைத் தங்கச்சி, நாங்கள் எங்களைத் திருத்திக் கொள்ளவேணும், எல்லாருமாச் சேந்து.

**கிழவன் :**

ஊர் திருந்த எல்லாம் திருந்தும்... டேய் காலாலை உளக்கி மேலை மண்ணைப் போடு!

www.tamilarangam.net

**உற்றார் :**

வெளியாலை எல்லாரும் போக முடியுமே? இப்ப, என்னாலை என்றை பொடியளை அனுப்ப ஏலுமே?

**தந்தை :**

உன்னாலை ஏலாட்டில், ஏலுமானவனும் அனுப்பக்கூடாதே.

**நண்பர் :**

ஊருக்கு எத்தினைபேர் ஏலுமானவை இருக்கிறியள்? நூற்றுக்கு அஞ்சு தேறுமே?

**சுற்றம் :**

அஞ்சு போறதாலை மிஞ்சி இருக்கிற தொண்ணூத்தி அஞ்சுக்கும் ஆயிரம் தொல்லைகள் கூடுது.

**முதலாம் உரைஞர் :**

வெளிநாட்டுக் காசு கலைக்கிற கலைப்பிலை, இஞ்சை மூலை முடுக்கிலை இருக்கிற காணியளின்ரை விலை...

**கிழவன் :**

பரமசிவன்றை முடியைக் காண வெளிக்கிட்டிட்டுது.
இஞ்சை இருந்து மண்ணைக் கிண்டிற நாங்கள்
பரமன்ரை அடியைக் காணப் பாதாளத்துக்கை
போய்க் கொண்டிருக்கிறம்.

**உற்றார் :**

வெளிநாட்டு உழைப்பாலை, உள்ளூர் கலியாணச் சந்தையிலை

**கிழவன் :**

மாப்பிளை விலை கப்பல் விலையாக் கொழுத்து நிக்குது.

**இரண்டாம் உரைஞர் :**

மூண்டு காசு உழைச்சவைக்கு முதலாளி நினைப்பு வந்து மண்ணிலை கால்படாமல் மிதந்து நிக்கினை.

**மூன்றாம் உரைஞர் :**

கப்பலாலை வந்து கட்டின மாப்பிளை, கன்னி கழிச்ச கையோடை திரும்பவும் கப்பல் ஏறுறார்.

www.tamilarangam.net

**முதலாம் உரைஞர் :**

பல சந்தர்ப்பங்கள்ளை கப்பலேறின மாப்பிள்ளையின்ரை புதுக்குடும்பத்தின்ரை மானம் இஞ்சை கப்பல் ஏறுறதும் உண்டு.

**இரண்டாம் உரைஞர் :**

பொருள் வயிற் பிரிந்த தலைவன், பரத்தையற் பிரிதலும் உண்டு; இது சங்கம் முதல், நாம் தமிழர் நிலை நிறுத்திய பண்பாடல்லவா?

**மூன்றாம் உரைஞர் :**

பணத்தாசையால், தமிழ்த்தலைவன், தலைவி தலைவிதி இப்படிக் கேவலப்படலாமா?

**முதலாம் உரைஞர் :**

தனித்துவம் கெட்டுச் சர்வதேசச் சாம்பாரப் பண்பாடு இங்கு பரவலாமா?

**உறவினர் :**

இவ்வளவு கேவலமும் இப்ப இஞ்சை நடந்துகொண்டு இருக்கிறது.இந்த நூற்றுக்கு அஞ்சு வீதம் வெளிநாடு போன பரதேசியளாலைதான்.

**தந்தை :**

நீங்கள் என்னத்தைச் சொன்னாலும் நான் ஈட்டிலை கிடக்கிற இந்தக் காணியைக் கல்வீட்டு வேலுப்பிள்ளைக்கே குடுத்திட்டுக் காசுவேண்டி, என்ரை ரெண்டாவது பெடியனை வெளியாலை அனுப்பத்தான் போறன்.

**அன்னை :**

பரம்பரையா வந்த இந்தக் காணித்துண்டை விக்க மனமில்லை அப்பு, ஆனால் வேறைவழியில்லை.

**தந்தை :**

இப்ப ஈட்டிலை இருக்கிற இந்தக் காணியை, நாங்கள் இப்ப இருக்கிற நிலையிலை மீட்கவே மாட்டம்.

**அன்னை :**

முதலுக்கும் வட்டிக்குமா(ய்) காணி பறிபோகும்.

**தந்தை :**

தம்பி வெளியாலை இருந்து அனுப்பிற காசிலை நாங்கள் இந்தக் காணியையே திரும்பவும் வேண்டலாம்!

www.tamilarangam.net

**அன்னை :**

இந்தக் குமருகளை கரை சேர்க்கலாம்!

**தந்தை :**

வேறை புதுக்காணியளையும் வேண்டலாம்!
வீடு கட்டலாம்!

**கிழவன் :**

பொரிமாத் தோண்டிப் பூஎலி மக்கள்!!!

**முதலாம் உரைஞர் :**

"மண்மூடிய சுவடுகளில்,
என் முன்னோர்
விட்டுப் போயுள்ளார்கள்
எனக்கொரு செய்தி;"

**இரண்டாம் உரைஞர் :**

"நூறு நூறாயிரம் தோள்களின் மீது
ஏறி நின்று
எனது நிலம் என உரத்துச் சொல்கிறேன்

**மூன்றாம் உரைஞர் :**

"ஏழு சமுத்திர வெளிகளைத் தாண்டி
அதன்மேல் எழுகிற அலைகளை மீறி
அதனைக் கொண்டுபோய்
எங்கும் ஒலிக்கிறது காற்று..."

**உரைஞர் :**

"எனது நிலம் எனது நிலம்"

(சேரன்)

**கிழவன் :**

ஓம், இது என்றை நிலம் எனக்கு முன்னம் என்ரை அப்பு, அப்புவின்ரை அப்பு, அவற்றை அப்பு, அவற்றை அப்பு, எண்டு காலாதிகாலமா எங்கடை சனங்கள் குந்தியிருந்து வந்த நிலம்.

**உறவினர் :**

உறுதியள் எங்களிட்டை இதுகளுக்கில்லை; ஆனால் இதிலை இருந்தே தீருவம் எண்ட மன உறுதி எங்களிட்டை இருக்கு

www.tamilarangam.net

**கிழவன் :**

இதை வித்துச் சுடுகிறவை, என்ரை பிணத்தை இந்த மண்ணிலை புதைச்சுப்போட்டு அப்பிடிச் செய்யுங்கோ

**தந்தை :**

இப்ப தேவைக்கு வித்தாப் பேந்து இதிலும் திறமா வேண்டலாம்.

**கிழவன் :**

திறமாப் பண்ணுவாயடா நீ, பேப்ப்....ப்....ப

**நண்பர் :**

கூலிக்கு மண்ணிலை வேலை செய்த எங்கடை காலிலை, இந்த மண்தான் காவி படிஞ்சிருக்குது

**கிழவன் :**

காலிலை மட்டுமே, காலம் காலமா குந்தி இருந்து மண்ணைக் கிளறினம். மண்ணிலை இருந்து கிளம்பிற புழுதி, வேர்வையாலை நனைஞ்ச எங்கடை கோவணச் சீலையிலை படிஞ்சு ஊறிக் கிடக்குது.

**சுற்றம் :**

தோய்க்கத் தோய்க்க மண்காவி ஏறிச் சிவப்புக் கொடியா(ய்) காத்திலை ஆடிக்காயுது.

**முதலாம் உரைஞர் :**

முற்றுந் துறந்து பரதேசம் போக அல்ல, எங்கடை கந்தல்லை காவி படிஞ்சது.

**இரண்டாம் உரைஞர் :**

இந்த மண்ணிலை பற்று வச்சு, இஞ்ச நிண்டு எதிர்த்து வெல்ல, உரந்தரத்தான் எங்கடை உடுப்பிலை மண்காவி படிஞ்சிருக்கு

**மூன்றாம் உரைஞர் :**

'கடவுளே' எண்டிட்டு இருக்கிறதாலை, சாத்திரம் பாத்துச் சப்புக் கொட்டிறதாலை, ஆருங் கொண்டு வந்து கையிலை வைப்பினை எண்டு...

**தங்கை :**

நாங்கள் இனிமேலும் நம்பி இருக்கிறதாலை பிரயோசனமில்லை அப்பு.

www.tamilarangam.net

**அன்னை :**

நீ பொத்தடி வாயை!!

**அக்கா :**

வாயைப் பொத்திக்கொண்டு, வாயில்லாப் பூச்சிகளா(ய்) இதுவரை நாங்கள் இருந்தது போதும்

**நண்பர் :**

பிரச்சினை எது எண்டதைத் தெரிஞ்சு கொள்ளுவம்.

**கிழவன் :**

ஆத்துக்கை வச்சிட்டுக் குளத்துக்கை தேடாமல், எதிலை பிரச்சினை இருக்கு, எங்கை இருக்கு எண்டதை அறிவம்.

**முதலாம் உரைஞர் :**

இருக்கிற நிலம்முழுதும் சேறும் சகதியுமா, கல்லும் முள்ளுமா இருக்கு.

**இரண்டாம் உரைஞர் :**

ரெண்டொருத்தர் மட்டும், வெளியிலை எடுத்த பிச்சையைக் கொண்டு

**மூன்றாம் உரைஞர் :**

அந்தச் சகதி நிலத்திலை வீடு கட்டினால் அது நிலைச்சு நிக்குமே?

**உற்றார் :**

எப்படி நிக்கும்?!

**உறவினர் :**

அப்ப அதுக்கு வழி?

**முதலாம் உரைஞர் :**

சகதி நிலத்தைப் புதுமண் போட்டுப் பலமுள்ளதாக்க வேணும்!

**இரண்டாம் உரைஞர் :**

கல்லையும் முள்ளையும் அகற்ற வேணும்!

**மூன்றாம் உரைஞர் :**

கொத்தி உழுது பயிர் நட வேணும்

www.tamilarangam.net

**தங்கை :**

அத்திவாரம் வெட்டி வீடுகட்ட வேணும்!

**மூன்றாம் உரைஞர் :**

கொத்தி உழுது பயிர் நட வேணும். பத்துப் பன்னிரண்டு தென்னை நடவேணும்!

**கிழவன் :**

ஏர் ஆழமாக உழுதால் ஏராளம் விளையும்
தார் ஆழமாக உழப்பட்டால் தாராளமா(ய்)க் கிடைக்கும்
(தம்பி வருகிறான்)

**அன்னை :**

என்ன தம்பி சோதினை எல்லாம் முடிஞ்சுதே?

**தம்பி :**

முடிஞ்சுது

**அன்னை :**

என்ன ஒரு மாதிரிச் சொல்லுறா(ய்)?!

**தம்பி :**

நாடு திருந்தாமல் நாங்கள் நல்லபடியா(ய்)ச்
சோதினை எழுதேலாது.

**தந்தை :**

என்னடா நாடும் சோதினையும்?! மொட்டந்தலைக்கும் முளங்காலுக்கும் முடிச்சுப் போடுறா(ய்)?!

**கிழவன் :**

இல்லையடா மோனே; அவன் தம்பி குடும்பிக்கும் பூமாலைக்குந்தான் முடிச்சுப் போடுறான். நாங்கள்தான் இவ்வளவு நாளும் முடிய ஏலாததுகளை முடியப்பாத்துப் பெரும் பிழையளை விட்டு வந்திட்டம்.

**தந்தை :**

நீ என்னணை அப்பு புலம்பிறா(ய்)

**உற்றார் :**

அப்பு புலம்ப இல்லை; உள்ளதை உபகதையாச் சொல்லுறார்

www.tamilarangam.net

**தந்தை :**

சோதினை போனால் போகிதடா மோனை, நான் உன்னை வெளிநாட்டுக் கனுப்பிறன்.

**தம்பி :**

நான் ஒரு நாட்டிற்கும் போக இல்லை. இதுதான் என்ர நாடு! இதுதான் என்ர பூமி! இதுதான் என்ர மண்!

**முதலாம் உரைஞர் :**

இந்த மண்ணிலை காலடி வடிவா(ய்)ப் பதிச்சு

**இரண்டாம் உரைஞர் :**

உறுதியா நிண்டு, எல்லாரும் ஒண்டு பட்டு

**மூன்றாம் உரைஞர் :**

பாடுபடுவமென்டால்

**கிழவன் :**

ஏராளம் விளையும், தாராளமாய்க் கிடைக்கும்

**தம்பி :**

தன்மானத்தோடை நாங்கள் தலைநிமிர முடியும்!

**அன்னை :**

தம்பி!... நீயும் எங்களை...

**கிழவன் :**

அடிபிள்ளை! நல்ல மூர்த்தமான இந்த நேரத்திலை சகுனப்பிழையா ஏதும் பறைஞ்சுபோடாதை

**நண்பர் :**

எல்லாரும் வாழத்தான், அவங்கள் இஞ்சை வாழப்போறாங்கள்

**முதலாம் உரைஞர் :**

வரம்பிலை நிண்டு ஆசியள் தந்து காணாது இனி.

**இரண்டாம் உரைஞர் :**

வயலுக்கை இறங்கி வாருங்கோ எல்லாரும்!

**கிழவன் :**

விடுவனே பின்னை!

www.tamilarangam.net

அனேகமானோர் :

ஆ... ஆ... துவங்குங்கோ வேலையை!!
ஓமோம்! ஓமோம்!!

(உறுதியும் தீர்மானமான முடிவும், உற்சாகமும் கொண்ட உள்ளத்தினராக வேலை செய்கின்றனர். ஆரம்பத்தில் தந்தையும் அன்னையும் மனம் சோர்ந்தவர்களாக ஒரு புறத்தே ஒதுங்கி நிற்பர். சிறிது பொழுதால் அவர்களும் இணையாமலா போகப் போகிறார்கள். வேலை நடைபெறும் வேளையில்...)

பாடகர் :

அயலும் புடையும் வாழவேண்டும்
அன்னமும் சுற்றமும் வாழவேண்டும்

கிழவன் :

ஆச்சியும் அப்புவும் வாழ வேண்டும்

தங்கை :

அம்மானும் மாமியும் வாழ வேண்டும்

பாடகர் :

அரிசிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
அரிசி மலைநாடும் கண்டீரோ தம்பி!

முதலாம் உரைஞர் :

"இரண்டாயிரம் ஆண்டுகள் முன்பாக,
என் முன்னோர் நடந்த
நிலப்பரப்பு

இரண்டாம் உரைஞர் :

"ஒரு காலடி ஆனால்
ஓராயிரம் ஆண்டு
எம்வேர் நீண்டுள்ளது"

(பலஸ்தீனக் கவிதை)

பாடகர் :

நெல்லுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
நெல்லு மலைநாடும் கண்டீரோ தம்பி

www.tamilarangam.net

**கிழவன் :**

மஞ்சள் பொதியோடும் வந்தீரோ தம்பி
மஞ்சள் மலைநாடும் கண்டீரோ தம்பி?

**மூன்றாம் உரைஞர் :**

"எனது நாட்டில் ஒரு சாண் நிலம்
எஞ்சி இருக்கும் வரை
என்னிடம் ஒரு ஒலிவ் மரம் எஞ்சி இருக்கும் வரை

**உற்றார் :**

ஒரு எலுமிச்சை மரம்
ஒரு கிணறு, ஒரு சப்பாத்திக் கள்ளி
எஞ்சி இருக்கும் வரை

**தம்பி :**

ஒரு சிறு நினைவு
ஒரு சிறு நூலகம்
ஒரு பாட்டனின் புகைப்படம், ஒரு சுவர்
எஞ்சி இருக்கும் வரை

**தங்கை :**

விடுதலைக்கான பயங்கரப் போரை
எதிரியின் எதிரில் நான் பிரகடனம் செய்வேன்

**முதலாம் உரைஞர் :**

சுதந்திரமான மனிதர்கள் பெயரால்

**இரண்டாம் உரைஞர் :**

தொழிலாளர்கள், மாணவர்கள், கவிஞர்கள் பெயரால்

**மூன்றாம் உரைஞர் :**

நான் பிரகடனம் செய்வேன்

**(பலஸ்தீனக் கவிதைகள்)**

(இப்பிரகடனம் அவர்கள் நெஞ்சங்களில் மேலும் உற்சாகத்தை வளர்க்க, அவர்கள் பின்வரும் பாரம்பரிய நாடகப் பாடல்பகுதி நினைவில் நிறைந்தவர்களாக அதனை நிகழ்த்திக் காட்டுகிறார்கள்)

www.tamilarangam.net

பாடகர் :

நன்னன்ன நானன்ன நானா - நனானன்ன
நானன்ன நானன்ன நானா

உற்றார் :

அசைவற்ற இசைபெற்ற தோன்றலே - என்னை
அழைப்பித்த காரியம் தனைச் சொல்லும்

கிழவன் :

வசையற்ற இசைபெற்ற வாணனே - படைத்
தலைவனே போருக்குப் போகவே

உறவினர் :

மறுநாட்டுக் கேகிட வேண்டுமோ? - அன்றி
மறு மன்னர் துரந்திங்கே வருவாரோ

கிழவன் :

நிறை நாட்டில் என்னுடன் பொருதிடக் - கண்ணன்
சேனையைக் கொண்டிங்கு மேவினான்

நண்பர் :

உமக்கும் அங் கவனுக்கும் பகைஎன்ன - நீங்கள்
யுத்தத்துக் கெழுந்திட்ட வகை என்ன?

கிழவன் :

சமர்க்கவன் வரவந்த காரியம் - அவன்
தனையனைச் சிறைவைத்த வினையதால்

சுற்றம் :

ஏனவன் மகனை நீ சிறைவைத்தாய்? - அதை
இன்னதென் றெனக்கிப்போ இசைத்திடாய்,

கிழவன் :

மான மற்றிட எந்தன் மகனிடம் - அவன்
வருவானேன் வசைதன்னைத் தருவானேன்

தந்தை :

இப்படி நடந்ததோ புதினமும் - உமது
எண்ணத்தை இனிச்சொல்லும் திண்ணமாய்

www.tamilarangam.net

**கிழவன் :**

செப்புவ தேனினி அவனுடன் - போரச்
சேனையைக் கொண்டங்கே செல்லுவீர்!

**பாடகர் :**

தூக்குறு மோர்தயிர் நோக்கி யருந்திய
துவரை நகர்க் கிறையாம்
போக்கிலி என்னுடன் தாக்கிட வெஞ்சமர்
புரியப் போறானாம்
வீக்கி யவன்றனை யேக்க முறும்படி
வெஞ்சிறை செய்திடுவேன்
தாக்கி யருஞ்சமர் ஆக்கிட நீயுமுன்
தானையும் ஏகுவீரே

(திரை)

www.tamilarangam.net

# 'மண் சுமந்த மேனியர்'

## நாடகம் பற்றி

## ஒரு விமர்சனம்

### *கார்த்திகேசு சிவத்தம்பி*

கடந்த மூன்றுமாத காலத்துள் யாழ்பாண மாவட்டத்தில், ஏறத்தாழ 60 இடங்களில் இரண்டு மூன்று காட்சிகள் என மேடையேற்றப்பட்டு பொதுசன (வெகுசன) பாராட்டு ஆர்ப்பினை 'மண் சுமந்த மேனியர்' என்ற நாடகம் பெற்றுக் கொண்டது யாழ். பல்கலைக்கழக மாணவரால் நடிக்கப் பெற்ற இந்நாடகம் தமிழ் பிரதேசங்களில் நடந்துகொண்டிருக்கும் அரசியற் போராட்டத்துக்குப் புதிய ஒரு பரிமாணத்தை வழங்கியுள்ளது.

இளைஞர் தலைமறைவாக இயங்கும் அரசியல் இயக்கங்கள் பயன்படுத்தும் தொடர்பு முறைமைகளையே இளைஞர் இயக்கங்களினாற் பயன்படுத்தப்பட்டு வந்தன. வெளிப்படை அரசியலுக்கான நிறுவனங்கள் எதுவும் இல்லாது போக, (அன்றேல் செயலற்றுப்போக) சட்ட வரம்புக்குள் நின்று எடுத்துக் கூறப்பட்டத் தக்கனவற்றைக் கூடச், சுவரொட்டிகளாகவும் தடைச் சாத்தியப்பாடுள்ள அச்சு வெளியீடுகளாகவுமே எடுத்துக் கூறும் ஒரு நிலைமை உருவாகிற்று. அத்தகைய ஒரு சூழ்நிலையில் கலை வடிவங்கள் சம்பந்தமற்றவையாகக் கருதப்படும் ஒரு நிலைமை ஏற்பட்டது. ராணுவ நடவடிக்கைகளின் தன்மையும் அவற்றின் பரப்பும் இப்பண்பினை ஏற்படுத்தின. இந்தத் துப்பாக்கியோசைச் சூழலில் கலையின் சாத்தியப்பாடு பற்றிய பிரக்ஞையே மழுங்கிப் போய்க்கொண்டிருந்தது எனலாம்.

இப்படியான ஒரு சூழ்நிலையில், மேற்சொன்ன கலை மறதிப்பாட்டைக் கலைத்து, கலையின் நுணுக்கத்தால், மக்களிடத்தே அது ஏற்படுத்தும் உணர்திறனால், சில முக்கியமான மனப்பதிவுகளை ஏற்படுத்தலாம் என்பதையும், சமூகப் பிரக்ஞையை ஏற்படுத்தும் தொடர்புமுறைமை கலைவழியாற் செம்மையாகச் செய்யப்படலாமென்பதையும் 'மண்சுமந்த மேனியர்' என்ற இந்த நாடகம் எடுத்துக் காட்டியுள்ளது.

¡56'மண்சுமந்த மேனியர் ஏற்படுத்திய விழிப்புணர்வினை உந்துசக்தியாகக் கொண்டு இப்பொழுது ஒரு தெருக்கூத்து இயக்கமும் தொழிற்பட்டு வருவதைக் காணலாம்.

www.tamilarangam.net

இந்த இரு நிகழ்ச்சிகளும் யாழ்பாணத்தின் கலைப்பயில்வு நிலையிற் பிரத்தியட்சமான ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

இத்துணை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் 'மண்சுமந்த மேனியர்' எனும் இந்த விடயம் பற்றி எவ்வகையிற் 'பேசுகின்றது' என்று அறிந்து கொள்வது அவசியமாகும்.

இந்நாடகம் அது நடக்கும் அரங்கில் ஒரே வேளையில் ஒன்றுக்கொன்று தொடர்புடைய பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் பலரைக் காட்டுகின்றதெனினும், இதன் மையக் கருவாக நிற்பது ஒரு சராசரி யாழ்ப்பாண விவசாயக் குடும்பத்தின் 'பாடுகளே' ஆகும். (கிறித்துவத்தில் எடுத்துப் பேசப்படும் 'பாடுகள்' எனும் சொற்பொருளை நினைவு கூருதல் நல்லது) விவாகமாகாத பெண்குழந்தைகள், கடனாளியாகப் போய்க் கொண்டிருக்கும் குடும்பத் தலைவன், பல்வேறு மன உளைச்சல்களால் தன்னைத் தான் இனம் கண்டு கொள்ளும் பயணத்தின் முடிவில் இயக்கத்திற் சேர்ந்துவிட்ட மூத்தமகன், இந்தக் கவலைகளினால் அமுத்தப்படுகின்ற தாய், இவர்களின் ஒரே நம்பிக்கைச் சுடராய் விளங்கும், பரீட்சை எடுக்கவிருக்கும் இரண்டாவது மகன், இவர்களுடைய அங்கலாய்ப்புகளும் அவதிகளும்தான் நாடகத்தின் உட்கரு. அந்தத் தாய், குடும்பம் என்னும் சிலுவையில் அறையப்பட்டுப் படும்பாடுகள்தான் நாடகத்தின் உயிர்.

ஆனால் இந்தக் குடும்பம் தனித்த ஒன்றாக மேடையிற் காட்டப்படவில்லை. ஓர் அயல் முழுவதுமே நம்முன் நிறுத்தப்பட்டு அந்த அயலின் கூட்டத்தில் (பார்வையாளர் பார்வையில்) அதன் வலது கை முன்புறத்து ஓரத்திலேயே இந்தக் குடும்பத்தின் பாடுகள் காட்டப்படுகின்றன. அந்த அயலவர்களின் அங்கலாய்ப்புக்கள், அவதானிப்புகளுக்கிடையேயும் உரைஞர்குழு (கோரஸ்)வின் விவரண, மதிப்பீட்டுக் குறிப்புகளுக்கிடையேயும் வைத்தே இந்தக் குடும்பம் காட்டப்படுகின்றது. ஒரு கணம் மேடை முழுவதுமே குடும்பமாகிறது; மறுகணத்தில் அவர்கள் நால்வருமே 'தனித்து' நிற்கின்றனர். (அந்தத் தனிமைப்பாடு அவர்கள் நித்திரை கொள்ளப் போகும்பொழுது நன்கு தெரிகிறது. படுத்துக் கிடக்கும் குமர்ப் பெண்ணின் புடவையைச் சரிசெய்துவிடும் தாயின் அங்கலாய்ப்பில் யாழ்ப்பாணத்துக் தாய்மையின் முழுச் சோகமும் தவிப்பும் தெரிகிறது)

இந்தக் குடும்பத்தின் நிலையை எடுத்துக் காட்டும் அளிக்கைமுறை, கதை சொல்லும் முறையில், ஒன்றன்பின் ஒன்றாக (இளம்பூரணர்

www.tamilarangam.net

விளக்கும் நாடக வழக்கு முறையில்) வரவில்லை. குறிப்புரைகள், அவதானிப்புகள், கிண்டல்கள், நொள்ளைகள், ஏக்கங்கள், துன்பக்குரல்கள் ஆகியனவற்றினாலே அந்தக் குடும்பத்தின் பாடுகள் எடுத்துச் சொல்லப்படுகின்றன.

இந்த மையப்புள்ளியை வைத்து எழுப்பப்பட்டுள்ள கலைக் கோலத்தில் மேற்கு நாடுகளிற் பிச்சைக்காசுக்காக ஓடிப்போய், அதிலும் மீதப்படுத்திப் பணம் அனுப்பும் அவலம், அகில இந்திய வானொலிச் செய்தியின் தமிழ்நாடு மாநிலச் செய்தியையே நம்பிக்கைத் தீனாகக் கொள்ளும் அங்கலாய்ப்பு, நிலமில்லா தன்மை, விவசாயக் கூலிகளின் அவலம் ஆகியன நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளன.

சுருக்கமாகக் கூறினால், இந்த மண்ணைச் சுமக்கும் புழுதிபடிந்த மேனியினரது வாழ்க்கையின் ஒரு துண்டம் அரங்கில் நாடகமாக எடுத்துக் காட்டப்படுகிறது.

'கூலிக்கு மண்ணிலை வேலை செய்த எங்கடை காலிலை இருந்த மண்தான் காவிபடிஞ்சிருக்குது.

காலிலை மட்டுமே; காலம் காலமா குந்தியிருந்து மண்ணைக் கிளறினம், மண்ணிலையிருந்து கிளம்புற புழுதி. வேர்வையிலை நனைஞ்ச எங்கடை கோவணச் சிலையிலை படிஞ்சு ஊறிக் கிடக்குது.

தோய்க்கத் தோய்க்க மண்காவி ஏறிச் சிவப்புக் கொடியாய் காத்திலை ஆடிக் காயுது.

முற்றுந் துறந்து பரதேசம் போக அல்ல எங்கடை கந்தல்லை காவி படிஞ்சது.

இந்த மண்ணிலை பற்று வச்சு இஞ்சநிண்டு வெல்ல, உரம் தரத்தான் எங்கடை உடுப்பிலை மண்காவி படிஞ்சிருக்கு.'

மண்சுமந்த மேனியரின் குறியீடு இதுதான். பெயர் சுட்டிக் குறிப்பிடப்படாத அளவுக்கு அநாமதேயமாக, ஆனால் அதேவேளையில் நமது சராசரிக் குடும்பத்தில் உதாரணமாக அமையும் அந்தக் குடும்பமும் அதன் சுற்றமும்தான் இந்த மண்சுமந்த மேனியர்.

'பொன்னார் மேனியனே' என்ற தேவாரம் தெரிந்த சமூகத்தின் 'மண்ணார் மேனியர்கள்' இவர்கள்தான்.

இந்த நாடகம் ஏன், எவ்வாறு தவிர்க்கமுடியாக் கவர்ச்சியை உடையதாக விருக்கின்றது.

www.tamilarangam.net

அரங்க நிகழ்வு என்பது ஓர் அனுபவம். அந்த அரங்கத்து நிகழ்ச்சிகள் எமது அந்தரங்கத்து உணர்வுகளை, உணர்ச்சிகளை வெளிக் கொணர்ந்து, எமது மனச் சுமைகளை லேசுப்படுத்துகின்ற பொழுதுதான் நாடகம் தனது பணியில் வெற்றியீட்டுகிறது என்பது அரிஸ்டோட்டிலின் கருத்து.

இந்த அரங்க நிகழ்வு அந்தச் சாதனையைச் செய்கின்றது. எவ்வாறு செய்கின்றது? நமக்குத் தெரிந்த அரங்கப் பண்பாட்டினைத் தளமாகக் கொண்டு (ஆட்டம், இசை, அசைவு, கூற்று) இது நிகழ்த்தப்படுகின்றது. நமது நாட்டார் மரபு நிமிர்த்தி நிற்க வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த நாட்டார் மரபின் ஓசைகளினூடே கிரேக்க நாடக மரபின் 'கோரஸ்' முறைமையும், பிறெஃக்றறிய அரங்கின் 'புறநிலைப்படுத்தி நோக்கும் முறைமை'யும் இணைந்து நிற்கின்றன.

ஒரு மட்டத்தில் ஏதோ 'காட்சி' காட்டப்படுவதாகத் தென்படுகிறது. இன்னொரு மட்டத்தில் நின்று பார்க்கும்பொழுது அது உண்மையில் 'காட்சி' அல்ல, காட்சி ஒன்று பற்றிய 'வியாக்கியானமா'கவே அது இருக்கின்றது என்பது தெரிய வருகின்றது.

அரங்கத்தின் முழுவளங்களையும் உணர்ந்து கொண்ட ஒருவரால் எழுதப்பட்டது என்பதும், அந்த முழுவளங்களையும் பயன்படுத்த முயலும் ஒருவரால் நெறிப்படுத்தப்பட்டது என்பதும் நன்கு தெளிவாகின்றன.

பாடல்களும், வசனங்களும், அசைவுகளும், அசைவு இன்மைகளும் (இது மிக முக்கியமானது) இணைகின்றபொழுது, நாடகம் பொலிகின்றது. நடிப்பும் மேடை உத்திகளும் நன்கு இணைக்கப்படுகின்றன.

இவ்வாறு அளிக்கப்படும்பொழுது நாம் நம்'முன்னே விரியும் அந்தக் காட்சிகளினால் கவரப்பட்டு, அதற்கு 'ஆட்பட்டு' நிற்கின்றோம்.

நமது வாழ்க்கை மரபின் அன்றாடச் சின்னங்கள் மூலம் இந்த மரபு விளையாட்டு நடைபெறுகின்றது.

நமது கோயில்கள், நமது புராணபடனமரபு, நமது தேவாரங்கள, நமது கிராமத்தவர் மரபு ஆகியன மூலம் நாம் மேடையில் உருவகப்படுத்தப்படுகிறோம். சன்னிதிக் கோயிற் பூசை காட்டப்படும் முறைமை, மகனின் பரீட்சைக்காக தாய் முதல் குடும்பத்தினர் யாவரும்

www.tamilarangam.net

மெழுகுதிரியாக நிற்கும் உருக்கம் ஆகியன மறக்க முடியாக் காட்சிகளாக அமைந்துள்ளன.

நாடகத்தில் வரும் கிழவர், நமக்குள்ளேயுள்ள கிண்டல் குணமாக நிற்கிறார். நாடகத்தின் சித்திரிப்பில் எமது குறைபாடுகள் பெரிய கிழிசல்களாகத் தெரிகின்றன. சந்நிதி வாசலில் வேண்டப்படும் பிரார்த்தனைகள் ('என்ரை பெரயிலைக் கண்டைக் காப்பாற்று' முதல் 'என்ரை பிள்ளையின்ரை சோதனையைப் பாஸ் பண்ண வை' வரையுள்ளவை), நமது தொழிற்பாடுகளின் முரண்பாடுகளைக் காட்டுகின்றன.

விசாரணைக்கும் மீளாய்வுக்கும் உட்பட்டு நிற்பது கிராமத்துச் சராசரிப் பாத்திரங்கள் அல்ல; நமது நம்பிக்கைகள் சகலமும், நமது எடுகோள்கள் யாவும், நமது அணுகுமுறைகள் எல்லாமே மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

நாடகத்தைக் 'குழந்தை' ம. சண்முகலிங்கம் எழுதியுள்ளார். சண்முகலிங்கத்தின் ஆக்க ஆளுமை, அதன் பலன்கள், பக்கச்சார்புகள் யாவும் இந்த நாடகத்திலே தெரிகின்றன.

சண்முகலிங்கத்தின் மிகப்பெரிய சாதனை, இன்று யாழ்ப்பாணம் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் நமது பண்பாட்டுத் தளத்தின் மீதே நின்றுகொண்டு காட்டுவதும் எடுத்துக் கூறுவதும் தான்.

சிதம்பரநாதனின் நெறியாள்கை அவரது அரங்க உணர்வின் முதிர்ச்சியைக் காட்டுகிறது. மெச்சத்தக்க நெறியாள்கை.

இசையமைப்பாளரின் உதவி நாடகத்தின் கலா முழுமைக்குப் பெரிதும் உதவியுள்ளது.

ஆனால் நாடகத்தில் வரும் கிழவன் யார்? அவரின் கிண்டல் போக்கு இறுதியான அடித்தளமாற்றப் போக்குடன் இணையக் கூடியதாக உள்ளதா என்பதைச் சற்று நிதானித்து நோக்க வேண்டும். நடிப்புத் தாக்கத்துக்கான பதிற்குறியாகச் சிரிப்பு வரத் தொடங்கும் பொழுது நடிகன் நிலை தளம்பலாம். எவ்வாறாயினும் இந்தப் பாத்திரம் காத்திரமயப்படுத்தப்படல் அவசியமாகும்.

நாடகத்தின் வலிமை நடிப்பின் சமனின்மைகளை மறைத்து விடுகிறது.

www.tamilarangam.net

மண்சுமந்த மேனியரைப் பார்த்துக் கொண்டிருந்தபொழுது. அது எவ்வாறு கடந்தகால நாடக வரலாற்றின் சிசுவாக வெளிக்கிளம்புகிறது என்பது தெரிகிறது. கூத்து மரபின் நவீனமயப்பாடு. குறியீட்டு மரபுக்கியைய மாற்றியமைக்கப்பட்ட நடிப்பு மரபு. 'செட்டிங்ஸ்' மரபின் புறக்கணிப்பு. ஆகியனயாவும் 'மண்சுமந்த மேனியர். தோன்றுவதற்கான பசளையாக அமைந்துள்ளன. வித்தியானந்தன். தாசீசியஸ். சுந்தரலிங்கம். மௌனகுரு முதலியோரின் நாடகப் பணிகளைத் தன்வயப்படுத்திப் புதிய ஒரு நாடகத் தளத்துக்கு எம்மை சண்முகலிங்கம் இட்டுச் செல்கிறார். மறுதலிக்கப்பட முடியாத வகையில் நமது நாடகாசிரியனாக அவர் மேற்கிளம்புகிறார். பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் பின்னர் யாழ்ப்பாண வாழ்க்கையின் நெளிவு சுளிவுகளை நன்கு சித்திரிப்பவராகச் சண்முகலிங்கம் மேற்கிளம்புகிறார். சிதம்பரநாதன் தான் சண்முகலி ங்கத்தை உணர்ந்தவர் என்பதைக் காட்டுகிறார்.

இன்று சண்முகலிங்கத்துக்குள்ள ஒரே சவால். அவரது அடுத்த முக்கிய நாடகமும் மண்சுமந்த மேனியரைப் போல் அமைய வேண்டுவதாகும். அந்த அமைவு சண்முகலிங்கத்தை எமக்கு மேலும் தெரியப்படுத்துமென நம்புகின்றேன்.

ஆனால் ஒன்று; நாடகம் ஒரு கூட்டுக் கலை.

*(இவ்விமர்சனம் "மல்லிகை" இருபத்தோராவது ஆண்டுமலர்-ஆகஸ்டு-செப்டெம்பர் 1985இல் பிரசுரிக்கப்பட்டது)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மண் சுமந்த மேனியர்

## கடலோடி

அறுபது தடவைகள்வரை குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இந்நாடகம் மேடையேற்றப்பட்டுள்ள போதிலும், இதன் இரண்டாவது மூன்றாவது மேடையேற்றங்களைப் பற்றிய எனது கருத்துக்களையே இங்கு தருகிறேன்.

1979-80ஆம் ஆண்டுகளில் நாடக விழிப்பினைப் பரவலாக்கிய அவைக்காற்று கலை கழகம், நாடக அரங்கக் கல்லூரி போன்றவற்றின் முயற்சிகளின் பின்னர் - மிக நீண்டகால வெறுமைக்குப் பின்னர் - பலரின் கவனத்தைக் கோரும் முக்கிய நிகழ்வாக இது அமைகிறது.

இந்நாடகத்தின் மையம் என்னவென்று யோசிக்கையில், அது சிதறுண்டிருப்பதாயே உணரமுடிகிறது. பல்வேறு பிரச்சினைகள் கையாளப்பட்டிருக்கின்றன. விவசாயக் குடும்பமொன்றையும், அதன் சுற்றத்தையும் பின்னணியாகக் கொண்டு இன்றைய யாழ்ப்பாணத்தின் பிரச்சினைகள்-போராளிகளின் தாக்குதல்கள்; அதுபற்றிய பெருமிதங்கள், பயம், தங்களின் அயலுக்குள் நடக்கவில்லையென்ற ஆறுதல்-மக்களிற்கும் 'பெடியளுக்கும்' இடையிலுள்ள இடைவெளி-மீட்சிக்காக 'வெளியில்' எதிர்பார்த்திருத்தல் - இன்றைய நிலையிலும் சமூகத்தில் உள்ளோடி நிறைந்திருக்கும் 'என்ர... என்ர...' என்ற சுயநலங்கள்-தாம் மட்டும் வாழ வெளிநாடு செல்லல்-மண்ணில் காலூன்றியபடி இங்கேயே நிற்கவேண்டுமென்ற உணர்வு-எதிரியின் போர்ப்பிரகடனத்தைக் கூட்டாக எதிர்கொள்ளத் தயாராகும் நிலை-என்பன சித்திரிக்கப்படுகின்றன. இவை சமூக யதார்த்தத்தின் வகை மாதிரித் தன்மை கொண்டவையாயுள்ளன வென்பது முக்கியமான அம்சம். எனினும், மையம் துலக்கமுறுவதற்குத் துணை செய்வதாய்ப் 'பகுதிப் பிரச்சினைகள் அமைக்கப்படாததால் மயக்கங்கள் தோன்றுவதற்கு இடமேற்படுகிறது. வெளிநாடு செல்லாமல் இங்கு நின்று நிலங்கிண்டினால் எல்லாம் சரியோ? எனக் குழம்ப வேண்டியிருக்கிறது. 'பணக்காரரை நம்பமுடியாது; அவர்கள்தான் தப்பி வெளிநாடு செல்கின்றனர்' என்பன போன்ற கருத்துக்களும், நிகழ்வுகளும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் நேச அணியினராய் அமைபவர் பற்றிக் குழப்பமான கருத்துக்களை ஏற்படுத்துகின்றன. குந்தியிருந்து நிலங்கிண்டுவோரின் கோவணத்தில் படிந்த செம்மண் காவியினால் அது

www.tamilarangam.net

'செங்கொடியா'த் தெரிவதாகச் சொல்லுதெல்லாம், யதார்த்தமற்ற திசைதிருப்பமே. தாக்குதல்களின் இன்றைய விளைவுகளை மட்டும் சுட்டி எழுப்ப முயலும் கருத்துக்களும் பகுதி உண்மையையே கொண்டுள்ளன. அவற்றின் 'வரலாற்றுப் பங்களிப்பினையும்' தெரிவித்து இன்றைய போதாமை நிலையை உணர்த்துவதே, உண்மைக்கு நியாயம் செய்வதாக அமைய முடியும். இத்தன்மைகளினால், நாடகப் பிரதி பலவீனமானதாயே இருக்கின்றது.

ஆனால் 'நிகழ்த்திக் காட்டுதல்' என்னும் நாடகக் கலைவடிவத்தின் அடிப்படை அம்சம், நெறியாளரால் நேர்த்தியாகக் கையாளப்படுவதனால், பிரதியின் பலவீனம் அமுங்கிப் போகின்றது. தாக்குவலுக் கொண்ட காட்சிப்படுத்தல்கள் இந்நாடகத்தின் சிறப்பம்சமாய் அமைகின்றன. உதாரணமாய் சகுனியும், தருமரும் சூதாடுவதும், அதன் தொடர் விளைவுகளும்; என்ர... என்ர... என்ற சுயநல நாட்டச் சித்திரிப்பு; அரச வன்முறைகளின் கொடுமைகளின் பின்னர் காணும் தனிமனிதனின் அவலம் ('சண்முகசாமி... சண்முகசாமி... சுந்தரம்பிள்ளை... சுந்தரம்பிள்ளை...' எனத் திரிதல்); கோயிற்காட்சிகள்; மரத்தை விழுத்தும் இறுதிக் காட்சி என்பன.

சிறு சிறு பாத்திரங்களும் வகைமாதிரித் தன்மையுடன் செம்மையாய் அமைகின்றன. கிழவன், அம்மான், தகப்பன், தாய், மகன், முதுகுகூனிய கிழவி, கடன் கேட்டு வரும் நபர் எல்லாம் தத்தம் செயற்பாட்டினாலும் முழுமையினாலும், மனத்தில் பதிகின்றனர்.

கவிதைகள், நாட்டுப் பாடல்கள் என்பன பொருத்தமுற இடையிடை கையாளப்படுவதும் வித்தியாசமாயும், நன்றாயுமிருக்கின்றது. ஆனால் இது இங்குதான் முதன்முதலில் கையாளப்படுகிறதென்றில்லை. தமிழ் நாட்டில் பரீக்ஷா 'ஞாநி' தனது 'பலூன்' நாடகத்தில் இதனை ஏற்கனவே (1981ல்) கையாண்டுள்ளார்.

இசை முக்கிய இடத்தை இந்நாடகத்தில் வகிக்கின்றது. வெறும் பின்னிசை என்றில்லாமல் நாடக நிகழ்வுக் கட்டங்களிற்கும் பொருந்த இளிவரல், அவலம், துக்கம், ஆறுதல், நம்பிக்கை எனப் பல்வேறு உணர்வு கிளர்த்தல்களை நிகழ்விப்பனவாய்ப் பாடல்கள் இசைக்கப்படுகின்றன. பாடகர்களும், இசையமைப்பாளரும் விசேடமாய்ப் பாராட்டப்பட வேண்டியவர்களே.

பார்வையாளரின் கவனத்தைச் சிதறடிக்கும்-கிழவன் பாத்திரம் பேசும் அநாவசியமான சிரிப்பு வசனங்கள்-, நாடக நிகழ்வுப் போக்கின்

www.tamilarangam.net

முக்கிய கட்டத்தில் கையாளப்படும் பலஸ்தீனக் கவிதையில் வரும் 'ஒலிவ்மரம்' என்ற பொருந்தாச் சொற்பிரயோகம், உறைநிலைக் காட்சிகளில் நடிகர்கள் சிலரின் கால இசைவின்மை, சில எடுத்துரைஞர்களின் பாவமற்ற குரல்-செயற்பாடுகள் என்பன, நெறியாளர் கவனத்திலெடுத்துச் செம்மைப்படுத்த வேண்டியவை.

மையம் சிதைந்த பலவீனமான பிரதியினைக் கொண்டிருந்த போதிலும், நெறியாளரின் படைப்பாற்றல் பொருந்திய செம்மையான நிகழ்த்திக் காட்டல்களினாலும், இசை போன்றவற்றைப் பொருத்தமுற இணைப்பதனாலும் பல்வேறு தளங்களில் எமது உணர்வுலகில் அதிர்வுகளையும், விழிப்பினையும் தோற்றுவித்து, மதிப்பினைப் பெறுகிறது இந்நாடகம். இதற்குப் பொறுப்பான நெறியாளர் எமது மதிப்புக்கும், பாராட்டுக்குமுரியவர்.

1956ல் இருந்து எழுபதுகளின் பிற்பகுதிவரை பிழையான-அரசியற் சந்தர்ப்பவாத-இலக்கியத் தலைமைகளின் வழிகாட்டுதல்களினால் இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் இனப்பிரச்சினைகள், கலை இலக்கியப் படைப்புகளில் உரியமுறையில் வெளிப்பாடு கொள்ளவில்லை. 1975 அளவில் எழத் தொடங்கி வலுப்பெற்றுவந்த அதிருப்திக் குரல்களினாலேயே இன்று கவிதையில் குறிப்பிடத்தக்க அளவிலும், நாவல் சிறுகதையில் ஓரளவும் இப்பிரச்சினைகள் வெளிப்பாடு காண்கின்றன. ஆயினும் நாடகத்தில் விரல்விட்டு எண்ணத்தக்க முயற்சிகளே நிகழ்ந்திருக்கின்றன. இந்த வரலாற்றுப் பின்னணியிலும் அச்சமும், அவலமும், நம்பிக்கையும் கொண்ட சமகாலப் பிரக்ஞை தாக்குவலுவுடன் வெளிக் கொணரப்படும் இந் நாடகம், மிக முக்கிய இடத்தை ஸ்திரப்படுத்திக் கொள்கிறது. காலோசிதமாய் இதைத் தயாரித்தளித்த யாழ். பல்கலைக்கழகக் கலைப் பேரவையினருக்கு எமது பாராட்டுக்களும், நன்றிகளும்.

*(இவ்விமர்சனம் 'அலை' 26-ஐப்பசி-1985 சஞ்சிகையில் வெளிவந்தது)*

www.tamilarangam.net

# மண் சுமந்த மேனியர்

## – ஒரு விமர்சனக் குறிப்பு –

### *மௌ. சித்திரலேகா*

யாழ்ப்பாணத்தில் கடந்த சில மாதங்களாக, நாடக உலகுடன் தொடர்புள்ளோர், தொடர்பில்லாதோர், நாடகம் தெரிந்தோர், தெரியாதோர் அனைவர் மத்தியிலும் பேசப்பட்டு வந்த ஒரு நாடகம் 'மண்சுமந்த மேனியர்' ஆகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் பரவலாக எங்கணும், சிலசமயம் ஒரே கிராமத்தில் இரண்டு மூன்று தடவைகளும் இந்நாடகம் மேடையேற்றப்பட்டது. வேறு பல நாடகங்கள் கதைக்கப்படாத அளவு இது பலர் மத்தியிலும் பேசப்பட்டது; விவாதிக்கப்பட்டது. இவ்வாறு இது பெரும்பாலானோரின் கவனத்தைக் கவர்ந்தமைக்குக் காரணம் யாது?

முதலாவது காரணம் இந்நாடகம் தமிழ்பேசும் மக்களது சமகால சமூக அரசியற் பிரச்சினைகளின் சில அம்சங்களை வேறெந்தக் கலைப் படைப்புகளும் எடுத்தாளத் துணியாத சந்தர்ப்பத்தில் கையாண்டமையும், அவை பற்றிய சில கருத்துக்களைக் கூறியமையும் ஆகும்.

இரண்டாவது அதனுடைய வடிவமைப்பு அல்லது அது அளிக்கப்பட்ட முறைமை ஆகும்.

இவ்விரு அம்சங்களும், நாடகம் நடைபெற்ற காலத்து நாட்டுச் சூழ்நிலையும் நாடகத்தைப் பிரபலமாக்கின.. ஆனால் மண் சுமந்த மேனியர் பிரபலமாகியது மாத்திரமல்ல ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்பதுதான் முக்கியம். மண்சுமந்த மேனியரின் மேடையேற்றங்களுக்குப் பின்னர், கலை வடிகங்கள் மூலம் கருத்துக்களைக் கூறுதல், பிரசாரங்களை மேற்கொள்ளுதல் பரவலாக நடைபெறுவதை அவதானிக்கலாம். யாழ்பாணக் குடாநாட்டில் மாத்திரம் நிகழும் தற்காலிக அமைதி இதற்குரிய வலுவான சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாயினும் இவ்வழியில் மணசுமந்த மேனியரும் பங்களித்துள்ளது என்பது மறுக்கமுடியாததாகும். குறிப்பாக சமீபகாலமாக நடைபெறும் சில வீதி நாடகங்கள் (வீதி நாடகத் தன்மையை அவை முழுமையாகப் பெற்றிராவிட்டாலும் கூட) மண்சுமந்த மேனியர் ஏற்படுத்திய அருட்டுணர்வின் விளைவுகளாகும் எனலாம்.

மண்சுமந்த மேனியர் நாடகம் பற்றிய பற்பல புகழுரைகளும், பாராட்டுரைகளும், விமர்சனங்களும் ஏற்கனவே நிகழ்ந்துள்ளன.

www.tamilarangam.net

அவற்றில் சில பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளியாகியும் உள்ளன.

அவை தொட்ட விடயங்களை விட்டு இங்கு வேறு சில விடயங்களை, நாடகத்தின் அளித்தல் அல்லது நிகழ்த்தல் முறைமை, அரங்க அம்சங்கள் ஆகியவை பற்றிச் சிறிது எழுதலாம் என நினைக்கிறேன்.

மண்சுமந்த மேனியரின் எழுத்துப் பிரதியை நாடக மேடையேற்றத்துக்கு முன்னரே படிக்கின்ற சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. நாடகப் பிரதியில் நான் முதல் கவனித்தது காட்சிகள் பெருமளவு விஸ்தாரமாகத் தீட்டப்படாமலும், மேடை நிகழ்ச்சிக் குறிப்புகள் நடிகரது இயக்கத்தைக் குறிக்கும் குறிப்புகள் அதிகமின்றியும் இருந்தமைதான். ஆரம்பத்தில் உள்ள பாரதக் காட்சியைப் பற்றிய குறிப்புகள் தவிர எவ்வவாறு நடிப்பது, அசைவது. என்பது பற்றிய குறிப்புக்களோ நிகழ்ச்சிகளின் விவரணமோ நாடகப் பிரதியில் இல்லை. ஆரம்பத்திலேயே நாடகப் பிரதியில் இவ்வாறு ஆசிரியர் எழுதியுள்ளார். 'எவற்றுக்கு முக்கியம் கொடுத்து எவ்வாறு நடிப்பதென்பது நெறியாளரின் விருப்பத்துக்கு அமைவது நல்லது.' நாடகப் பிரதியில் காணப்படும் இந்த நெகிழ்ச்சித் தன்மை நெறியாளனின் வியாக்கியானங்களுக்கு நிறைய இடம் தருவதாகும். சுதந்திரமாக நெறியாளன் கற்பனை செய்வதற்குக் களம் அமைப்பதாகும்.

நெறியாளனின் சுதந்திரத்திற்கு இடம்கொடுத்து நெகிழ்ச்சியான பிரதியை எழுதுவதென்பது இலகுவானதாகத் தென்படலாம். ஆனால் அந்நெகிழ்ச்சித் தன்மை நாடகத்தின் அடிக்கருத்தை, களத்தை, கட்டுக்கோப்பை மாற்றுவதற்கு இடந்தருதல் கூடாது. எனவே இவ்விரு அம்சங்களையும் ஒருசேரப் பேணுதல் கடினமான பணியாகும். நாடகப் பிரதியாக்கம், நெறியாள்கை என்பவை பற்றிய அறிவும் அனுபவமும்தான் இத்தகைய பிரதிகளை எழுதும் திறமையை அளிக்கின்றன. நாடகத்தை எழுதிய சண்முகலிங்கம் இந்தத் திறமையை உடையவர் என்பதை நாடகம் உணர்த்துகிறது.

நாடகம் ஒரு தொடர்புக் கலை. இதன் மூலம் நாடக ஆசிரியனும், நெறியாளனும், நடிகரும் மக்களுடன்-பார்வையாளருடன் தொடர்பு கொள்கின்றனர். அவர்களுக்கு நாடகாசிரியனும் நெறியாளனும் தமது கருத்தைக் கூறுகின்றனர்; செய்தியைச் சொல்ல முனைகின்றனர். கருத்தைக் கூறுவதென்பது நிகழ்ச்சியைச் சித்திரிப்பது அல்ல;

www.tamilarangam.net

நிகழ்ச்சியை விமர்சிப்பது. அந்த விமர்சனத்தின் ஊடாக பார்வையாளரை மேற்கொண்டு சிந்திக்கவும் செயற்படவும் ஆற்றுப்படுத்துவது.

பார்வையாளரை இயக்கமற்றோராகவும், வெறும் ரசிகராகவும் நெறியாளன் கருதினால் நாடக மேடையில் 'சீன்'களையும், தத்ரூபமான காட்சிகளையும் காட்டிவிட்டுத் திருப்தி அடையலாம். இத்தகைய இயற்பண்பு வாய்ந்த நாடக முறைமைதான் 20ம் நூற்றாண்டின் முற்பகுதிவரை மேற்குலக நாடக அரங்கிலும் பிரபலம் வாய்ந்திருந்தது. ஆனால் கருத்துக்களை வலுவாகக் கூறவோ பார்வையாளரைத் தூண்டவோ இம்முறை வலுவற்றது என்பதை பிறெஃக்ற் போன்ற நாடக மேதைகள் உணர்ந்தனர். இதனாலேயே இயற்பண்பு நாடக முறைமையைக் கைவிட்டு வியாக்கியானங்களுக்கும் விமர்சனங்களுக்கும் அதிக இடக் கொடுக்கும் எடுத்துரைஞர் இடம்பெறும் 'எப்பிக்' நாடக முறைமையை அவர் கையாண்டார். பார்வையாளர், நாடகத்தை விலகி நின்று பார்த்துச் சிந்திக்கும் ஒரு முறையையும் அறிமுகப்படுத்தினார். 'பார்வையாளன் நாடக அரங்கத்துள் நுழையும்போது நுழை வாயிலில் தனது தொப்பியுடன் சேர்த்து மூளையையும் கழற்றி வைத்துவிட்டு வருவதில்லை' என்று ஒருபோது கூறிய பிறெஃக்ற் பார்வையாளரின் சிந்தனைத் திறனை நாடகத்தின் தலையாய கடமை எனக் கூறினார்.

நாடகத்தைப் புறந்தள்ளி நின்று பார்க்கும் நிலை தமிழ் நாடகப் பார்வையாளர்களுக்குப் புதிதல்ல. எமது கிராமியக் கூத்துக்களைப் பார்போரிடம் இந்த அம்சங்களைக் காணலாம். தமது உறவினர், தெரிந்தவர் கூத்து ஆடும்போது மாலை போடுதல், தேநீர் கொடுத்தல் எல்லாவற்றையும் பார்வையாளர் ஏற்றுக் கொள்ளவே செய்வர்.

மண்சுமந்த மேனியர் நாடகத்தில் காணப்பட்ட முக்கிய அம்சம் அது பார்வையாளரை அடிக்கடி புறந்தள்ளி நின்று பார்க்கவைத்தமை தான். நாடகம் முழுவதிலுமே இப்பண்பு விரவி நின்றபோது குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகவும் விசேடமாகவும் காணப்பட்டது. நாடகத்தின் ஆரம்பத்திலேயே இதற்கு உதாரணத்தைக் காணலாம். திரௌபதி, துகிலுரிய உரியாமல், கண்ணன் அருளை நினைந்து பரவசப்படும் காட்சி, உச்சத்தை இடைமுறித்து 'இது நடந்தது பாரதத்தில்' என்று உரைஞர் கூறும்போது நாடகத்தில் இடம்பெறத் தொடங்கிய இப்புறந்தள்ளிநின்று பார்க்கும் அம்சம், நாடகத்தில் தொடர்ந்து செல்கிறது. இதுவே பார்வையாளரைச் சிந்திக்கவும் தூண்டுகிறது.

www.tamilarangam.net

நாடகத்தின் இன்னோர் முக்கியமான அம்சம் ஒரே நடிகரே பல்வேறு பாத்திரங்களாகவும் பல்வேறு நிலைகளையும் ஏற்றுக் காட்டியமையாகும். ஒரு சமயம் தந்தையாகவும், தாயாகவும், மாமனாகவும், அக்காவாகவும், தங்கையாகவும், தம்பியாகவும் இயங்கும் பாத்திரங்கள் பிறிதோர் சமயம் வெவ்வேறு குணாம்சங்களின் குறியீடுகளாக மாறுகின்றனர். தந்தை, தாய், அக்கா, தம்பி, தங்கை என்ற அங்கத்தவர்களைக் கொண்டு சாப்பிடும் வேளையிலும் தூங்கும் வேளையிலும் தனிக்குடும்பமாக இயங்குபவர்கள் கிராமத்தில் அங்கத்தவர்களாக மாறி விடுகிறார்கள். தந்தை குண்டுபட்டு இறப்பவராகவும் நடிக்கிறார். பிறகு தனது வழக்கமான பாத்திர நிலைக்குத் திரும்புகிறார். இதே போல சகுனியாகவும், துரியோதனனாகவும், வீமனாகவும் உரைஞர்களுள் ஒருவரே மாறி மாறி நடித்தமையும் இதற்கு ஒரு உதாரணமாகும். இத்தகைய பன்மை நிலையானது எத்தகைய முரண்பாட்டையும் ஏற்படுத்தாது இயல்பாகவே நிகழ்கிறது. இது நடிகர்களைப் பல்வேறுவகையில் பயன்படுத்துவதற்கும், ஒரு நடிகனிலேயே வெவ்வேறு நிலைகளை ஏற்படுத்தலாம் என்பதற்கும் எடுத்துக் காட்டுகளாகும். நாடகம் என்றால் கட்சி சோடனைகளையும் மேடையிற் தளபாடங்களையும், ஆடை அலங்காரங்களையும் பார்த்துப் பழகிவிட்ட எம்மவர் மத்தியில் மண்சுமந்த மேனியர் ஒரு சவாலாக அமைகிறது. நடிகரின் உடலசைவால், குரலொலியால், சம்பவங்களின் வலிமையால் எத்தகைய ஒரு சூழலையும் உருவாக்கி விடலாம் என்பதற்கு இது நல்லதோர் சான்றாகும். வறிய விவசாயக் கிராமம் என்பதற்குரிய எத்தகைய சோடனையும், வயல், கிணறு, தோட்டம் என்ற எத்தகைய அடையாளங்களும் இன்றியே அத்தகைய ஒரு சூழலைப் பார்வையாளர் உணர்கின்றனர். நடிப்பாற்றல், நடிகனின் கற்பனை, நெறியாளனின் கற்பனை, நடிகரையும் மேடையையும் கையாளும் திறன் ஆகியவை இதற்குக் காரணமாகும்.

நாடகத்தின் களத்திற்கும்-அதாவது கிராமத்து வறிய விவசாயக் குடும்பம், உறவினர் என்ற தளத்திற்கும் நாடகத்தின் நிகழ்த்தல் முறைமைக்கிடையேயும் நல்ல இசைவு காணப்படுகிறது. பஜனைப்பாடல், புராணபடனம், தேவாரம், நாட்டார் பாடல்கள், கிராமிய ஆட்ட மரபிலான அசைவுகள் எல்லாம் நாடகத்தின் களத்துடனும் பாத்திரங்களுடனும் இணைந்து தெரிகின்றது. இது நாடகத்தின் ஒருமை நிலைக்கு மிகவும் உதவுகின்றது.

www.tamilarangam.net

நாடகம் கிராம மட்டங்களில் பெரும் வரவேற்புப் பெற்றதற்கு முக்கிய காரணங்களில் நாட்டார் நாடகத்தன்மையை அது பெற்றிருத்தல் ஒன்றாகும். இது மிக முக்கியமான அம்சம்; எமது கலாசாரம், பண்பாட்டுக் குறியீடுகள், வடிவங்கள் ஆகியவற்றிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளவும் பயன்படுத்தவும் எவ்வளவோ உண்டு என்பதை இந்நாடகம் எடுத்துக் காட்டுகிறது.

இங்கு நான் இந்நாடகத்தின் முக்கிய அம்சங்களாகக் குறிப்பிட்டவை முதற்தரமாக மண்சுமந்த மேனியரில்தான் இடம்பெற்றன என்பதில்லை. 60ம் ஆண்டுகளில் தமிழ்நாடக உலகில் ஏற்பட்ட நவீன சிந்தனையுடன் இந்த அம்சங்கள் பல்வேறு நாடகங்களிலும் இடம் பெற்றன. ஆனால் அந்நாடகங்கள் ஓரிரு மேடையேற்றங்களுடனும், நகர அரங்கங்களுடனுமே நின்றன. மண்சுமந்த மேனியர் இதனை யாழ்ப்பாணத்தின் கிராமங்களுக்கு பரவலாக எடுத்துச் சென்றது. அவ்வகையில் நாடக வடிவம் பற்றிய புதிய சிந்தனைகளைப் பரவலாக்க மண்சுமந்த மேனியர் கணிசமான அளவு உதவியுள்ளது எனலாம்.

*(இவ்விமர்சனம் 'புதுசு'-10-நவம்பர், 1985இல் வெளிவந்தது)*

www.tamilarangam.net

# நாடக விமர்சனம்

## 'மண் சுமந்த மேனியர்'

### *கலையன்பன்*

ஈழத்துத் தமிழ் நாடக வரலாற்றுப் போக்கில் அதன் வளர்ச்சியும் மேன்மையும் கடந்த மூன்று தசாப்தங்களாக முனைப்பாகி வருவதனை நாம் அவதானிக்கலாம். ஈழத்துத் தமிழ் நாடக அரங்கியற் துறைக்கான தனித்துவமான ஒரு மரபினைத் தோற்றுவிக்கும் முயற்சி பல்கலைக்கழகங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்டன. சமூகப் பிரக்ஞை பூர்வமான உள்ளடக்கத்தைக் கொண்ட நாடகங்கள் உருவாகத் தொடங்கியவுடனே உருவ மாறுதல்களும் ஏற்பட்டன.

கொழும்புப் பல்கலைக்கழகத்திலே ஆரம்பத்தில் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கு மொழியை நாடகத்தில் சமூகப் பிரச்சினைகளை வெளிக்காட்டும் விதத்தில் நேர்த்தியாக உபயோகித்தனர். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கிராமியக் கூத்து மரபுகளை அடியொற்றி நவீன அரங்கிற்குரிய அம்சங்கள் பொருந்திய நாடகங்கள் தயாரிக்கப்பட்டன. கட்டுப்பெத்த வளாகத்தில் பல பரீட்சார்த்த மொழிபெயர்ப்பு நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

பல்கலைக் கழகங்களுக்கு வெளியே நாடோடிகள், கூத்தாடிகள், அம்பலத்தாடிகள் போன்ற நாடகக் குழுக்களும், நடிகர் ஒன்றியம், அவைக்காற்றுக் கலைக்கழம், நாடக அரங்கக் கல்லூரி ஆகிய அமைப்புக்களும் பல்வித அரங்கியற் பயிற்சி நெறிகளையும் உருவ-உள்ளடக்க விஷயங்களையும் கருத்தில் கொண்டு நாடகங்களை மேடையேற்றின. தேசிய கலை இலக்கியப் பேரவைக் கொழும்புக் கிளையினர் சில மாதகாலம் நாடக அரங்கப் பயிற்சி வகுப்புகளை நடத்தினர். யாழ்ப்பாணத்தில் நாடக அரங்கக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு பலபகுதிகளையும் உள்ளடக்கிய நாடக ஆர்வலர்களை ஒன்றிணைத்து வருடக்கணக்கில் அரங்கியற் பயிற்சி பற்றிய பல்வித நெறிகள் தொடர்பான வகுப்புகளை நடாத்தி பல நாடகங்களையும் நிகழ்த்திக் காட்டினர்.

இத்தகைய நாடக முயற்சிகளின் வளர்ச்சிபற்றி பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் 'நாடகம் நான்கு" எனும் நூலின் முன்னுரையிலே

www.tamilarangam.net

குறிப்பிடும்போது '1968ம் வருடம் மேடையேறிய நாடகங்களும் அவற்றைத் தொடர்ந்து தயாரிக்கப்பட்ட நாடகங்களும் உலக நாடகப் பரீட்சார்த்த முயற்சிகளை உள்வாங்கி அவற்றையும் எமது மரபுவழி நாடக நெறிகளையும் உணர்வு பூர்வமான இணைத்து, ஊடாடவிட்டு, ஈழத்தமிழ் நாடக அரங்கியற்றுறைக்கெனத் தனித்துவமான ஒரு மரபின் வெளிப்பாடாக அமைந்தவை எனக் கூறுவது எவ்வாற்றானும் மிகையாகாது' என்று கூறிய கூற்று இங்கு மனங்கொள்ளத் தக்கது.

தொடர்ந்து வரும் அரசியல் நெருக்கடிகளினால் கடந்த ஒரு சில வருடங்களாக நாடக மேடையேற்றங்களில் தொய்வேற்பட்டிருந்தது. இதனை ஈடு செய்வதுபோல எழுந்த ஒருசில முயற்சிகளுள் 30-3-85ல் யாழ் பல்கலைக்கழகத்தில் கைலாசபதி கலை அரங்கில் கலைப்பேரவையால் ஒழுங்கு செய்யப்பட்ட 'கலாசார நாள்' நிகழ்ச்சியின்போது இடம்பெற்ற 'மண்சுமந்த மேனியர்' நாடகம் நம்பிக்கையூட்டுவதாக அமைந்திருந்தது. திரு. குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் எழுதிய **(Stylised)** மோடிப்படுத்தப்பட்ட இந் நாடகத்தை திரு க. சிதம்பரநாதன் அவர்கள் முற்றிலும் பல்கலைக்கழக மாணவ மாணவியரை நடிக்க வைத்து நெறிப்படுத்தியிருந்தார்.

இன்று தமிழர்கள் வாழும் பகுதிகளில் நடந்துவரும் சம்பவங்களையும் உணர்வுகளையும், தேவை கருதி கிராமியச் சூழலைப் பின்னணியாக வைத்து வன்னிவள நாட்டுப்பாடல், சேரன் கவிதைகள், பாலஸ்தீனக் கவிதைகள் என்பவற்றைப் பொருத்தமான இடங்களில் வைத்துக் கதைப் பொருளை நிகழ்த்திக் காட்டியமை தேசிய நாடகமரபின் வளர்ச்சிக்கு ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தும் நல்லதொரு முயற்சியாகும்.

'மண்சுமந்த மேனியர்' என்ற இந் நாடகத்தின் பெயரும் ஆரம்பத்தில் வரும் நாட்டுப்பாடல் அடிகளைக் கொண்ட பஜனை ஊர்வலமும் பிட்டுக்கு மண்சுமந்த புராணக் கதையை நினைவுபடுத்தினாலும் கதையின் பின்னணியில் தமது உழைப்புக்கும் வாழ்வுக்கும் மண்ணையே நம்பி மண்ணிலே கிடந்து, மண்ணிலே தோய்ந்து வாழும் உழைப்பாளிகளின் குரல்களே உறுதியாகக் கேட்கின்றது.

பாரதியின் 'பாஞ்சாலி சபதத்தை' நினைவுறுத்துவது போல அமைந்த பாஞ்சாலி துகிலுரிய 'நெட்டை மரங்களென' நின்று அவையோர் பார்க்கும் காட்சி, கொடுமைகளைக் கண்டும்

www.tamilarangam.net

வாளாவிருக்கும் பார்வையாளர்கள் பங்காளர்களாக மாற வேண்டும், பாதிப்புகளுக்கு எதிராகப் போராட வேண்டும் என்ற நாடகக் கருப்பொருளை முன்னறிவிப்பதாக அமைகிறது. ஆயினும் அந்த அறைகூவல் வெறும் இனவிடுதலைக்கான கோஷமாக இல்லாமல், தரகு முதலாளித்துவ அமைப்பு கட்டிக்காத்து வலுப்படுத்தும் தனியுடைமை முறையின் பொருள் தேடும் வெறித்தனங்களை அம்பலப்படுத்தியும், அதன் உற்பத்திகளான கூலிப் பிரச்சினை, நிலப்பிரச்சினை, எண்ணெய்விலை, மருந்துவிலை, அன்றாட வாழ்க்கைப் பிரச்சினை யாவையும் வெளிக்காட்டுவதும். செங்கொடியை நினைவுபடுத்துவதும், எல்லோரும் சேர்ந்து பெருமரத்தை இழுத்துச் சரிப்பது போன்ற காட்சிகளையும் முழுமையாக நோக்கும்போது சில தவறுகள் இருந்தபோதும் கதை ச்மூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் பின்னப்பட்டிருப்பதை வெளிக்காட்டி நிற்கிறது.

தனியுடைமை அமைப்பின் கீழ் மாடாக உழைத்தும் வாழ வகையற்று வாடும் சாதாரண தொழிலாள விவசாயிகளே எண்ணிக்கையில் மிக அதிகமானவர்கள். அவர்கள் விழிப்படைந்து பங்குபற்றாத எந்தப் போராட்டமும் வெற்றி பெறுவதில்லை; முழுமையடைவதில்லை என்பது வரலாறு கூறும் உண்மை. ஆனால் அவர்கள் தமது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைக்ளிலிருந்து விழிப்படைந்து அரசியலில் பங்கு கொண்டு போராட எழுந்த போதெல்லாம் அவற்றை திசைதிருப்பி மழுங்கடிப்பதற்காகவே எமது நாட்டில் நவகாலனித்துவத்தினாலும், முதலாளித்துவ பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளினாலும் இனப்பிரச்சினை திட்டமிடப்பட்டே கூர்மைப்படுத்தி வரப்பட்டுள்ளது. இதனால் அரசியலில் இருந்து அந்நியப்படுத்தப்பட்ட மக்கள் வெறும் துண்டுபோடும் பார்வையாளர்களாக மாற்றப்பட்டிருந்தார்கள். இன்று இனப் பிரச்சினை தலைவர்களது கைகளினின்று மாறி இளைஞர்களால் இனவிடுதலைப் போராட்டமாக முன்னெடுக்கப்பட்ட போதும் மக்கள் தன்னம்பிக்கை அற்றவர்களாக, அடுத்தவர் கையை எதிர்பார்ப்பவர்களாக, நாடகத்தில் கிழவர் கூறுவதுபோல 'கிப்...கிப்..குறே!' **(Hip Hip Hurray!)** போடும் பார்வையாளராக இருப்பதில் வியப்பில்லை. இந்த நிலையில் மாற்றத்தை ஏற்படுத்த உழைப்பாளிகளான பெருந்தொகையான மக்களின் பிரச்சினைகளையும், போராட்டங்களையும் அங்கீகரிப்பதுடன் அவர்களது நிலைப்பாட்டில் தங்கி நின்று எதிரியை எதிர்ப்பதுமே சரியான மார்க்கமாகும். இதன் மூலம்

www.tamilarangam.net

'இவர்களும் சேர்ந்து விளையாடுறாங்கள்' என்று அலுத்துக் கொண்டதும் நன்றாக அமைந்தது. 'மாநிலச் செய்தி மூலம் அந்த ஆட்சி வந்திடுமெண்டு வாயைப் பிழந்து வடக்கை பாக்கிற கூட்டம்' என்று கிழவன் விமர்சிப்பதும் சிந்தனையைத் தூண்டி விடுகிறது.

மாநிலச் செய்தியை ஆவலுடன் கேட்பவராக நடித்த திரு.சர்வேந்திராவின் கணீரென்ற குரலும் பாத்திரப் பொருத்தமுடையதாக இருந்தது. மாநிலச் செய்தி வாசிப்பவராக நடித்த செல்வி. கே. குலசுந்தரி 'போலச் செய்தல்' (Imitation) மிகவும் ரசனையாக அமைந்தது. மேலும் பாஞ்சாலியாகவும், உரைஞராகவும் வந்து, சொல்லழுத்தத்துடன் பேசிய வசனங்களும் உணர்வுடன் கூடிய நடிப்பும் இவரது நடிப்பாற்றலை வெளிப்படுத்தின.

மாணவனாக நடித்த திரு. எஸ். கஜேந்திரகுமார் வாடிய தேகமும் மேடையின் இடது மேல் மூலையில் தொடர்ந்து படிக்கும் பாவனையில் அமர்ந்திருந்ததும் பொருத்தமாக இருந்தது. அவர் விரலை மடித்து படித்ததை ஞாபகப்படுத்தியவாறு உலாத்துவதும் மீண்டும் மீண்டும் ஞாபப்படுத்திக் கஷ்டப்படுவதும், இந்தப் பாத்திரத்தின் மேல் பார்வையாளருக்குப் பரிதாபத்தை ஏற்படுத்தி விடுகிறது. எனினும் இவர் மேசைகதிரையில் இருக்காமல் சிறிய ஸ்ரூலிலோ மண்குந்திலோ படித்திருந்தால், அவரது குடும்ப நிலையைப் புரிந்து கொள்வது சுலபமாயிருக்கும். அவரது சகோதரிகளாக நடித்த செல்வி என். கார்த்தியாயினி, செல்வி கே.மாலதி, வெங்காயம் கிண்ட, புல்லுப் பிடுங்கச் செல்லும் கூலியாட்களென்பதனால் கடும் நிறச் சேலையோ அன்றேல் முழுப்பாவாடை சட்டையோ அணிந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். மென் நிறச்சேலை பாத்திரத்துக்குப் பொருத்தமற்றதாக இருந்தது.

தாக்குதலால் ஏற்பட்ட செத்த வீட்டில் 'முத்துப் பதித்த முகம், முதலி மார் மதித்த முகம்' என்று ஒப்பாரி பாடியபோது சபையில் நிசப்தம் நிலவியது.

கிழவன் பாத்திரம் இந்த நாடகத்தின் கருவை இயக்கும் காத்திரமான படைப்பு. இப்பாத்திரத்தின் வாயிலாகப் பேசப்படும் வசனங்கள் அநேகமான நிகழ்காலப் போக்கின் யதார்த்த உண்மைகளைப் புட்டுக் காட்டுவதாகவுள்ளன. இப் பாத்திரம் பேசும் வசனங்கள் கிழவன் சார்ந்திருக்கும் உழைப்பாள வர்க்கத்தின் போர்க் குணத்தை வெளிப்படுத்துகின்றன. '...காலாதிகாலமா எங்கடை சனங்கள் குந்தியிருந்து வந்த நிலம்' என்று கிழவன் சொன்னதும், 'உறுதியள் எங்களிட்டை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதுகளுக்கில்லை. ஆனால் இருந்தே தீருவம் எண்ட மன உறுதியள் எங்களிட்டை இருக்கு' என்று உறவினர் சொல்லியதும் 'இதை வித்துச் சுடுறவை என்ரை பிணத்தை இந்த மண்ணிலை புதைச்சுப்போட்டு அப்பிடிச் செய்யுங்கோ' என்ற போர் முரசமும்; 'கூலிக்கு மண்ணிலை வேலைசெய்த எங்கடை காலிலை இந்த மண்தான் காவிபடிஞ்சிருக்குது... 'காலிலை மட்டுமே, காலகாலமா குந்தி இருந்து மண்ணைக் கிளறினம். மண்ணிலை இருந்து கிளம்பிற புழுதி, வேர்வையாலை நனைஞ்ச எங்கடை கோவணச் சீலையிலை படிஞ்சு ஊறிக் கிடக்குது'... 'தோய்க்கத் தோய்க்க மண்காவி ஏறிச் சிவப்புக் கொடியாய்... காத்திலை ஆடிக் காயுது', என்ற வசனங்கள் போர்க்குணம் மிக்க உழைப்பாளிகளின் வர்க்க உணர்வை வெளிப்படுத்துகின்றன. இத்தகைய வார்த்தைகளும், உணர்வுகளும் இத்தகைய பாத்திரங்களின் வரலாற்று வளர்ச்சியைக் காட்டக் கூடிய தீண்டாமை ஒழிப்பு, நிலப் போராட்டம் போன்றவற்றில் பங்கு பற்றிய பாத்திரக்களை நினைவூட்டுகின்றன. ஆனால் கடந்தகால இனவாதத் தலைவர்கள் செங்கொடியை எதிர்த்த போதெல்லாம் செங்கொடியைப் பாதுகாத்து வளர்த்த வர்க்கம் அதன் உணர்வை வெளிப்படுத்தும்போது வசனங்களின் ஆழங்களில் பொதிந்திருக்கும் உணர்வு நாடகத்தில் வெளிப்படவில்லை.

இக்கிழவன் பாத்திரத்தில் நடித்த திரு எஸ். ஞானசேகரனின் நடிப்பு பார்வையாளரைப் பெருமளவில் கவர்ந்த போதும், தனது பாத்திரத்தை நகைச் சுவையாக்காமல் நடித்திருந்தால் சிரிப்புச் சற்றுக் குறைந்து சிந்தனை கூடியிருக்கும். கிழவன் பாத்திரம் கோவணம் அணிந்து வேட்டித் துண்டு கட்டியிருப்பது மிகப் பொருத்தமாயமைந்தது.

எனினும் கிழவனை சாய்மனைக் கதிரையில் இருக்கவிடாமல் மண்குந்திலோ அல்லது பாயிலோ இருப்பதாகக் காட்டியிருந்தால் மேலும் பாத்திரவார்ப்புப் பற்றிய 'திண்ணை வேதாந்தம் பேசும் அறளை பெயர்ந்தவர்' என்ற சந்தேகம் எழுவதைத் தவிர்த்திருக்க உதவியாக இருந்திருக்கும். இத்தகைய சந்தர்ப்பங்களில் யெனான் கலை இலக்கிய கருத்தரங்கில் மாஓசேதுங் அவர்கள் கூறியதுபோல் 'உடைகள் மட்டும் உழைக்கும் மக்களின் உடைகளாக இருக்கின்றன. ஆனால் முகங்கள் சிறு முதலாளித்துவ வர்க்க புத்தி ஜீவிகளின் முகங்களாகவே இருக்கின்றன' என்ற வரிகளை ஞாபகப்படுத்துகின்றன. கூனல் கிழவியாக நடித்த செல்வி சித்திரா பேச்சால் மற்றோரைக் கட்டுப்படுத்தும் பாத்திரத்தை தனது நடிப்பால் வெளிக் கொணர்ந்தார். 'அண்ணை' அரிவு

www.tamilarangam.net

வெட்டிக் கடனைக் களிக்கிறன், காசு கொஞ்சம் கடனாகத்தாவன்' என்று திரு. கருணாகரன் உற்றாராக வந்து கேட்ட போது 'இரைப்பாரைப் பிடிக்குமாம் பறப்பிராந்து' என்று அயலவர் கூறும் வார்த்தைகளிலும் கடன்காரராகவே காலங்களிக்கின்ற மக்களின் முகங்களைப் பார்க்க முடிந்தது.

'பூமியை நம்பி புத்திரரைத் தேடிவந்தோம்' என்ற தமிழர் நாட்டுப் பாடல்களும், 'விடுதலைக்கான பயங்கரப்போரை எதிரியின் எதிரில் நான் பிரகடனம் செய்வேன், சுதந்திரமான மனிதர்கள் பெயரால்/ தொழிலாளர்கள், மாணவர்கள், கவிஞர்கள் பெயரால்/நான் பிரகடனம் செய்வேன்' என்ற பலஸ்த்தீனக் கவிதைகளும் எழுச்சியை ஊட்டுவனவாய் அமைந்தன.

வயலில் வேலை செய்கின்ற காட்சியில் வருகின்ற வசனங்களில் அழுத்தம் பெற வேண்டியவற்றுக்குச் சற்றுக் கூடிய அழுத்தத்தை நெறியாளர் கொடுத்து அக்காட்சியில் கூடிய கவனம் செலுத்தியிருக்கலாம்.

இறுதியாக எல்லோரும் இணைந்து பெரிய மரமொன்றை இழுத்து வீழ்த்தும் போது 'தூக்குறு மோர் தயிர் நோக்கியருந்திய, துவரை நகர்க்கிறையாம்' என்ற நாட்டுக் கூத்துப் பாடலுடன் விறுவிறுப்பாக நாடகம் முடிவடைகிறது.

இந்நாடகத்தில் அண்ணனாகவும், அர்ச்சுனனாகவும் நடித்த திரு எஸ். யோகானந்தம், சகுனியாகவும் உரைஞராகவும் நடித்து மெருகூட்டிய திரு. செல்வராஜ் மற்றும் உரைஞராகவும் தருமராகவும் நடித்த திரு. ரவி, உறவினர்களாக நடித்த திரு. அல்பிரட் கிறிஸ்டி, திரு. விந்தன், ஏனைய பாத்திரங்களை ஏற்று நடித்த அனைவருமே சிறப்பாக நடித்திருந்தனர்.

நுண்கலைப் பிரிவு மாணவ மாணவியர்களின் பாடல்களும் ஆரம்பமுதல் முடிவு வரை நாடக உணர்வோடு ஒன்றி தாளலயம் தப்பாது அமைந்தமை பாராட்டுக்குரியதாகும். திரு. கண்ணன் இந்நாடகத்திலும் தனது இசையமைப்பைத் திறம்படச் செய்திருந்தார். குறிப்பாக நாட்டுப் பாடல்களுக்கு புதிய இசை வடிவம் கொடுத்தமை பாராட்டுக்குரியது.

நெறியாளர் திரு. சிதம்பரநாதன் இதற்கு முன்பும் ஆசிரியர் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'நாளை மறுதினம்', 'மாதொரு பாகம்', நரகத்தில் இடற்படோம், சத்தியசோதனை சிலையின் சீற்றம், ஆகிய நாடகங்களையும், 'ஆச்சிசுட்டவடை', முயலார் முயல்கிறார்', 'அன்னையும்

www.tamilarangam.net

பிதாவும்', போன்ற சிறுவர் நாடகங்களையும் நெறிப்படுத்தியுள்ளார். இவரது ஓய்வற்ற முயற்சி தொடர்வதுடன், விமர்சனங்களால் செழுமை பெற்று மேலும் மக்கள் மத்தியில் இந்நாடகம் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதே அனைவரது விருப்பமாகும். இந்த நெருக்கடியான காலகட்டத்தில் இந்நாடகத்தை எழுதிய ஆசிரியரின் துணிச்சல் பாராட்டுக்குரியது. மேலும் இதுபோன்ற பல நாடகங்களை அவர் வழங்க வேண்டும்.

*(இவ்விமர்சனம் 'தாயகம்'11, மே 1985இல் வெளிவந்தது.)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காலத்தை வென்று நிற்கும் 'மண் சுமந்த மேனியர்'

## சங்கர செல்வி

ஈழத்தமிழரின் வரலாற்றுப் போக்கில் முக்கிய திருப்புமுனைக் கட்டமாக விளங்கும் இக்கால கட்டத்தில் காலக் கண்ணாடியாகவும், எதிர்காலத்தை முன்னெடுப்பதாகவும் இருக்க வேண்டிய இலக்கியங்கள் பல வடிவில் எழுந்து வருகின்றன. அந்த வகையில் சமகாலத்தைப் பிரதிபலித்து எதிர்காலத்தை நிதர்சனமாக்கும் தீர்க்க தரிசனப் பார்வையுடன் படைக்கப்பட்ட நாடக இலக்கியமே 'மண்சுமந்த மேனியர்'

குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் பழுத்த அறிவிலும், ஆழ்ந்த புலமையிலும், கூர்மையான பார்வையிலும் புடம் போடப்பட்ட கரு, கதை, நாடகப் பிரதி, சிதம்பரநாதனின் நெறியாள்கையின் திறமையில் மேடை நிகழ்வு ஆகியது. கடந்த வருடம் மார்ச் 30 முதல் தொடர்ச்சியாக பல மாதங்களாக 60க்கு மேற்பட்ட மேடைகளைக் கண்டு, மக்கள் நினைவுகளில் நிலைபெற்ற ஒன்றாக, ஒப்பிலா காவியப் பண்புடையதாக நிலைத்து நிற்கிறது.

காலம் காலமாய் அடிபட்டு, உழைத்து விடிவு காணாத குடும்பம், ஊர்த் தொழுவாரம் பார்க்கப் புறப்பட்ட மூத்த மகன், வசந்தத்தை எதிர்பார்த்து காத்து நிற்கும் இரு குமர்கள், இவர்களை வாழவைக்க இளையவனை எதிர்பார்க்கும் தாய் தந்தையர், பரீட்சையில் தேறமுயலும் இளையவன், இவர்களைச் சுற்றிய இனம், இனசனம், சமூகம், சமூக விழுமியங்களால் பாதிக்கப்பட்ட சிந்தனை, சமூக ஓட்டத்தால் பாதிப்புற்ற இவர்கள் வாழ்வு, இவற்றுக்கான தீர்வு, என்பவற்றின் மொத்தக் குவியல், நாடகத்தின் நாயகர்களாகவும், கருப்பொருளாகவும் அமைகின்றன.

உள்ளீடாக இதனைவிட மேலும் ஒருபடி செல்கிறார் நாடக ஆசிரியர். சமகால அடக்கு முறைகள், அடிமைத்தனங்கள், சிந்தனைப் பிறழ்வுகள், சமுதாய பிற்போக்குதனமான மூடப் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், ஆட்சியின் அகங்காரம், அதிகாரம், அதனால் பிறந்த அவலம் என்பவற்றை குறியீட்டு நிலையில் முன் வைக்கும் ஆசிரியர் அதற்கான தீர்வையும் கொடுக்க முயற்சிக்கிறார். நடைமுறைப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க முடியாமல், நாட்டை விட்டே ஓடி, இங்கிருக்கும் பிணங்களின் மேல் அந்நியப்பட்ட அர்த்தமற்ற சோகம் நிரம்பிய சுகபோக வாழ்வை வாழ முற்படும் மக்களுக்கு அதிரடி கொடுக்கிறார். இதற்கும் மேலாக தன் வீட்டு/நாட்டுப் பிரச்சினைக்கு

www.tamilarangam.net

வெளிநாட்டில்/பிறத்தியாரில் நம்பிக்கை வைக்கும் அவலத்தையும் நையாண்டி பண்ணும் ஆசிரியர் மக்களின் பணி என்ன என்பதைக் கூறாமல் கூறுகின்றார்.

சமகால மக்களின் நிலைப்பாட்டைக் கூறும் பாவனையில் கடவுள் வாழ்த்தை அமைத்தாரோ என்னவோ நாடகம் கரிமுக விநாயகனைத் துதிபாடிச் செல்லும் கூட்டத்தினரை மேடை, சபை இரண்டினூடும் ஊர்வலம் செல்ல வைப்பதுடன் ஆரம்பமாகிறது. இதிகாசக் கதைகளின் ஆழ்ந்த ஈடுபாடு காரணமாகவும், சொல்ல வந்த பிரச்சினையில் அதன் தாக்கம் கருதியும் மகாபாரத சூதாட்டப் படலம் பொருத்தமாக நிகழ்த்தப்படுகிறது.

அன்று கண்ணன் இதிகாசக் கதையில் பாஞ்சாலியைக் காப்பாற்றினான் அது இதிகாசம். ஆனால் எங்கடை வரலாறு, யாரும் எங்களைக் காப்பாற்றுவினம் என்று நினைக்க வேண்டாம்' எனும் சாரப்பட எங்கடை கையே எங்களுக்கு உதவி என்று திட்டவட்டமாகக் குறிப்பிடுகிறார் ஆசிரியர்.

'வாரணம் பொருத மார்பும்' எனும் கம்பராமாயணப் பாடல் பொருத்தமாக அன்றைய, இன்றைய இலங்கை அரசியல் தலைவரின் நிலைப்பாட்டை எடுத்துக் காட்டுகிறது. 'தங்கள் தாங்கள் தப்பினாற் போதும், யாரும் நெஞ்சைக் கொடுக்கட்டும்' என்ற மனோநிலை கொண்ட மார்தட்டும் எம்மவர்களை இழிவு செய்யும் ஆசிரியர் 'உன்டை வீட்டில் நெருப்பு வரும்வரை உறங்கிக் கிடப்பாய்' எனும் சேரனின் வரிகளை பொருத்தமுறக் கையாள்கிறார். இது படைப்பாசிரியரின் சமகாலக் கவிதைகளில் காட்டும் ஈடுபாட்டையும் சுட்டிக் காட்டுகிறது.

கருத்து ஆழம் மிக்க அனுபவப் புதையல்களான பழமொழிகளை அவ்வப்போது 'கிழவர்' எனும் பாத்திரமூலம் வெளிப்படுத்துவது கதைக்கு கனத்தையும், சபைக்கு நகைச்சுவையையும் அள்ளி வழங்குகிறது.

'கன்னி கழியாப் பாவம் விறுமசத்தி பிடிக்கும்'.

'சுத்திச் சுத்தி சுப்பற்றை கொல்லைக்கைதான்'.

'அடியடா படலையிலை'.

'கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும்'.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'.

'ஊராட்டி நெய்யே என் பெண்டாட்டி கையே'.

www.tamilarangam.net

'ஆற்றையின் கையிலை கொடுத்துப் போட்டு சும்மா இருக்குதுகள் சனியன்கள்'.

'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து'.

'சோழியன் குடுமி சும்மா ஆடாது'.

'இரப்பானைப் பிடிக்குதாம் பறப்பிராந்து'.

'பொரிமாத் தோண்டி....' போன்றவை நாடகத்தின் சுவையை மேலும் மேலும் கூட்டுகின்றன. இவற்றை விட கிறிக்கற் கதை, பட்டினத்தார் பாடல், நாட்டார் வழக்கு, துணுக்குகள், கிராமிய கதை சொல்லும் பாங்கு, தேவாரப் பாடல்கள், இதிகாச இணைப்புகள் என்பன உயர்த்துகின்றன. அத்துடன் ஆசிரியன் நுண்ணறிவையும் புலப்படுத்துகிறது.

ஒப்பாரி, கொண்டாட்டம், சோகம், வீரம் போன்ற உணர்ச்சி நிலைகளை வெளிப்படுத்த நாட்டார் பாடல்கள் கைகொடுக்கின்றன. துள்ளல் இசையுடன் கூடிய 'இஞ்சிக்கு ஏலம் கொண்டாட்டம்' எனும் பாடல் நாடகக் கட்டத்தை மேலும் மெருகூட்டி பார்வையாளர் நெஞ்சை நெருடும் காட்சியாகிவிடுகிறது. 'சொல்ல முடியாத துயர் நாங்கள் பட்ட பாடுகளால்' எனும் சோகப்பாடல் எம்மக்களின் 58 முதலாய கலவரங்களில் விளைந்த சோகத்தை மீண்டும் மீண்டும் நினைவில் நிலைநிறுத்தி வைக்கிறது.

பாலஸ்தீன மொழிபெயர்ப்பு கவிதைகள் வேற்று நாட்டு கலாசார உணர்வை ஏற்படுத்தியபோதும், அதனுள் உறைந்திருந்த உணர்ச்சி வேகம் எம்மவர்க்கு இசைவுடையதே.

'எனது நாட்டில் ஒரு சிறு நூலகம் இருக்கும்வரை ஒரு சிறு ஏலிவ் மரக்கிளை இருக்கும்வரை விடுதலைக்கான எனது பிரகடனத்தை....'

என்று அதனை பொருத்தமுற இணைக்கும் ஆசிரியர், கொண்டாட்டம், கல்யாண அழைப்பின்போது விடுக்கின்ற அழைப்புப் போல், 'சுற்றம் சூழ வந்து களத்தில் இறங்க' அறைகூவல் விடுகின்றார்.

சமகால சமூகப் போக்கையும் சிக்கலையும் எடுத்துக் காட்டும் முகமாக குவிமையப்படுத்தப்பட்ட தனி ஒரு கதையமைப்புக் கரு இல்லாது போனாலும், சமுதாயத் தேவை கருதி பல பிரச்சினைகளை அணுகும் ஆசிரியர் பணக்காரரின் வெளிநாட்டுப் படிப்பை சீண்டவும், இப்ப உள்ள நிலையில் இயன்றவரை படி என்று மாணவர்க்கு அறிவுறுத்தவும், 'மண்ணைத் தோண்டி கோவணமும் செந்நிறமாகி

www.tamilarangam.net

மண்சுமந்த மேனியராய்க் காட்சியளிக்கும் செங்கொடிச் சித்தாந்தத்தை'க் கூறவும் செய்கிறார்.

தமிழ் மக்களின் இன்றைய நியாயமான போராட்டத்தை வலியுறுத்தி அதனை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என தீர்க்கமாக முடிவு கூறும் ஆசிரியர், குறியீட்டுப் பாவனையில் அதனைக் காட்சிப்படுத்துகிறார். காடு அழித்து, மரம் வீழ்த்தி, மண் பண்படுத்தி, பயிரிட்டு, விளைச்சலைப் பெறுகின்ற நிகழ்வுகளை-தமிழ் மக்களின் எதிரிகளை வீழ்த்தி நல்வாழ்வு பெறுவோம் என்று நாடகத்தை நிறைவு செய்கிறார் ஆசிரியர்.

கண்ணனின் இதமான இசையமைப்பிலும், நடிகர்களின் தரமான நடிப்பிலும், உரைஞர்களின் இறுக்கமான கதை சொல்லும் பாணியிலும், பாடகர்களின் கனிவான குரலிலும், சிதம்பரநாதனின் அருமையான நெறியாள்கையிலும், மண்சுமந்த மேனியர் என்னும் நாடகம் காலத்தை வென்று நாடக ஆசிரியரின் பெயரை நிலை நிறுத்துகிறது.

*(இவ்விமர்சனம் 'ஈழமுரசு' நாளேட்டில் (18-05-86) பிரசுரிக்கப்பட்டது)*

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மண் சுமந்த மேனியர் - II

## 25.05.1986

- முன்திரை மூடப்பட்டிக்கிறது. பொருமுகத்தின் வழியாக வாத்தியார் வந்து மத்திய முன் மேடையில் நின்று பார்வையாளரைப் பார்த்து....

**வாத்தி -**

எல்லா இடங்களிலும்
தங்கள் அடிமைப் பாடல்களை
- ஒப்பாரிகளை சோக கீதங்களை
மகிழ்ச்சிப் பாடல்களை -
பாடிக் கொண்டிருக்கும் எனது மக்களுக்காக

- இதைக் கூறிவிட்டு விரும்பினால் வாத்தியார் மேடைக்குள் சென்று தனக்குரிய இடத்தில் நிற்கலாம். அல்லது முன் மேடையிலேயே நின்று விட்டுப் பின் செல்லலாம். வாத்தியார் சொல்லி முடித்ததும் ஒரு உரைஞர் முன் மேடைக்கு வந்து பார்வையாளரைப் பார்த்துத் தொடர்கிறார். இவரை அடுத்தும் உரைஞர் வந்து பார்வையாளரைப் பார்த்துக் கூற வேண்டியவற்றைக் கூறிச் செல்வர். அவர்கள் தம்கருமம் முடிந்ததும் உள்ளே சென்று உரிய இடத்தில் நிற்கலாம். அல்லது எல்லோரும் ஒருமித்தும் செல்லலாம். நெறியாளர் ஒரு ஆக்கக் கலைஞர் என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு.

**உரை - I**

மகிழ்ச்சியைப் பரப்பியபடி
கண்மூடித்தனமாகத் திரிகிற

www.tamilarangam.net

உரை - II

சோம்பேறித் தனத்தினால்
நேரத்தைப் பாழடிக்கிற

உரை - III

பசியெடுக்கும் போது தூங்கிவிடுகிற

உரை - IV

சுமை அதிகரிக்கும் போது கதறுகிற

உரை - V

நம்பிக்கை அற்றுப் போகும்போது குடிக்கிற எனது மக்களுக்காக

வாத்தி :

கண்ணுக்குப் புலப்படாமல் எல்லா இடங்களிலும் ஏறிஉட்கார்ந்து கொண்டு சிரிக்கிற ஜென்மங்களினால்

தங்களுக்குத் தாங்களே கட்டப்பட்டு
விலங்கிடப்பட்டு
குழப்பி விடப்பட்டுள்ள
எனது மக்களுக்கான

உரை I

குழப்பங்களிலிருந்தும்

உரை II

இரட்டை வேடங்களிலிருந்தும்

உரை III

தவறாகப் புரிந்து கொள்ளலிலிருந்தும்

உரை IV

நல்ல வழிகளை உருவாக்க முயன்று

உரை V

நிமிர்ந்து நின்று விழிக்கும் எனது மக்களுக்காக

வாத்தி

எல்லா முகங்களையும்

உரை I

எல்லா மக்களையும்

உரை II

எல்லா ஆண்களையும் பெண்களையும்

உரை III

அவர்களின் கணக்கிடமுடியாத் தலைமுறைகளையும்

உரை IV

அணைத்துக் கொள்ளும் ஓர் உலகை

உரை V

படைக்க முயலும் எனது மக்களுக்காக

வாத்தி

ஒரு புதிய பூமி எழுந்து வரட்டும்.
வேறொரு புதிய உலகம் பிறக்கட்டும்

உரை I

வானத்தில் அமைதி என்பது
அழகுறப் பொறிக்கப்படட்டும்

உரை II

அஞ்சாமை மிக்க ஓர் இரண்டாம் தலைமுறை வெளிவரட்டும்

உரை III

விடுதலை வேட்கை நிரம்பிய மக்கள் வளரட்டும்

உரை IV

எதையும் குணப்படுத்தும் அழகும் உறுதியுடன் பற்றிக் கொள்ளும் வலிமையும்

உரை V

நம் இரத்தத்திலும், உயிரிலும் விடாமல் துடிக்கட்டும்

வாத்தி :

மனிதன் எனும் ஓர் இனம் எழுந்துவந்து அதிகாரத்தைக் கைப்பற்றட்டும்

மார்கரேட் வாக்கர்/அமெரிக்கா.

(அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம்)-

www.tamilarangam.net

-மேலே உள்ள பகுதிகள் கூறப்படும்போது உரிய இடை நிகழ்வாக வாத்தியங்களின் இசை பயன்படுத்தப்படுவது பயனுடைத்தாகும். உரைஞரும் வாத்தியாரும் உள்ளே சென்ற கையோடு முன் திரை விலக ஆரம்பிக்கிறது. மேடையில் பல நிலைகளில் பல மக்கள் இருக்கிறார்கள். முன் இடது மேடையில் இருவர் நிற்கிறார்கள். ஒருவர் கையில் கைத்தாளம் அல்லது சப்ளாக் கட்டை இருக்கலாம். மற்றவர் கையில் தம்புரா அல்லது சுருதிப்பெட்டி இருக்கலாம். இப்பொருட்கள் உண்மையில் இருக்கலாம் அல்லது ஊமத்தில் நிகழ்த்தப்படலாம். சப்ளாக்கட்டையாயின், வைத்திருப்பவரால் பின்னர் அது ஏட்டுகட்டாகப் பயன்படுத்தப்படலாம். சுருதிப்பெட்டி புத்தகக்கட்டாகப் பயன்படுத்தப்படலாம். கிழவன் முன் வலது மேடையில் இருக்கிறார். பின் நடுமேடை தொடக்கம் மத்திய இடது மேடை வரை கால் வட்ட வடிவில் பின் இடது மேடைக்கு வெளியே தமது பார்வையைக் கூர்மைப்படுத்திய நிலையில் ஐந்து உரைஞர் நிற்கின்றனர். மேடையின் எஞ்சிய இடங்களில் உற்றார், உறவினர், நண்பர், சுற்றத்தார் உள்ளனர். மத்திய மேடையில் வாத்தியார் இருந்து எதையோ மிகவும் ஆழ்ந்து வாசித்தபடி இருக்கிறார். ஒரு புறத்தே அகதிகள் சிலரும் இருக்கிறார்கள் போல் தெரிகிறது.

-மேடையின் முன் இடத்தில் நிற்கும் இருவரில் ஒருவரை நாம் அடையாளம் காணும் வசதி கருதி கதாப்பிரசங்கி என்னும் உதவியாளர் என்றும் இடுகுறிப்பெயராக வைப்பதில் பிழையில்லை. திரை விலகியதும் கதாப்பிரசங்கி பின்வரும் சுலோகத்தைச் சொல்கிறார்.

**கதாப்பிரசங்கி**

ஓம் சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் ப்ரஸன்ன வதனம் த்யாயேத் - ஸர்வ விக்னோப சாந்தயே.

**உதவி**

கஜானனம் பூதகணாதி ஸேவிதம்
கபித்தஜம்பு பலஸார பஷிதம் உமாஸீதம் சோகவினாச காரணம்
நமாமி விக்னேச்வர பாத பங்கஜம்.

- சேமக்கலம், சங்கு, மணி ஓசைகள் பயன்படுத்தலாம்.

www.tamilarangam.net

- இவர்கள், ஸ்லோகத்தை இவர்கள் பாட்டுக்குச் செய்து முடிக்க தன்பாட்டுக்கிருந்த கிழவன் பின்வரும் பாடலை (திருவாசகத்தை) தன்பாட்டுக்குப் பாடுகிறார்.

**கிழவன்**

பொருத்தம் இன்மையேன் பொய்ம்மை உண்மையேன் போத என்று எனைப் புரிந்து நோக்கவும் வருத்தம் இன்மையேன் வஞ்சம் உண்மையேன் மாண்டிலேன் மலர்க்கமல பாதனே அரத்த மேனியாய் அருள் செய் அன்பரும் நீயும் அங்கு எழுந்தருளி இங்கு எனை இருத்தினாய் முறையோ என் எம்பிரான் வம்பனேன் வினைக்கு இறுதி இல்லையே,

- திருச்சதகம் - திருவாசகம்.

- கிழவன் தன் பாட்டுக்குப் பாடி முடிய உற்றார், உறவினர், நண்பர், சுற்றத்தார், அயலவர் ஆகியோர் தம்முள் பின்வரும் பாடலைப்பாடுவர்-பாடல் தொடங்குமுன் உடுக்கில் இப்பாடலின் தரு ஒலிக்கப்படும். பின்னர் எல்லோரும் தருவைப் பாடுவர். அதாவது உற்றார், உறவினர், நண்பர், சுற்றத்தார், அயலவர் (அகதிகள்) அனைவரும்-அகதிகள் குடும்பத்தில் ஒரு இளம் பெண் இருப்பது அவசியம்-

அனைவரும் (தரு)

தந்தனத் தந்தனத் தந்தனத் தானனே தனதானநான
தந்தனத் தந்தனத் தந்தனத் தானனே

- இனிவரும் பாடல்களை இவர்களுள் பாடக்கூடியவர் கலந்து பகிர்ந்து பாடவேண்டியது தான். ஒவ்வொருவரும் பாடினால் சிறப்பாகத்தான் இருக்கும்.

**பாடல்**

1. சூலத்தேவர்கள் தொழுது போற்றவே-கனமுடிமன்னர் துலங்கப் பரிசுகள் எங்கும் நெருங்கவே
2. வாரணப்படைகள் கரிகள் நெருங்கவே-அம்மன் வாசல் வரிசைப் பிரம்புக்காரர் நெருங்கவே
3. பூதகணங்கள் படைகள் சூழவே - தென் இலங்கை வாழ் பூமி நடுங்க எக்காழமூதவே.

www.tamilarangam.net

4. பூரிகை சங்கு பேரிகை முழங்கவே - அம்மன் பாதம் பூமலர் தூவி வானவர் போற்றவே.

5. உத்தரவெண்கல உடு(க்)கு முழங்கவே - மாதர் ஆட உறுதி சேர் வெண்கவரி வீசவே.

6. பக்திசெய் செந்தமிழ் வாணர்கள் பாடவே-வரிசையாகப் பார்மிசை நாடகக்காரர்கள் ஆடவே.

7. சங்குகள் கின்னரர் கொம்புகள் ஊதவே-தாள மத்தள தரிக்கும் தாரைகள் நெருங்கி ஊதவே.

8. வானவர் இந்திரர், வந்து பணியவே-வயதுச் சிறுவர் வசந்த நாடக மியைந்து பாடவே.

9. மாதமும் திங்கள் மும்மாரி பொழியவே-அம்மன் இரங்கி வையக வெக்கை நல் வைசூரியகலவே

10. பூரணம் பொலியப் பூங்கவரி வீசவே-அம்மன் இருக்கும் தோரணமான பொன்னாசன மிலங்கவே.

- மேற்படி பாடல்களை முழுமையாக அல்லது வசதிக்கேற்ற அளவு பயன்படுத்தலாம். இயக்கங்களுக்கு இடமளிப்பது விரும்பத்தக்கது. சில கட்டங்களில் சில இளைஞரிடம் ஆசிரியரும் கூடக் கலந்து கொள்ள முடியுமல்லவா? அவை அனைத்தும் முடிவுற உரைஞர் பார்வையாளரை நோக்கிவாறு...

**உரை I**

வானை நோக்கி முஷ்டி உயர்த்தி
வீர கர்ஜனை செய்தது ஆழி.

**உரை II**

சீறி எழுந்த கைகள் விரிந்து
பாறை மேனியில் பாய்ந்து அறைந்தன.

**உரை III**

கடிய பாறையின் பசிய போர்வையைப் பிராண்டிப் பிய்த்தன
வெண்ணுரை நகங்கள்

**உரை IV**

கடலைப் பாறை நெரிக்கும் வரைக்கும் கடலின் கரங்கட் கேது ஓய்ச்சல்!

www.tamilarangam.net

- சிவசேகரம்

-- நதிக்கரை மூங்கில் -

- இவ்வுரைகள் முடிவுற்று உரைஞர் தம்பணி தொடர்ந்து புரியத் தொடங்க, கதாப்பிரசங்கியும் உதவியாளரும் மேடையில் உள்ள ஊரவரைப் பார்வையாளராகப் பாவித்து வணங்கி விட்டுத் தமது கதைச் கச்சேரியை ஆரம்பிக்கின்றனர். எச்சந்தர்ப்பத்திலும் இவர்களின் செயல்கள் எதுவும் கேலி, கிண்டல், நையாண்டி செய்யும் வகையில் அமையக்கூடாது. இக்கால கட்டத்தில் கேலிக் குரிய எதுவும் எவரும் இருக்க வேண்டியதில்லை என்று நம்புவோமாக- கதாப்பிரசங்கம் ஆரம்பமாகிறது.

கதா

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேரும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன் மகள்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துய ரது கொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமானே !

- மேற்படி பாடலைக் கதாப்பிரசங்கியாரும் உதவியாளரும் சேர்ந்து அமர்க்களப்படுத்திப்பாடுவார்கள். பாடகர் குழுவும் வாத்திய குழுவும் வேண்டியளவு உதவும்.

கதா

(உச்சஸ்தாயியில்) மெய்யடியார்களே !

www.tamilarangam.net

**உதவி**

(மத்திமஸ்தாயியில்) ஆஹா ! மெய்யடியார்களே !

**கதா**

இன்று, திருவாதவூரடிகள் புராணத்திலே

**உதவி**

ஆஹா! புராணத்திலே !

**கதா**

மண் சுமந்த சருக்கத்தை...

**உதவி**

ஆஹா ! மண்சுமந்த சருக்கத்தை...!

**கதா**

சுருக்கமாகக் கதா காலாட்சேபம் செய்ய வந்துள்ளோம்

**உதவி**

ஆஹா! வந்துள்ளோம்!

**ஊரவர்**

(பக்தி பூர்வமாக) அரோஹரா!!!!

வாத்தி காலத்தை ஆட்சேபம் செய்யிறதே அண்டு தொட்டு இண்டு வரைக்கும் எங்கடை தொண்டு!?

**கதா**

அரஹர நமப்பார்பதீபதையே !

**உதவி + ஊரவர்**

அரஹர மஹாதேவா!!!

– மேடைக்கு வெளியே பலத்த சத்தம் (வெடி, ஷெல், குண்டு) இரண்டொன்று கேட்கிறது. ஊரைஞர் உசார் நிலையடைகின்றனர். ஊரவர் பதட்டமடைகின்றனர். கிழவர் உரைஞரைப் பார்த்துவிட்டு...–

**கிழவன்**

அவங்கள் அங்கை உசாரா(ய்) நிக்கிறாங்கள். கரைச்சல் வராது நீங்கள் குந்துங்கோ.

www.tamilarangam.net

**கதா**

வேலுண்டு வினையறுக்க !

**உதவி**

ஆஹா! வீரவேல்!...

**ஊரவர்**

வெற்றிவேல்!!!!

**கதா**

பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்து ஈசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலை மதுரை
மண்சுமந்த கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதும் காண் அம்மானாய்.

– திருவம்மானை – திருவாசகம்

– கடைசி இரண்டு அடியும் பாடப்படும்போது மீண்டும் சத்தமும், ஒரு உரைஞர் காயப்படுவதும் நிகழ்த்தப்படலாம். அல்லது பாடல் முடிய நிகழ்வு நடந்து மீண்டும் இறுதி இரண்டடியும் அர்த்தபுஷ்டியோடு வேறு யாராலும் (கிழவனால்) பாடப்படலாம்.

**கதா**

ஆண்டவன் திருவிளையாடல்! வைகை பெருக்கெடுக்கிறது

**வாத்தி**

ஆள்பவன் திருவிளையாடல்; பகை படையெடுக்கிறது!

**உதவி**

வைகை ஆறு பெருக்கெடுக்கிறது

**கதா**

கரை கடந்த வெள்ளம்!

**உதவி**

அணை கடந்த வெள்ளம்!

**கதா**

மடை திறந்த வெள்ளம்!

www.tamilarangam.net

**உதவி**

மதுரை மாநகர் எங்கும் வெள்ளம்!

**கதா**

வெள்ளம் மண்ணை விழுங்குமுன்...

**வாத்தி**

அன்று மடைதிறந்து மண்ணை விழுங்க முயன்றது

**உரை V**

இன்று படை திறந்து மண்ணை விழுங்க முயல்கிறது!

**கதா**

தென் மதுரைப் பாண்டியன் தன் குடிகளுக்குக் கட்டளை பிறப்பித்தான்.

**உதவி**

முரசறைந்து செய்தி அறிவித்தான்.

-உதவியாளர் முரசறைவோனாகத் தன்னைப் பாவித்து, முரசறைவது போல் ஊமித்து-

**உதவி**

மன்னன் கட்டளை மக்களே கேளுங்கள்!

**வாத்தி**

வெள்ளம் வந்து குண்டியை நனைச்சாலும் வேந்தன் கட்டளைக்குக் காத்து நிக்கிறம்!

- குந்தியிருந்த ஊரவர் திடுக்குற்று எழுந்து நிற்கலாம் -

**உரை V**

இண்டைக்கும் இதுதான் எங்கடை நிலைமை

**வாத்தி**

பரிநாம வளர்ச்சி எங்கள்ளை இல்லை

**கிழவன்**

பரிதாபமாய்) வளந்து வந்திட்டம்

**உதவி**

வைகை அன்னை சீற்றங்கொண்டு வெள்ளமாய், வேகமாய் கரை கடந்து பொங்கிப் புரள்கிறாள்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

-கதாப்பிரசங்கி அமர்க்களமாகப் பாடுகிறார்.

**கதா**

தடதடவென்றுப் பொங்கியே
அவள் வருகிறாள்!
வைகை வருகிறாள்!
கடகட வென்றுப் பாய்ந்ததுமே
அவள் வருகிறாள்!
வைகை வருகிறாள்!
பூசைகள் செய்து பார்த்தனர்!
படையல் செய்து பார்த்தனர்!
பலிகளும் இட்டுப் பார்த்தனர்!
பொங்கிய சீற்றம் தணிகிலன்!
வைகை பாய்ந்தனள்!
வைகை பாய்ந்தனள்!
வைகை பாய்ந்தனள்!

**வாத்தி**

பெருகிவாற வெள்ளத்தைப் பூசை பொங்கலாலை நிறுத்த ஏலாது.

**கிழவன் :**

வெள்ளம் வரமுன்னம் அணை கட்ட வேணும்.

**உரை V**

மண்சுமந்து கொட்டிக், கரைகட்டி வெள்ளத்தை அந்த எல்லையோட நிறுத்த வேணும்

**நண்பர் :**

இது நியாயமான பேச்சு

-இவர்கள் திசை திரும்புவதைக் கண்டு பிரசங்கியார் எரிச்சலோடு-

**கதா**

அரஹர நமப்பார்பதீபதையே!

**ஊரவர் + உதவி**

அரஹர மஹாதேவா!!

- உதவியாளர் தொடர்ந்து முரசறைந்து கூறுகிறார்... -

www.tamilarangam.net

**உதவி**

வேந்தன் கட்டளை; வைகைக் கரை அடைக்க வையத்தோரே வாருங்கள்!

**கதா**

வாருங்கள்! வாருங்கள்!!

**உதவி**

அவரவர் பாகம் அளந்து விடப்படும்!

**வாத்தி**

வெள்ளம் வந்தபிறகு அணை கட்டேக்கை கூட, பாகம் பிரிச்சுத் தனித்தனி மனிசரா நிண்டு வேலை செய்யிறதா?!

**கிழவன்**

தாய் பிள்ளை எண்டாலும் வாயும் வயிறும் வேறை

**உரை V**

ஆபத்து வேளையிலும் ஒண்டுபட மாட்டமா?!

**உதவி**

அரசர் ஆணை, மீறுவோர் தண்டிக்கப்படுவீர். அளந்த பாகத்தை விரைந்து அடையுங்கள்.

**கிழவன்**

அவனவனுக்கு அளந்ததுதான் எப்பவும்!

**கிழவி**

என் பங்கை அடைக்க நானென்ன செய்வன்!

– ஊரவர் அணைகட்ட ஆயத்தமாகின்றனர்.

**உற்றார்**

உண்ணானை, என்றை பங்கை மட்டும், நான் ஒரு மாதிரிக் கட்டிப் போடுவன்.

**நண்பர்**

ஓம், இல்லாது போனால் ராசா அடிச்சுப் போடுவான்.

**உரை V**

இரங்கி இருந்தால்தான் அதிசயம்.

www.tamilarangam.net

**வாத்தி**

ஆனால் மக்கள் இரங்காமல் இருந்ததுதான் ஆச்சரியம்!

**கிழவன்**

அழுவார் அழுவார் எல்லாம் தன் கருமம்; திருவன் பெண்டிலுக்கு அழ ஆளில்லை.

**கதா**

பிட்டுவாணிச்சிக்காகப் பித்தன் அழுதான் மனம் இரங்கினான்!

**உதவி**

கைலை விட்டு இறங்கினான்!

**கதா**

வைகைக் கரைக்கு வந்தான்!

**உதவி**

எப்படி வந்தான்?!

**கதா**

பிச்சை ஆண்டிப் பெருமான்-அரையில் கச்சையோடு வந்தான்.
கங்கை சூடும் தலையில்-ஐயோ
கூடை தாங்கி வந்தான்.
மண்ணை அளந்த தேவன்-மண் வெட்டியோடு வந்தான்

- ஒருவர் சிவனாகப் பாவித்து கூடை மண்வெட்டியோடு வருதாக ஊமித்து -

**சிவன்**

கூலிக்கு மண்போட ஆள்வேணுமா! கூலி!! கூலி!!!

**கிழவி**

மோனே இஞ்சை வா ராசா!

**சிவன்**

ஆச்சி கூப்பிட்டனீங்களே?

**கிழவி**

ஓம்மோனை என்ற பங்குக்கு மண் போடுறியே? புட்டுத்தாரன்

www.tamilarangam.net

**சிவன்**

தா புட்டைப், போடுறன் மண்ணை

**வாத்தி**

அண்டைக்கு அரச கட்டளைக்குப் பயந்தேனும் சனம் கரை அடைச்சுதுகள்.

**கிழவன்**

இண்டைக்கு சிவனே எண்டு செம்மணச் செல்வியளா நாங்கள் சும்மா இருக்கப் பாக்கிறம்.

**சுற்றத்தார்**

என்ரை பங்கெங்கை?!

**அயலவர்**

இதோ என்றை!

**உற்றார்**

எனக்கு ரெண்டங்குலம் கூடவிட்டுப் போட்டாங்கள்!! பொறுக்கியள்!!

– இவர்கள் கரை அடைக்கும் முயற்சியில் ஈடுபடுவர். சுத்திச் சுத்திச் சுப்பற்றை கொல்லேக்கை என்றதன் மெட்டு இசைக்கப்படும். வெளியே ஓசை ஒலிகள் இடையிடையே கேட்கும். உரைஞர் தம்பணியில் ஈடுபடுவர்.

**கிழவி**

என்பங்கை அடைக்க ஒருத்தரும் இல்லையே!
என்னாலும் ஏலாது!
ஆண்டவனே!

**கதா**

புட்டவித்து விற்பாள் அந்தப் படுகிழவி
செம்மணச் செல்வியவள் படுகிழவி
இட்டபடி கரை அடைக்க வழி அறியாள்
வேதனையில் மூழ்கி அங்கு வழிபடுவாள்

**உதவி**

கிழவிக்காகக் கரை அடைக்க வந்தான் சிவன்

**கதா**

மண் சுமந்து, கோவால் மொத்துண்டு புண் சுமந்து, மணிவாசகரை அடிமையாக்கி ஆட்கொள்ள வந்தான் சிவன்

www.tamilarangam.net

**வாத்தி**

வாறவன் ஆரா(ய்) இருந்தாலென்ன அடிமையாக்கிறதும் ஆட்கொல்லலும் தான் அவன்ரை நோக்கமாக இருக்கும்.

**உரை V**

ஆள்பவன், ஆள நினைப்பவன், ஆண்டவன் நோக்கம் அது தான்.

**கதா**

செம்மணச் செல்விக்காக ஒருவருமே இரங்கவில்லை.

**உதவி**

ஆமாம்! மன்னன் இரங்கவில்லை

**கதா**

மந்திரி இரங்கவில்லை!

**உதவி**

மண்டலாதிபர் இரங்கவில்லை!

**கதா**

மக்கள் இரங்கவில்லை!

**வாத்தி**

மன்னன், மந்திரி, மண்டலாதிபர் இரங்காதது அதிசயமில்லை.

**தாய்**

சிறுசுகள் வேலியா நிண்டு காக்குதுகள் எண்ட துணிவிலை..

**உற்றார்**

எங்கடை எங்கடை அலுவல்களை எள்ளளவும் குறைவில்லாமல் செய்து முடிக்கிறம்

**உறவினர் (கிழவி)**

பொது அலுவல் எல்லாம் பொடியள் பொறுப்பு

**நண்பர்**

கலியாண வீடு, சாமத்தியச் சடங்கு, தேர்த்திருவிழா ஒண்டும் குறைவில்லை.

www.tamilarangam.net

**சுற்றத்தார்**

பொறுப்பை நாங்கள் பொடியளிட்டைக் குடுத்திட்டம்

**அயலவர்**

குடுத்து வச்சவை எண்ணிறது எங்களைத்தான்.

**காத்தார்**

உந்த மூண்டு மொட்டையரை நம்பியே நாங்கள் இருக்கிறம்

**கிழவன்**

பின்னை?!

**காத்தார்**

நான் சரித்திரம் படைச்சவன் சொல்லுறன் நம்புங்கோ...

**கிழவி**

என்னண்டு? சொல்லுங்கோ?

**காத்தார்**

வரவேண்டியவன் வரவேண்டிய நேரகாலம் அறிஞ்சு சரியா வருவான்.

**நண்பர்**

அப்பப் பொடியள்???...

**காத்தார்**

சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது கண்டியோ.

**கிழவன்**

செம்மணச் செல்வியின்ற தம்பி சொல்லுறார்!
அம்மணமாய்(ய்)ச்
சொல்லுவன் பெண் புரசு நிக்கிது

**வாத்தி**

உனது பாத்திரத்தில்
இன்னமும் சிறிது தேன் எஞ்சி உள்ளது
ஈக்களைத் துரத்து
தேனைப் பேணு.

www.tamilarangam.net

**உரை I**

இன்னமும்கூட
உனது வீட்டுக்கோர் கதவுண்டு

**உரை II**

இன்னமும் கூட
உனது வீட்டிலோர் பாய் உண்டு

**உரை III**

கதவை மூடு
குளிர் காற்றில் இருந்தும் உன்
குழந்தைகளைப் பேணு./

**உரை IV**

மிகமிக மோசம் இக்குளி காற்று

**உரை V**

குழந்தைகள் நன்கு தூங்குதல் வேண்டும்

**வாத்தி**

நெருப்பெரிக்கச் சிறிது விறகு
கொஞ்சம் கோப்பி
நெருப்புச் சுவாலை
இன்னமும் கூட உன்னிடம் உண்டு

– பலஸ்தீனக் கவிதைகள் –

**கதா**

அரஹர நம்ப் பார்பதீபதையே!

**உதவி + ஊரவர்**

அரஹர மகாதேவா!!

**கதா**

கூலி ஆளாய் வந்தவன்

**உதவி**

சிவன்

**கதா**

www.tamilarangam.net

அவன் மண்சுமந்த திருவிளையாடலைப் பாடுகிறார் கடவுள் மாமுனி.

**உதவி**

முன் இருந்து கண்டவர்போல் பாடுகிறார்

**கிழவன்**

கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்.

**கதா**

பாடுவன் ஆடல் செய்வன்
பைய ஓர் கூடை மண்ணை
நீடு திண் கரையில் ஏறச்
சொரிகுவன், நெடிது நிற்பன்
ஓடுவன், ஓடி மீள்வன்
ஒரு கைமண் கரையில் ஏறப்
போடுவன், 'போக' என்னில்
வருவன் 'வா' என்னில் போவன்.

– **வாதவூரடிகள் புராணம்** –

**உதவி**

ஆஹா இதுவல்லவோ திருவிளையாடல்!
ஆஹ் ஹஹ் ஹஹஹ! ஒரு கைமண் போடுவன்!

**வாத்தி**

எங்கிருந்தோ ஒருத்தன் இங்கை வந்தால், அவன்றை திருவிளையாடல் இப்பிடித்தான் இருக்கும்.

**உரை V**

ஒரு கை மண் போடுவன்

**கிழவன்**

வாயிலை

**கதா**

மெய்யன்பர்களே!

**கிழவி**

ஓய்

www.tamilarangam.net

**கதா**

ஆண்டவனின் அற்புதத்தைக் கண் குளிரக் காணுங்கள்

**உதவி**

ஆஹா காணுங்கள்!

- ஒருவர் பாண்டிய மன்னனாகவும் மந்திரியாகவும் பாவித்து -

**பாண்டி**

இட்ட கட்டளை சிரமேற் கொண்டு வைகைக் கரையை அடைத்து விட்டனரா மக்கள்.

**மந்திரி**

ஆம் மன்னவா; ஆனால்....

**பாண்டி**

ஆனால்?! சொல்லும் அமைச்சரே

**மந்திரி**

செம்மணச் செல்வி என்ற பிட்டு வாணிச்சி பங்கு மட்டும் அடைபடாது வாய் பிளந்து கிடக்க வெள்ளம் வெளியேறுகிறது வேந்தே!

**பாண்டி**

காரணம்?!

**மந்திரி**

அவள் பங்கை அடைக்க வந்த கூலியாள்...

**பாண்டி**

வந்த கூலியாள்?!

**கிழவி**

அவன் ஒரு விசர்ப்பொடியன் போல கிடக்குது. வந்த வேலையை விட்டிட்டு ஆடிப்பாடிக் கூத்தாடுகிறான்.

**மந்திரி**

ஏய் கிழவி, இது அரச சபை, குறுக்கே பேசக் கூடாது!

**தாய்**

குறுக்காலை போவார். அங்கை கொளுத்திச் சுடுகிறாங்கள்.

www.tamilarangam.net

**கிழவன்**

பொடியள் நெஞ்சைக் குடுத்துக் காத்து நிக்கிறாங்கள்.

**சுற்றம்**

நாங்கள் குசாலா(ய்)க் குந்தி இருந்து கூத்துப் பாக்கிறம்.

**உரை V**

இவடத்தாலை வெளிக்கிட்டுப் போங்கோ. அவங்கள் அடிக்கிறதுகள் இங்கையும் வந்து விழும்.

**உற்றார்**

இரவல் காணி எண்டாலும் தலமுறை தலமுறையா(ய்)க் குந்தி இருந்த நிலம் ராசா

**வாத்தி**

நிலத்தைக் காக்கிறத்துக்காகத்தான் எங்கடை உயிரைக் காக்கிறது அவசியம்.

**நண்பர்**

பொன்போல பொடியள் எத்தனை போட்டுதுகள். பொத்தல் கிழடுகள் நாங்கள் இருந்து என்ன பலன்?

**உரை V**

போன பொடியள் திரும்பி வரப் போறதில்லை; ஆனால் அவங்கள் அத்தினை பேரும் வீணா(ய்)ப் போகிட்டாங்களே எண்ட நிலைமையை, இருக்கிற நாங்கள் ஏற்படுத்தக் கூடாது

**உற்றார்**

பொடியளுக்காக நான் உயிரையும் குடுப்பன். பொலிடோலும் குடிப்பன்.

**வாத்தி**

இது எல்லாரையும் பழுதாக்கிற போக்கண்ணை

**உற்றார்**

ஏன் வாத்தியார், பகிடி எண்டே நினைச்சீர்!

**வாத்தி**

இல்லை, இல்லை

www.tamilarangam.net

**உற்றார்**

பாக்கப் போறியளே

- ஓடிச்சென்று கையிலை ஒரு போத்தலை எடுத்து வந்து -

இதிலை எட்டு அவுன்சும் அப்பிடியே கிடக்கு

**உரைஞர்**

Vப் பார்த்து -

'தம்பி நீ சொல்லு ஒரு சொல்லுக் குடி' எண்டு

- மிகுந்த உணர்ச்சிவசப்பட்டு அழுகையை அடக்க முடியாது விம்மியபடி (இதில் போலித் தனம் பகிடி இல்லை)

முழுவதையும் ஒரு முடறிலை குடிக்கிறனோ இல்லையோ பார்.

**உரைஞர்-V**

-தடுத்துப் போத்தலைப் பறித்து -

இதென்னண்ணை நீங்கள் செய்யிற வேலை!

**நண்பர்**

காலங்காலமா நாங்கள் செய்யிற வேலை இதுதான்

**கிழவன்**

வெறும் உணர்ச்சியளோடை கிடந்து மாரடிக்கிறம்

**உற்றார்**

இந்தப் பொடியள்ளை எனக்கு இருக்கிற பற்று, நடிப்பெண்டே சொல்லுறாய்)

**வாத்தி**

இல்லை அண்ணை சத்தியமா இல்லை. இப்பிடிப்பட்ட பற்று உங்களையும் பழுதாக்கிப் பொடியளையும் பழுதாக்கிப் போடுமோ எண்டுதான் யோசிக்கிறம்.

**கிழவன்**

நாங்களும் பொடியளும் கன்தூரம் பயணம் போகக் கிடக்கு என்பார் வாத்தியார்.

**வாத்தி**

ஓம், சின்னனிலை பிள்ளையைத் தூக்கித் தோள்ளை வைச்சுச் செல்லங் கொஞ்சலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிழவி

அப்பவும் தூக்கித் தலையிலை வைக்கக் கூடாது

உற்றார்

தோளுக்கு மிஞ்சின பிள்ளை தோழன் தான்

உரை V

தோழனைத் தூக்கித் தோள்ளை அல்ல அண்ணை வைக்கிறது

உரை II

நாங்கள் வெறுங்காவடியளே?

சுற்றம்

வெறுங் காவடியளோ?!! கண்கண்ட கடவுளல்லோ!

வாத்தி

கடவுள், கடவுள் எண்டுதான் எல்லாரையும் பழுதாக்கி நாங்களும் பழுதாகிறம்.

கதா

'கடந்தும் உள்ளேயும் நிற்பவன்தான் கடவுள்' என்று வேதங்கள் கூறும்

கிழவன்

சொந்தமா ஒண்டுஞ் சொல்லத் தெரியா இந்தப் புத்தகப் பூச்சிக்கு!

வாத்தி

எவையும் கடந்து நிக்க வேண்டாம்.

நண்பர்

எங்களோடை எங்களுக்குள்ளேயே எல்லாரும் நிக்கட்டும்; எண்ணிறியள்.

உரை V

பருவம் வந்த பிள்ளையைத் தோழனாகக் கொள்ளுங்கோ எண்டால்..

வாத்தி

அவன் பிழை விடேக்கை விலத்திப் பாத்துச் சிரிக்காமல் அணைச்சு வச்சுப் புத்தி சொல்லுங்கோ -

www.tamilarangam.net

**உரை V**

கேக்க மறுத்தால் நாலு குடுத்துச் சொல்லுங்கோ

**கிழவன்**

அடியாத நாடு படியாது. படியாத நாடு விடியாது

**கதா**

பிள்ளைப் பராமரிப்புப் பற்றித் தெரியாதவர்கள் அதைப் பற்றிப் படியாதவர்கள்...

**உதவி**

பேசக் கூடாது.

**கதா**

இந்த நூலில் அதுபற்றி அருமையாகக் கூறப்பட்டிருக்கிறது

**உற்றார்**

நூல் பிடிச்ச அளந்து, மயிர் கிழிச்சு ஆராயிற விண்ணாணங்கள்!

**கதா**

பக்கம் முப்பத்தி ஆறிலை பிள்ளை வளர்ப்பு என்ற பாடம் இருக்கிறது

**கிழவன்**

எட்டுப் பிள்ளை பெத்தவளுக்கு ஒண்டு பெத்தவள் முக்கிக் காட்டினாளாம்!

**கிழவி**

தன்ரை பெண்டிலுங்கே ஒரு பிள்ளையைத் தானும் குடுக்கத் தெரியாதவர், புத்தகத்திலை பிள்ளை பெறுகிறார்.

**காத்தார்**

உதொண்டிலும் வேலை இல்லை. நான் சரித்திரம் படைச்சவன் நம்புங்கோ.

**நண்பர்**

சரித்திரம் மட்டும் படிச்ச தரித்திரம் சொல்லுது கேளுங்கோ

**காத்தார்**

வரவேண்டியவன் வரவேண்டிய நேரகாலம் அறிஞ்சு சரியா வருவான்.

www.tamilarangam.net

**சுற்றத்தார்**

இதென்ன, சரித்திரம் சொல்லுறாரோ?! சாத்திரம் சொல்லுறாரோ?!

**கிழவன்**

பூமி சாத்திரம் படியாமல் வெறுமனே சரித்திரம் மட்டும் படிச்சவர் உப்பிடித்தான் புலம்புவார்.

**வாத்தி**

வந்த வந்த நேரமெல்லாம் வந்த வந்தவனை வரவிட்டதாலை இதுவரை நாங்கள் பட்ட தொல்லையள் போதாதே?!

**உரை V**

இப்பவும் பட்டுக் கொண்டிருக்கிறது காணாதோ?!

**காத்தார்**

ஹிஸ்ட்றி றிப்பீட்ஸ் இட்செல்ப் (History repeats itself) வரலாறு திரும்பத் திரும்ப வரும்.

**வாத்தி**

நடந்த தவறுகள்ளையிருந்து நல்ல பாடங்களை நாங்கள் படியாததாலைதான் அப்பிடி நடக்குது

**உரை V**

பழைய கதையளை, வெறும் புனிதமான கதையளா(ய்) மட்டும் படிச்சுக் கொண்டிராமல்...

**வாத்தி**

அந்தக் கதையளுக்கை, இப்ப எங்களுக்குத் தேவையான நல்ல கருத்துக்களை நாங்கள் தேடி எடுக்க வேணும்.

**காத்தார்**

உது கடைசிவரை சரிவராது. சிறுபிள்ளை வேளாண்மை.

**தாய்**

பொன்போல ரெண்டு பெடியளப் பெத்துக் குடுத்திட்டிருக்கிறன். சனியன் வாயோரியா சரிவராது, சரிவராது எண்டு பல்லி போலச் சொல்லிக் கொண்டு நிக்கிறான்.

– கிழவி திடீரென்று மேடையின் மேல் இடது புறமாகப் பெரும்பாலும் நிற்கின்ற உரைஞரைப் பார்த்துக் கையை உயர்த்தியவாறும்

www.tamilarangam.net

கைகூப்பியவாறும் எதையோ கருதிப் பின்வரும் பாடலைப் பாடுகிறார். கிழவிக்குப் பாடமுடியாவிட்டால் பாடகரோ வேறுயாரோ பாடக் கூடியவர் பாடித்தானே ஆகவேண்டும் -

**கிழவி**

1. பொலிபொலி தாயே பொலி தம்பிரானே பொலி
பூமிபொலி பூமாதேவித் தாயே
மண்ணின் களமே மாதாவே நிறைகளமே
பொன்னின்களமே பூமாதேவிஅம்மா பொலிபொலி பொலியே

2. நாளது கேட்டு நார்க்கம்பு வெட்டி
நல்ல கடாக்கள் தெரிந்து பிணைத்து
ஏரது பூட்டி இடம்பட உழுது
எல்லையில்லாத செந்நெல் விதைத்துச்
சோழன் எருதுகள் தொண்ணூறாயிரம்
பாண்டியன் எருதுகள் பன்னீராயிரம்
இரவும் பகலும் ஏற்றி இழுக்கப்
பொலிவளராய் பொலிபொலி பொலியோ

3. வாட்டி வலமாகப் பொலிதன்மதாயே
வம்புரியோர் சங்காகப் பொலி பொலிபொலியோ

4. வடபுறத்து வாட்டியிலே பொலிதன்மதாயே
வாசுதேவர் அட்சரமாம் பொலிபொலிபொலியோ

5. எழுவான் புறத்து வாட்டியிலே பொலிதன்மதாயே
ஈஸ்வரனார் அட்சரமாம் பொலிபொலிபொலியோ

- இப்பாடல் பலராலும் பாடி அதற்கேற்ற செயல்களும் செய்யப்படலாம். வியாக்கியானம் அவசியம். பாடல்களும் செயல்களும் முடியும் கட்டத்தில் நாடக ஆரம்பத்திலிருந்து மேடையின் பின் இடது புறத்துக்கு வெளியே இருந்து இடையிடையே கேட்டுக்கொண்டிருந்த ஓசைகள், திடீரென்று தீவிரமடைந்து உரைஞர்களும் தீவிரமடைந்து, ஊரவர் அல்லோகல்லோலப்பட்டு இரண்டொருவர் சரிவர் -

- இந்த அமர்க்களத்தின் போது தோன்றும் நிகழ்வுகளிலும் சந்தர்ப்பங்களிலும் பின்வரும் வார்த்தைகளும் வசனங்களும் அவர்களது உள்ளங்களிலிருந்து பிதுங்கி வெளிவரும்

www.tamilarangam.net

**கிழவி**

அறுவார் வட்டம் போடுறாங்கள்!

**கிழவன்**

பருந்து வட்டம்போட்டால் குஞ்சுக்கு ஆபத்து; அறுவார் வட்டம்போட்டால் கோழி, குஞ்சு, சேவல், விடலை, விறாத்து எல்லாத்துக்கும் ஆபத்து.

அண்டும் வானம் பாத்த பூமி, இண்டும் வானம்பாத்த பூமிதான்

**தாய்**

கொடும்பாவி சாகாளோ கோடி மழை பெய்யாதோ!

வானத்து ராசாவே மேகத்து மந்திரியே மழைவரக் காட்டாயோ.

**நண்பர்**

மானத்து ராசாவும் மேகத்து மந்திரியும்தானே மேலை இருந்து பொழியப் போகினம்

**கிழவன்**

வானத்திலை இருந்து துண்டுப் பிரசுரம் செய்துபோட்டடல்லே குண்டுப் பிரசவம் செய்யினை

**சுற்றம்**

அப்பு, வாய்புலம்பிக் கொண்டு நில்லாமல் வாய்க்காலுக்கை எண்டாலும் விழுந்து படன்

**கிழவன்**

வாய் புலம்பாமல் வேறை என்ன செய்வன், விட்டெறியக் கையிலை ஊமல் கொட்டை தானும் இல்லை

**கிழவி**

வேசை பெத்த வேசைமோன்! குறுக்காலை போக!

– மண் அள்ளித் தூவித் திட்டுகிறாள் –

**நண்பர்**

அவன் குறுக்காலை போகேல்லை வட்டம் போட்டு வாறான்

**உற்றார்**

வரட்டும் வரட்டும் பொடியள் குடுக்கிற குடுவையிலை பீச்சிக்கொண்டு ஓடுவீனம்.

www.tamilarangam.net

**கிழவன்**

அப்பிடியெண்டாலும் அதுவும் எங்கடை தலையிலை தானே

**வாத்தி**

வாறான் வாறான்! விழுந்து படுங்கோ

**ஸதா**

குடிசனம் இருக்கிற இடத்திலை குண்டு போடுறது சர்வதேச்சட்டத்துக்குப் பிழை!

**சுற்றம்**

சட்டப் புத்தகத்தைப் பிறகு பார். இப்ப போய்ப் பதுங்கு

**கிழவி**

கோதாரியிலை போவார்.

**தாய்**

ஐயோ! என்ற பிள்ளை!

**கிழவி**

அப்பு மோனே!

**கிழவன்**

ஆ! கடவுளே!

- அயலவர் காலில் காயப்படுகிறார். உரைஞர்-IV காயப்படுகிறார் எவரும் படுகாயப்படவில்லை -

**தாய்**

கண்ணைத் திறந்து பார் ராசா!

**உரை IV**

எனக்குப் பெரிசாக் காயமொண்டுமில்லை அம்மா

**கிழவி**

கொப்பரையும் கொக்காமாரையும் கோதாரியிலை கொண்டுபோன குண்டு உன்றை காலையும் கொண்டு போகிட்டுதே!

**உற்றார்**

கால் ஒண்டும் போகேல்லை; வெளிக்காயம் மட்டும்தான்

www.tamilarangam.net

**கிழவன்**

உன்றை பாடு என்ன செய்யுது மோனை!

**நண்பர்**

அது கழுதைப் புண், புழுதி மருந்து போதும்

– வாத்தியார், உரைஞர் காயப்பட்ட இருவருக்கும் மருந்து கட்டி விடுகின்றனர் –

**கதா**

தத்துவத் தெளிவில்லாமல் தீவிரமாத்துவங்கினால் இப்பிடித்தான்

**உதவி**

துவங்கினவைக்கும் தொல்லை; இருக்கிறவைக்கும் தொல்லை

**சுற்றம்**

என்ன புத்தகப் பூச்சிகள் புறுபுறுக்கத் துவங்கிவிட்டுதுகள்

**உற்றார்**

பயணம் வெளிக்கிட்டுக் காதவெளி வந்தாப் பிறகு, சகுனம் பாத்துச் சங்கடப் படுகிறதே?!

**நண்பர்**

துவங்கின பயணத்தைத் தொடர வேணும்

**வாத்தி**

கடந்த காலத்தைப் படமா(ய்)க் கொண்டு..

**உரை V**

ஒற்றையடிப் பாதையாய் நடையைத் தொடராமல்..

**வாத்தி**

உற்றார், உறவினர், நண்பர், சுற்றம்...

**உரை V**

அயலவர், படித்தவர், படியாதவர் எல்லாரையும்...

**வாத்தி**

இணைச்சு, அணைச்சுத் துணையோட நடப்பம்

**கிழவன்**

தம்பி, பாத யாத்திரை போல நடப்பம்

www.tamilarangam.net

**நண்பர்**

ஊர் ஊரா(ய்)த் தங்கி நடப்பம்.

**வாத்தி**

தங்கி இருந்து சனத்தை அறிவம்

**உரை V**

அவேற்றை அறிஞ்சதை அவையோடை பகிர்வம்

**கிழவி**

மக்கள் தொண்டு மகேசன் தொண்டப்பா

**உற்றார்**

கதவு நிலைப் பல்லிபோல நெடுக நிண்டு நச்சரிச்சால்...

**சுற்றம்**

பயணம், புறப்படுகிறவனுக்கும் கரைச்சல்

**கிழவன்**

கதவைச் சாத்தினால் பல்லிக்கும் சரைச்சல்

**கிழவி**

இஞ்சார் பழமொழியள் இனிப் பறஞ்சது காணும்...

**தாய்**

ஓம், அவரவரை திண்டிட்டுப் படுங்கோ.

**உற்றார்**

அரைவயிறு திண்டிட்டுப் படுங்கோ...

**நண்பர்**

பொடியளுக்கு நல்லாய்க் குடுங்கோ

**உரை V**

இல்லை அண்ணை, உங்களோடை ஒத்தது தான் எங்களுக்கு. அதுக்கு மேலை எண்டால், நீங்கள் எங்களை விருந்தாளியாக் கருதிறியள்.

**வாத்தி**

பிறத்தியா(ய்)க் கருதி விழுந்துபோடாமல், கூடஇருந்து பகிர்ந்து தின்பம்

www.tamilarangam.net

**கிழவன்**

சாப்பாட்டிலை மட்டுமல்ல, சகலதிலும் அப்பிடி நடப்பம். எடுங்கோ கிடக்கிறதை

**உலை V**

நாங்கள் போய் அவையை அனுப்பிறம்

**வாத்தி**

அவை வர நாங்கள் வாறம்

**உற்றார்**

நானும் வாறன் உங்களோடை

**உரை V**

அதுக்கென்ன வாருங்கோ.

- இவர்கள் மூவரும் சென்று அங்கு நின்றுகொண்டு அங்கு நின்ற உரைஞர்களை இங்கு அனுப்புகிறார்கள். உண்ணல் தொடங்குகிறது. பாடல், இடையிடையே உரையாடல் -

**பாடல்**

ஊசிபோல் நெல் விளையும்
ஒரு புறமாய்ப் போரேறும்
பாசிபோல் நெல் விளையும்
பட்டணம் போற் போரேறும்
சரஞ்சரமாய் நெல் விளையும்
சன்னிதி போற் போரேறும்
கொத்துக் கொத்தாய் நெல்விளையும்
கோபுரம் போற் போரேறும்.

**கிழவன்**

வயல்வெளிப் பக்கமும் போக வழி இல்லை. அடிக்கடி கெருடவாகனத்தான் வந்து 'போடுபோடெண்டு' பொளிஞ்சு தள்ளுறான்

**நண்பர்**

இந்த வம்புகளுக்கைதான் எங்கட வேலையளும் நடக்கவேணும்.

- இவர்கள் மத்தியில் ஒரு அகதிக் குடும்பம்-அதில் ஒரு தந்தை, மகள், மகன். மகன் ஒரு உரைஞராக இருக்கலாம் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**தந்தை**

நீங்களெண்டாலும் குடியிருக்கிற குடிசையிலை குந்தி இருக்கிறியள்

**சுற்றம்**

இஞ்ச பயமில்லை, பொடியள் நல்ல காவல் நிக்கிறாங்கள்

**தந்தை**

நாங்கள் கடலையும் விட்டுக் கரையையும் விட்டுத் தொழிலையும் விட்டு அனாதையா வந்து நிக்கிறம்

**மகள்**

ஐயா சாப்பிடுங்கோ

**தந்தை**

கொண்ணனுக்குக் குடு முதல்லை. அவன் திண்டிட்டுப் போய் அவைய விடட்டும்

**உரை-III**

தங்கச்சி நீயும் சாப்பிடன்

**மகள்**

நான் பிறகு சாப்பிடுகிறன்

**உரை-III**

அ.அ. அவன் சாப்பிடுகிறதைக் கண்டுதான் சாப்பிடுவியாக்கும்...ஏதோ, கனகாலம் காத்திருக்க வேண்டிவரும்

**மகள்**

அண்ணை,.... நான் காத்திருக்கிறதைக் கண்டு பயப்பிட இல்லை அண்ணை

**தந்தை**

டேய், கதைய விட்டிட்டுக் கெதியாத் திண்டிட்டுப் போவன்றா

-அவன் விரைவாக உண்டுவிட்டுச் செல்கிறான்-

**கிழவி**

கால் நோகுதே தம்பி!

www.tamilarangam.net

**உரை IV**

இல்லை ஆச்சி

**தாய்**

எப்ப எழும்பி நடக்கப் போறியோ!

**கிழவன்**

அவன் நாளைக்கே துள்ளியெழும்பி ஓடுவான்

- உற்றார், வாத்தியார், உரைஞர் V வருகின்றனர் -

**உற்றார்**

எங்கை எங்களுக்கும் சாப்பாட்டைத் தாருங்கோ

**கிழவி**

இந்தா மோனே, கையைக் கழுவு

**உற்றார்**

கொல்லைக் கிணத்திலை கழுவிப் போட்டுத்தான் வாறம்

**தாய்**

இந்தா தம்பி

**வாத்தி**

அக்கா நீ சாப்பிட்டிட்டியே?

**தாய்**

இஞ்ச கிடக்கு, இனிச் சாப்பிடுவம், உனக்கு இன்னமெப்பன் சோற வைக்கட்டே ராசா?

**உரை II**

எனக்குப் போதுமம்மா

**தந்தை**

எடிபிள்ளை எங்கையடி சாப்பாடு, இருக்கோ தம்பி

**உரை V**

ஓம் மாமா; கொண்டு வரட்டும்

- மகள் உணவு கொண்டு வருகிறாள், உணவு உட்கொண்டு இருந்த சிலர் அவளையும் உரைஞர் V-ம் அவதாகிக்கின்றனர். அவள் உணவுத்

www.tamilarangam.net

தட்டை அவனிடம் நீட்டும்போது, அவன் வாங்க பின்வரும் பாடலின் 'பொறிபறக்க ஊதிவிட்டாள்' என்ற அடிபாடப்படும். அப்போ ஒரு கணம் அந்த நிலையிலேயே இவ்விருவரும் அனைவரும் உறைநிலை அடைவர். பேசும் பாத்திரங்களைத் தவிர ஏனையோர் அடுத்தபாடல் ஆரம்பமாக விடுபடுவர்-இது மிகவும் மென்மையாகவும் அதேவேளையில் தாக்கமாகவும் செய்யப்பட வேண்டும்-

**பாடல்**

அடுப்பு மெழுகி
ஐவிரலால் கோலமிட்டு
பானை கழுவிப்
பன்னீரால் உலைவைத்துத்
தங்க நெருப்பெடுத்துத்
தனிநெருப்பு உண்டு பண்ணிப்
பொன்போல் நெருப்பெடுத்து-மதுரைமீனாள்
பொறிபறக்க ஊதிவிட்டாள்!

**காத்தார்**

ஊருக்கு உழைக்கிறம் எண்டு வெளிக்கிட்டவை பேந்தேன் உந்த அலுவல்லை மினக்கெடுகினை!

**வாத்தி**

சரித்திரத்தை மட்டுந்தான் படிச்சனீங்கள். அதைக்கூட தெளிவாய்ப் படிக்க இல்லை.

**காத்தார்**

இல்லைக் கேக்கிறன்; உவைக்கேன் உந்தப் பற்றுகள்

**வாத்தி**

ஊருக்காக உழைக்க வெளிக்கிடுறவன் ஊரைவிட்டுக் காட்டுக்குப் பரதேசியாப் போறதில்லை.

**காத்தார்**

உதெல்லாம் வெறும் பேக்காட்டல்

**வாத்தி**

இல்லை ஊருக்காக வெளிக்கிடுறவன் தன்னை ஒரு சாதாரண மனிசனாத் தான் கருதிக் கொள்ள வேணும்

www.tamilarangam.net

**கிழவன்**

வானத்தாலை விழுந்தவங்களில்லையே இவங்கள்

**உற்றார்**

எங்கடை சதையிலை, எங்கட ரத்தத்திலை எங்கடை உறவிலை வந்தவர்கள்தானே இவர்கள்

**கிழவி**

இவங்களேன் வித்தியாசமா இருக்க வேணும்?!

**நண்பர்**

எங்களைப் போல அவங்களும் திண்டு குடிச்சுச் சந்தோசமா இருந்தாலென்ன?!

**சுற்றம்**

சந்தோசம் வரேக்கை புழுகமாயும், துக்கம் வரேக்கை கவலையாயும் இருந்தால் குறைஞ்சே போகும்?

**வாத்தி**

ஒண்டும் குறைஞ்சு போகாது. சாதாரண மனிசரா(ய்) அதே நேரத்திலை திறம் மனிசரா(ய்) இவை இருக்கப் பழகிக் கொண்டால் போதும்.

எங்களை விட்டுக் காத்திலை பறக்காமல் இருக்க வேணும்

- இதுவரை முன் இடது மூலையில் பூதக்கண்ணாடி பிடித்துப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்த கதாப்பிரசங்கியும் உதவியாளரும் -

**கதா**

உவை சொல்லுற ஒண்டையும் இங்கை காண இல்லையே!!

**உதவி**

அதுதானே நானும் தட்டித்தட்டித் தேடிப் பாக்கிறன்; காண இல்லை!!!

**வாத்தி**

உங்கடை புழுதி படிஞ்ச ஏடுகள்ளை உதுகள் இராது. இருந்தாலும் தூசு படிஞ்ச உங்கடை கண்ணாடிகளுக்கள்ளாலை அதுகள் துலங்காது.

**கதா + உதவி**

ஆ!!!!! (பிடரியைச் சொறிகின்றனர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பாடல்**

சம்பாக் கதிரடித்துச்-சொக்கர்
தவித்து நிற்கும் வேளையிலே
சோலைக் கிளிபோல-மதுரை மீனாள்
சோறு கொண்டு போனாளாம்!
கலத்திலிட்ட சோறு தனில்
கல்லோ கிடந்ததென்று-சொக்கர்
கடுங்கோபங் கொண்டாராம்!
வாரி எறிந்தாராம்-சொக்கர்
வயிர மணிக்கையாலே

-உரைஞர் V வாயிலுள்ளதைக் கையில் கக்கி எறிவது போல் ஊமிக்கிறான்-

**வாத்தி**

ஏய் சொக்கா, ஏன் சோத்தைத் துப்பினனி?! நீ இப்பிடிச் செய்யலாமே?!

**உரை V**

உண்மையா சும்மா முசுப்பாத்திக் கண்ணை

**வாத்தி**

ராசா, என்ன முசுப்பாத்தியா இருந்தாலும் பொதுவாழ்விலை ஈடுபடுகிறவன் செய்யிற ஒவ்வொண்டையும் உலகம் வலு உன்னிப்பாக் கவனிச்சுக் கொண்டிருக்கும்

**உரை V**

ஓமண்ணை

**வாத்தி**

உன்னைச் சுற்றி ஒருக்காப்பார்.

- பார்க்கிறார் அவனை அனைவரும் அவதானிப்பது தெரிகிறது

**வாத்தி**

உன்னைப் பின்பற்றுறவனும் உலகமும் உன்னைத்தான் பாக்குது

**உரை V**

என்னை....

www.tamilarangam.net

**வாத்தி**

ஆ... அதெல்லாத்துக்கும் அவசியமில்லை. உங்கடை புழுகத்திலை குறுக்கிட்டதுக்கு நீங்கள் தான் மன்னிக்க வேணும்

**மகள்**

சோத்துக்கை மண் எண்டு சும்மா சொல்லுறார்.

**வாத்தி**

சும்மாதானே சொல்லுறான்..... தம்பி நாங்கள் ஒரு புனித வேள்வியிலை இறங்கியிருக்கிறம் எண்ட உணர்வு உனக்கு இருக்கெண்டு நான் நிச்சயம் நம்பிறன்

**உரை V**

ஓமண்ணை. சத்தியமா இருக்கு

**வாத்தி**

அதிலை ஒரு சின்னப் பிசகு நடந்தாலும் வேள்வியின்றை புனிதம் கெட்டுப் பலனும் பாரதூரமாக் கெடும்

**உரை V**

ஓமண்ணை

**வாத்தி**

ஏணெண்டால் இந்த வேள்வியின்றை ஓமாக்கினியிலை மக்களின்றை நம்பிக்கையளையும் தியாகங்களையும் தான் சந்தனக் கட்டையாயும் நெய்யாயும் தேனாயும் சொரிஞ்சிருக்கிறம்

**உரை V**

நான் இதை மறக்க இல்லை அண்ணை

**மகள்**

நான் இனி அளவறிஞ்சு நடந்து கொள்ளிறன் அண்ணை

**வாத்தி**

உன்னில ஒரு பிழையுமில்லை ராசாத்தி;

சத்தியமா... இதுதான் தவம்.... தன்னை வருத்திறது தனக்காக அல்ல; உலகத்துக்காக

www.tamilarangam.net

**பாடல்**

அழுத குரல் கேட்டு
அழகர் எழுந்திருந்து
வரிசை கொடுத்தாராம்
வையகத்தில் உள்ளமட்டும்
சீரு கொடுத்தாராம்
சீமையிலே உள்ளமட்டும்
மானா மதுரை விட்டார்
மதுரையிலே பாதி விட்டார்.

**- சொக்கரும் மீனாளும்**

- தாலாட்டு - தமிழண்ணல் -

-ஊரவர் பலர் உறங்கிவிட்டிருப்பர். இந்நிலையில் உரைஞர் எங்கோ தொலைவில் இருக்கும் ஒருவனை நோக்கி கூறும் பாணியில்-

**உரை I**

ஊசித் துவாரத்துள் யானையைச் செலுத்தலாம்

**உரை II**

பால்வீதியில் பொரித்த மீன் பிடிக்கலாம்

**உரை III**

கடலை உழலாம்

**உரை IV**

முதலையைக் கூட மனிதனாக்கலாம்

**உரை V**

இவையெல்லாம் உமக்கு மிகமிக எளிது

**வாத்தி**

ஆயினும் சுடர்விடும் எமது நம்பிக்கை ஒளியினை தொடர்ந்து துன்புறுத்தி அழிக்கலாம் என்பதோ...

**உரை I**

எமது பயணத்தின் ஓர் அடியினைக் கூட தடுத்து விடுவதோ சாத்தியமற்றது.

www.tamilarangam.net

**உரை II**

மந்திர வலிமை உடையவர்கள் நாங்கள்

**உரை III**

ஆயிரக்கணக்கில் எங்கும் பரந்துள்ளோம்!

**உரை IV**

எல்லா இடமும் நாங்கள் பரந்துள்ளோம்!

**உரை V**

உமது மார்பின்மேல் ஒருபெருஞ் சுவராய் இங்கு நாம் இருப்போம்!

**கிழவன்**

பட்டினியோடு...

**தாய்**

கந்தல் உடையுடன்...

**மகள்**

போர்க் குணம் கொண்ட எம்பாடலைப் பாடி...

**உரை I**

தெருக்கள் தோறும் சினத்துடன் குமுமி..

**உரை II**

பாதாளச் சிறைகளை மகிழ்வுடன் நிறைத்து...

**உரை III**

மந்திர வலியுடன்... ஆயிரக்கணக்கில்

**உரை IV**

நாங்கள் எங்கும் பவனி வருவோம்!

**உரை V**

எங்கும் நாங்கள் பவனி வருவோம்!!

**கிழவன்**

நாங்கள் இங்கிருப்போம்

**தந்தை**

பிறகு செல்வோம்
கடலைக் குடிப்போம்

www.tamilarangam.net

**வாத்தி**

கண்ணிமை வெட்டாக் காவல் வீரராய்

**மகள்**

எங்கள் நிலமெலாம்

**உரை I**

எங்கள் மரமெலாம்

**உரை II**

நாங்கள் இங்கிருப்போம்

**உரை III**

புளிக்கவைக்கும் நொதியம் போல எமது குறிக்கோள் கனியும் வரைக்கும் நாங்கள் இங்கிருப்போம்.

-உரைஞர் மூன்று காவலுக்கு இருப்பவர் போல் இருந்து விடலாம்-

**உரை IV**

நாங்கள் இங்கிருப்போம் விறைத்த நரம்புடன்

**உரை V**

தாகம் தணிக்க நாம் மலைகளைப் பிழிவோம்!

**வாத்தி**

புழுதியைக் குடித்துப் பசியினைத் தணிப்போம்!

**கிழவன்**

ஆயினும் நாங்கள் நகரவே மாட்டோம்

**மகள்**

இங்கு நாங்கள் இரத்தம் சிந்துவோம்

**தாய்**

இங்கு எமக்கோர் பழமை இருந்தது

**உரை I**

எதிர்காலம் ஒன்றும் இங்கெமக் குள்ளது

**உரை II**

வெல்ல முடியாதவர் இங்கு நாங்களே

www.tamilarangam.net

**உரை III**

ஆகவே
எனது வேர்களே,
ஆழச் செல்க, ஆழச்செல்க!

- பாலஸ்தீனக் கவிதைகள்

- இந்தக் கட்டம் வரமுன் உரைஞர்கள் பெரும்பாலும் ஆங்காங்கு காவல் நிலையில் நின்றும் இருந்தும் பல்வேறு நிலைகளைப் பெறுவர்-

- தாய் நித்திரையின்றிக் கிடப்பதைக் கண்ட அவளின் தம்பி வாத்தியார்...

**வாத்தி**

என்னக்கா நித்திரை வர இல்லையே

**தாய்**

(எழுந்து) எப்படித் தம்பிவரும்?! கெதியிலை விடியும் எண்ட நினைப்பிருந்தால்தானே நித்திரை வரும்.

**வாத்தி**

அக்கா விடியாமலா விடப்போகுது?

**தாய்**

உதைத்தான் பிள்ளையளும் அண்டு துவக்கம் சொல்லுதுகள். சொன்னதுகள்ளை ரெண்டும், அவரும் ஒரு நாள்ளை, ஒரு நொடியிலை, கண் மூடிமுளிக்க முன்னம், கோதாரியிலை போவாராலை கொள்ளை போகிட்டுதுகள்.

**வாத்தி**

அக்கா, எங்களுக்கு மட்டுமே இந்தக் கொடுமை?! எத்தினை மனிசர் குடும்பமாயே அழிஞ்சுபோச்சுதுகள். உனக்கெண்டாலும் ரெண்டு பொடியங்கள் கண்முன்னை இருக்கிறாங்கள்.

**தாய்**

(பெருமூச்சுவிட்டு) அண்டைக்கொருநாள்... அவர் இருக்கேக்கை,... அப்ப, மூத்தவன் பத்தாம் வகுப்புப் படிக்கிறான்... நான் சொன்னன்... வடிவாப் படிச்சுப் பாசு பண்ணடா மோனே... உன்னைக் கடன்பட்டெண்டாலும் பட்டணத்துப் பெரிய பள்ளியிலை விட்டுப்

www.tamilarangam.net

படிப்பிக்கிறன், எண்டு. அதுக்கு அவன் என்ன சொன்னவன் தெரியுமே தம்பி...

- வேறு ஒரு இடத்தில் கதைத்துக் கொண்டிருக்கும் உரைஞர்கள்...

**உரை V**

கொம்மா அப்பிடிச் சொல்ல, நீ என்ன சொன்னணி?

**உரை II**

பட்டணத்துப் பெரிய பள்ளிக்கூடத்திலை என்னைப் போலை ஏழையள், எவ்வளவு கெட்டித்தனம் இருந்தாலும் படிக்க ஏலாதம்மா, அங்கை படிக்கிறவையோடை உடுப்பாலும், நடப்பாலும் எங்களுக்கு ஈடுகொடுக்கேலாதம்மா...

**உரை V**

இந்தக் கொடுமையைப் போக்க என்னவழி எண்டும் கொம்மாவுக்குச் சொன்னனியே?

**உரை II**

ஓம் அவவுக்கு விளங்கிற பாசையிலை சொன்னன்.

**உரை V**

என்னண்டு?

**உரை II**

ஊர்ப்பள்ளிக் கூடங்கள் எல்லாத்தையும் பட்டணத்துப் பெரிய பள்ளிக் கூடங்களைப் போல ஆக்கிறத்துக்கு வழிதேடத்தான் நான் பள்ளிக்கப் போய்ப் படிக்கிறதை விட்டிட்டு...

**தாய்**

ஓ...! தம்பி! அவன் அப்ப அப்பிடிச் சொல்ல எனக்கத் தலையிலை இடி விழுந்ததுபோல கிடந்திது.... அவன் அதோடை விட்டானே....

எல்லோருக்கும் வயிறு நிறையச் சாப்பாடு... ஒவ்வொரு குடும்பத்துக்கும் சொந்தவீடு, சொந்த நிலம், வைத்தியம், போக்குவரத்தெண்டு, என்னென்னமோ எல்லாம் சொன்னான்.

**வாத்தி**

அவன் சொன்னதுதானக்கா நியாயம், தர்மம் எண்ணிறது

**உரை V**

நாங்கள் சமூக தர்மத்துக்காகத் தான் இந்தளவு பாடுபடுகிறம் எண்ட உணர்வு எங்கள் எல்லாருக்கும் வந்தண்டைக்குத் தான் நாங்கள் மக்களோடை மக்களாகி, மக்களிட்டை இருந்து பெற்றதை மக்களோடை பகிர்வம்

**உரை II**

அப்பதான் நாங்கள் வெறுமனே இயங்கிறவையா இராமல் இணைந்து பிணைந்து, பரந்த ஸ்தாபனமாகிப் பரவுவம்

– ஓர் இடத்தில் நின்ற உரைஞர்கள் I, II, III தம்முள் உரையாடுகின்றனர்

**உரை I**

டேய், நீ ஏன்றா உந்தக் கால்க் காயத்தோடை இங்கை வந்தனி

**உரை II**

வீட்டை படுத்திருக்க விசரா(ய்)க் கிடந்திது.

**உரை III**

டேய், வாத்தியார் அண்ணை நினைச்சு வச்சிருக்கச் சொன்ன அந்த மூண்டு விதிகள் என்னடா

**உரை II**

அடப்பேயா, அது இன்னும் பாடமில்லையே உனக்கு, முதலாவது நடிவடிக்கைகள் எல்லாவற்றிலும் கட்டளைகளுக்குக் கீழ்படி

**உரை IV**

ரெண்டாவது, மக்களிடமிருந்து ஒரு ஊசியையோ அல்லது ஒரு துண்டு நூலையோ எடுக்காதே

**உரை I**

மூண்டாவது கைப்பற்றிய எல்லாவற்றையும் தாமதமின்றி ஒப்படை

– ஐந்தாம் உரைஞன் திடீரென்று விறைப்பாக நின்று கூற ஏனையோரும் அவ்வாறே நின்று உரிய பதிலைக் கூறுகின்றனர்

**உரை V**

எல்லாரும் கவனியுங்கோ. எட்டு நடைமுறைகள்! ஒண்டு?

www.tamilarangam.net

**உரை I**

மரியாதையாகப் பேசு!

**உரை V**

ரெண்டு?

**உரை II**

வாங்குவதிலும் விற்பதிலும் நியாயமாக நடந்து கொள்

**உரை V**

மூண்டு?

**உரை III**

கடன் வாங்கியவற்றைத் திருப்பிக் கொடு

**உரை V**

நாலு?

**உரை V**

சேதங்களுக்கு நஷ்டஈடு செலுத்து

**உரை V**

அஞ்சு?

**உரை I**

மக்களை அடிக்கவோ நிந்திக்கவோ கூடாது

**உரை V**

ஆறு?

**உரை II**

பயிர்களை அழிக்காதே.

**உரை V**

ஏழு?

**உரை III**

பெண்களிடம் ஒழுங்கீனமாய் நடவாதே.

**உரை IV**

எட்டு?

www.tamilarangam.net

**உரை V**

கைதிகளைத் துன்புறுத்தாதே

**பாடல்**

ஊரார் உறங்கையிலே உற்றாரும் தூங்கையிலே
நல்ல மனம் உள்ளதுகள் நாலு பாடம் படிக்குதுகள்!
நல்ல மனம் உள்ளதுகள் நாலுபாடம் படிக்கையிலே
நாடு சிறக்குதம்மா நல்லவழி பிறக்குதம்மா
நாடு சிறந்து பின்னே நல்லவழி பிறக்கயிலே
கோடை அழியுதம்மா கொடுமைகளும் ஒழியுதம்மா
கோடை அழிந்து எங்கும் கொடுமைகளும் ஒழிகையிலே
செந்நெல் விளையுமிங்கே செம்பாட்டில் பயிர் விளையும்

- மேலே உள்ள பாடல் பாடப்படும்போது உரைஞர் வாத்தியார் ஆகியோர் மிக அமைதியான, ஆழமான செயற்பாடுகளில் ஈடுபட்டு பின் சற்று உணர்ச்சியுடன்-

**வாத்தி**

கூடித் தொழிற்படுவோம்
வாருங்கள்

**உரை I**

கூறுபட்டுச் சமுதாயம்
நூறு குழுத்தோன்றி
மாறுபடச் சிந்தித்தால்
வீழ்ச்சிதான்.

**உரை II**

பாட்டம் பாட்டமாய்
மழை கொட்டப் போவதனை
மூடிக் கிடக்கும் முகிற் கூட்டம் காட்டுகுது
எமக்கு

**உரை III**

ஓலைக் குடிசை என்றாலும்
ஒதுங்கி இருக்க
இடம் வேண்டும்
வாருங்கள்

www.tamilarangam.net

உரை IV

கருத்து ஒன்றுபடுவோம்
கைகோத்து நிற்போம்

உரை V

பாதுகாப்பு ஏற்பாடு
பலப்படுத்திக் கொள்வோம்

– தா. இராமலிங்கம்

– மீண்டும் உரைஞர் 1,3,4 ஆகியோர் ஓரிடத்தில் சந்தித்து நின்கின்றனர். ஏதோ தம்முள் கதைத்துக் கொள்கின்றனர்.

–தந்தை எழுந்து, அல்லது நித்திரை வராது தவித்தவர், எதையோ பெட்டிக்குள் தேடுகிறார். அப்போ மகள்...

மகள்

என்னையா தேடுறியள், பொயிலையே?

தந்தை

இல்லை மோனை நீபடு.

– மீண்டும் தேடுகிறார் –

மகள்

பொயிலை முடிஞ்சுதப்பு... காம்பு கூட இல்லை...

தந்தை

இலை காம்பு, பூ, மொட்டு, காய், பழம், மரம், பட்டை எல்லாம் முடிஞ்சுது.

– ஒரு மூலையிலிருந்து புகைத்துக் கொண்டிருக்கும் கிழவன்.

சம்பந்தா சம்பந்தமில்லாது தன்பாட்டுக்குத் தன் எண்ண அலைகளின் பிதுங்கலாக...–

கிழவன்

எல்லாம் மோசம் போனது போலக் குந்தி இருந்து பெருமூச்சு விட அப்பிடி என்ன கொள்ளை போகிட்டுது இப்ப...

தந்தை

என்ற வலை, வள்ளம், தூண்டில், கொட்டில் எல்லாம் போகிட்டுது...

www.tamilarangam.net

- இனி ஒவ்வொருவருமே தமது உள்ளத்து எண்ணங்களின் வெளிப்பாடாகவே ஒருவரொடொருவர் தொடர்பற்ற முறையில் ஏதோ வாய்மூலம் வெளிப்படுத்துவர். எனினும் அவர்களுக்கிடையில் வளர்ந்து இறுகிவரும், ஆரவார மற்ற அமைதியான பிணைப்பின் உறுதியான தொடர்பு தெரியும்-

**நண்பர்**

நாங்கள் இருக்கிறவரைக்கும் அனாதைகள் அகதிகள் எண்டு ஆரும் இஞ்சை தங்களை நினைக்கக் கூடாது.

**கிழவி**

கஞ்சிதான் நாங்கள் குடிக்கிறம், அதைக் கலந்து பயிந்து குடிப்பம்

**தந்தை**

இந்தக் காயிதம் ஒண்டுதான் எனக்கு ஆறுதலா இருந்திது... இப்ப அதையும்...

**மகள்**

அது இஞ்ச என்ற கையில தான் இருக்குதையா...

**தந்தை**

ஓ... அது உனக்கும் மன ஆறுதலைத் தந்திதெண்டால்..யேசுவே...! எனக்கு எவ்வளவு ஆறுதலா இருக்கும்.

**உற்றார்**

பிள்ளையளோடை போய்...நெருக்கமா இருந்து அவங்கள் கையிலை, தோள்ளை வச்சிருக்கிறதுகளை வடிவாத் தொட்டுத்தடவிப் பாக்கவேணும்... பயப்பிடக் கூடாது

**மகள்**

பெரியண்ணாவின்றை காயிதம் தான் எனக்கு இப்ப இருக்கிற ஒரே ஒரு நம்பிக்கை..

**தந்தை**

ஓ... பிள்ளை!... பிள்ளை..! அதை அவன் கொம்மாவுக்குத் தான் எழுதினவன்...

**உரை III**

எனக்கு ஒரு அண்ணன் இருந்தவர்... அவர் ஆறு வருசங்களுக்க முன்னம் வீட்டை விட்டு வெளிக்கிட்டவர்.. பிறகு திரும்பி வரவே இல்லை.

www.tamilarangam.net

**உரை I**

அது ஒரு கால கட்டம். வீட்டை விட்டிட்டு வெளிக்கிடுகிறது.

**உரை IV**

ஓம். இப்ப நாங்கள் வீட்டோடையே இருக்கிறம். படிக்கிறம் கூட பாடுபடுகிறம்...

**வாத்தி**

ஊருக்குள்ளே இருந்து, இந்த அவலமான நேரத்திலை சனத்துக்கு உதவி செய்ய எத்தினை வழி இருக்கு.

**கிழவி**

தோள்ளை தூக்கின பொடியளைப் போல எங்களுக்குத் தொண்டுகள் செய்யிற பிள்ளையள் எத்தினை இருக்க ஊரிலை.

**தாய்**

இப்பிடி இந்த ஊர் ஒற்றுமையா இருந்ததை இதுக்கு முன்னம், என்ர வயதுக்கு நான் காண இல்லை.

**கிழவி**

ரெண்டொண்டுகள் இன்னும் தன்பாட்டுக்குத்தான் இருக்குதுகள்

**தந்தை**

கொண்ணன்றை காயிதம் வரேக்கை கொம்மா இல்லை... கொம்மா இருக்கிறா எண்டுதான் கொண்ணன் இப்பவும் நினைச்சுக் கொண்டிருப்பான் பாவம்...

**மகள்**

பாவம், அண்ணை!!... அவர் திரும்பி வரேக்கை அம்மா இல்லை எண்டதை அறிஞ்சதும் எவ்வளவு கவலைப்படுவார்...

**தந்தை**

ஓ...! அதை நினைக்க... பாவம் அவன்....

**மகள்**

பெரிய அண்ணர் வராமலே விட்டிட்டால் நல்லது...

**தந்தை**

ஆ...! அப்பிடி ஏன் சொல்லுறா வாயோரியா...

www.tamilarangam.net

**உரை III**

அண்ணை செத்து மூண்டுமாதமாகுது

**உரை I**

உன்ரை தங்கச்சிக்கும் ஐயாவுக்கும் தெரியுமே

**உரை III**

ஐயாவுக்குத் தெரியாது. தங்கச்சிக்குத் தெரியும்.

**தந்தை**

பிள்ளை, கொண்ணன்றை காயிதத்தை ஒருக்காப் படி பிள்ளை...

**மகள்**

ஏனப்பு இப்ப!?

**தந்தை**

நீமட்டும் எத்தினை தடவை வாசிச்சுப் போட்ட(ய்).... வாசி...நான் அதைக் கேட்டுக் கேட்டுப் பாடமாக்கி, அவன் வரேக்கை அதைத் திருப்பிச் சொல்லுவன்... அதைக் கேட்டு அவன் வெக்கப்படுகிறதைப் பார்த்துச் சிரிப்பன்...இம்...! கொம்மா இல்லாததை அவன் இப்பிடியெண்டாலும் மறக்கட்டன்...வாசிபிள்ளை

**மகள்**

அம்மா, எப்பிடிச் சுகம்

வீட்டை நான் இருக்கேக்க, உனக்கொரு சின்ன வேலையும் செய்து தரஇல்லை. கடைக்குக் கூட போய் வா எண்டால்; மாட்டன் எண்டிடுவன். ஒரு நாள் தேங்கா(ய்) திருவச் சொல்ல, நான் மாட்டன் எண்டிட்டுக் கடைக்கரைப் பக்கம் ஓட, நீ தேங்கா(ய்)ப் பாதியாலை எறிஞ்சா(ய்) அது என்றை பின்னங் கால்லைப் புடிக்க, கால் பின்னித் தடுக்கி நான் குப்பற விழுந்தன். வாய்முட்ட மணல், அம்மா, நீ வந்து தூக்கி விட்டா(ய்)

**உரை III**

அம்மா, நீ வந்து தூக்கி விட்டா(ய்). இப்பவும், நான் எத்தனையோ காரணங்களுக்காகத் தேவையளுக்காக, ஓடேக்கை தடக்கி விழுகிறன். அப்ப நீ செய்ததை இப்ப இப்ப என்னோடை இருக்கிற சினேகிதர் செய்யினம்.

**தந்தை**

என்ற பிள்ளை தனிச்சுப் போகேல்லை. கனபேரோடை இருக்கிறான்...இம் வாசிபிள்ளை...

www.tamilarangam.net

**மகள்**

இப்ப நான் விளேக்கை என்னை அறியாமல் என்றை உதடுகள் மண்ணைத் தேடி முத்தமிடுகிது. கடற்கரை மணல்லை அணடைக்குவிழுந்ததை இப்ப நினைக்கிற போது... ஒவ்வொரு நாட்டுக்கும் போகேக்கை பிளேனாலை இறங்கினதும் மண்ணை முத்தமிடுகிற பாப்பாண்டவரைத்தான் எனக்கு நினைவுக்கு வருகுது.

**உரை III**

நான் எங்கடை மண்ணுக்குக் குடுத்த முதல் முத்தம் அது எண்டு இப்ப நினைக்கிறன்... இப்ப அந்த மண்ணிலை ஓடுறன். நடக்கிறன். அரையிறன், தவள்கிறன், படுக்கிறன், எழும்பிறன், வேலை செய்யிறன்...எவ்வளவு களைக்கக் களைக்க வேலை செய்யிறன்.

**தந்தை**

பாவம் பொடியன், அவன் அங்கை பாடுபட, இஞ்ச நான் சும்மா இருக்கிறன்... அகதியா இருக்கிறன்... இப்பிடியே நான் இனி இருக்கக்கூடா...முதலுதவி, விவசாயம், படிப்பு எண்டு சிறிசுகள் ஊருக்கை பாடு படுகிறதுகள்... நான் இனிச் சும்மா இருக்கக் கூடா

**கிழவி**

சாரோலை எடுத்துப் பாய் கடகம் இளைப்பன்...

**தாய்**

குப்பை கூட்டிக் சேத்தாலே, பயிர் நடப் பசளையா உதவும்...

**கிழவன்**

சும்மா இருக்கிறதே மனிசரா(ய்) பிறந்தவை!...

**தந்தை**

பிள்ளை மிச்சத்தையும் படிமோனை...

**மகள்**

அம்மா, நான் திரும்பி வீட்டுக்கு வரேக்கை, நிக்கிற நாளெல்லாம் உனக்குத் தேங்கா(ய்) திருவித் தருவன். விறகு கொத்துவன். கடைக்குப் போவன்... கட்டு மரத்திலை கடலுக்குப் போவன்...

**தந்தை**

போதும்!... போதும்!... போதும் மோனை!... கடலை நினைக்க நெஞ்சு வலிக்குது... இந்த உடம்பிலை கடல்க் காத்துப் பேந்தும் எப்பப் படப்போகுதோ!

www.tamilarangam.net

**மகள்**

நாங்கள் எல்லாரும் ஒத்து நிண்டால், இண்டைக்கில்லை எண்டாலும் எண்டைக்கோ ஒருநாள் உப்புக் காத்து எங்கடை உடம்பிலை படத்தான் செய்யும்...

**தந்தை**

கொண்ணை திரும்பி வரமுன்னம் நாங்கள் கடற்கரைக்குக் குடியிருக்கப் போய் விடவேணும்...

**மகள்**

ஐயா, போனவை திரும்பி வரலாம், விடலாம். ஆனால் போற பயணம் தடங்கலில்லாமல் தொடரவேணும்.

**உரை V**

முன்னம் அங்கை நாங்கள் இருக்கேக்கை கொண்ணா ஒரு தாயைப் போல எங்களைப் பாத்தவர். நல்ல சிநேகிதரா இருந்தவர்..சனத்தோடை சேந்து இருந்து, தொண்டர்களோடை கலந்து பிளங்கி ஸ்தாபனங்களோடை இணைஞ்சு சேர்ந்து பழக எங்களுக்குக் காட்டித் தந்தவரே கொண்ணர் தான்.

**வாத்தி**

இவையின்றை சன்னதத்தை அடக்கி சனத்தோட சேர்ந்து நடக்கக் காட்டிக் குடுத்தவர் கொண்ணர் தான்.

**உரை V**

கொண்ணர் அடிக்கடி முஸ்பாத்தியாச் சொல்லுவார்.. இயங்கியல் எண்ணிறது வெறும் ஒற்றை அடிப்பாதை இயக்கமல்ல. அது சமூகம் எல்லாம் இணைந்த, பரந்த ஊர்வலம் எண்டு.

**உற்றார்**

ஒரு ஊசி செய்யிறது தொடக்கம் தூசுதட்டுறது வரைக்கும்...

**சுற்றம்**

பயிர் செய்யிறது தொடக்கம் உயிர் காக்கிறது வரைக்கும்...

**நண்பர்**

மூலிகை பிடுங்கிறது தொடக்கம் மூளையை வளக்கிறது வரைக்கும்...

www.tamilarangam.net

**கிழவன்**

எல்லாரும் இணைய வேணும்.

- பின்வரும் பாடல் பாடப்படும்போது மேடையில் உள்ள எல்லோரும் ஒரு இணைப்பினுள் கலந்த மக்களாகக் காட்சி தரும் ஒரு அமைப்பு மேடையில் நடிகரைக் கொண்டுஅமைக்கப்படவேண்டும். அந்த அமைப்பு ஒரு நோக்கிற்காக உழைக்கும் சகல வேறுபட்ட செயல்பாடுகளையும் இயக்கிக் காட்டுவதாகவும் இடையிடையே உறைநிலைப் படுத்திக் காட்டுவதாகவும் இருக்கும்-

**பாடல்**

1. கை கொடுத்து உதவி செய்ய
தோள் கொடுத்துப் பாரம் தாங்க
வையகமோ அழைக்கிறது
வளர்த்த மண்ணும் அழைக்கிறது

2. எல்லோரும் இணைய வேண்டும்
மக்களெல்லாம் சேர வேண்டும்
பல்லோரும் பெருக வேண்டும்
பக்கபலம் ஆக வேண்டும்

3. சோதரர்கள் இங்கு நாங்கள்
அனைவருமே சொந்த பந்தம்
சோதனைகள் வந்துவிட்டால்
சொந்த மண்ணைக் காக்கவேண்டும்

- மிக அமைதியான மனநிலையோடு அனைத்தும் முடிந்து திரை மூடப்படலாம். ஆரவாரம் வேண்டுமென்றால், நாடக ஆரம்பத்தில் இடம்பெற்ற சூரத்தேவர்கள் தொழுது போற்றவே என்ற பாடலுடனும் அதற்குரிய இயக்கங்களுடனும் முடியலாம்-

**மகள்**

எனது பாட்டி திறந்த கண்களால்
வெறித்துப் பார்ப்பதைக் காணும் நிலைமை
எனக்கேன் வருவான்?

**உரை III**

வானத்தை நோக்கி நிர்வாணமாக
எனது தாயின் சடலம் கிடப்பதைக்
காணும் நிலைமை எனக்கேன் வருவான்?

www.tamilarangam.net

**வாத்தி**

உடைந்து நொறுங்கிய உள்ளத் துயருடன் உலகில் உள்ள நாடுகளிடத்தில் முன்பும் நாங்கள் முறையீடு செய்தோம்

உம் மனச்சாட்சி அசையவே இல்லை

**உரை I**

எமது இளைஞரின் எமது பெண்களின்
எமது சிறார்களின் வேண்டுதல் எல்லாம்
உமது நெஞ்சினை உலுப்பவே இல்லை.

**உரை II**

பிறகு வந்தது எம் போராட்டம்.
தியாகங்களும் போர்களும் நிகழ்ந்தன
கொல்லப்பட்டோம் காயமடைந்தோம்
முறையீடுகள் மிகமிகக் குறைந்தன.

**உரை IV**

எங்கள் கண்ணீரை நாங்கள் நிறுத்தினோம்
துப்பாக்கி முழக்கம் சொற்களை விடவும் உரத்துப் பேசின

**உரை V**

பயங்கர நிலைமை முடிந்திட வேண்டும்.
எமது புண்ணிய பூமியின் ஊடாய்
சமாதான நதி பெருகிட வேண்டும்
என்பதே எமது பிராத்தனையாகும்.

**வாத்தி**

நீதியும் சமாதானமும்
புதியதான ஓர் சிந்தனைப் பாதையும்
இவையே எமது வேண்டுதலாகும்.

– **பாலஸ்தீனக் கவிதைகள்**

(பாத்திரங்கள் பேசியவை மட்டுமல்ல அவற்றின் குண நலன்களைக் காட்டுவன. அவை செய்தவை மட்டும் அல்ல அவை பேசியவற்றிலிருந்து அவை பேசாது. ஆனால் உள்ளத்தின் உள்ளே சிந்தித்து நின்றவற்றையும். அவை செய்தவற்றிலிருந்து. அவை

www.tamilarangam.net

செய்யாமல் விட்டவற்றையும் செய்ய நினைத்தவற்றையும் கண்டு காட்சிப்படுத்திப் பிரதிக்கு விளக்கமும் வியாக்கியானமும் அளிப்பீராக. வாத்தியாரும் ஐந்தாம் உரைஞரும் இவ்வாறு முதன்மைப்படுத்திச் சிந்திக்கப்பட வேண்டியவராவர். காத்தாரும், கதாப்பிரசங்கியாரும் அவரது உதவியாளரும் இடையில் மறக்கப்பட்டு விட்டவர்போல் தோன்றினும், அவர்களை மறந்து விடவேண்டாம். அவர்களை எவ்வாறு நடத்துவது என்பதில் எவர் முடிவும் ஒன்றாக இருக்கும். ஏனைய ஒவ்வொரு பாத்திரமும் கருத்தின் ஒன்றுபடினும் தனித்துவமானவை. நடிகரும் நெறியாளரும் அவற்றைக் கண்டு கொள்வீர்.)

- திரை -

www.tamilarangam.net

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாழ் பல்கலைக்கழக மாணவரால் நடிக்கப்பெற்ற இந்நாடகம் தமிழ்ப் பிரதேசங்களில் நடந்து கொண்டிருக்கும் அரசியற் போராட்டத்துக்குப் புதிய ஒரு பரிமாணத்தை வழங்கியுள்ளது.

கலையின் நுணுக்கத்தினால் மக்களிடத்தே அது ஏற்படுத்தும் உணர்திறனால், சில முக்கியமான மனப்பதிவுகளை ஏற்படுத்தலாம் என்பதையும் சமூகப் பிரக்ஞையை ஏற்படுத்தும் தொடர்பு முறைமை கலைவழியாற் செம்மையாகச் செய்யப்படலாமென்பதையும் "மண்சுமந்த மேனியர்" என்ற இந்த நாடகம் எடுத்துக் காட்டியுள்ளது.

கார்த்திகேசு சிவத்தம்பி.
(மல்லிகை).

தேசிய கலை இலக்கிய பேரவை

சவுத் ஏசியன் புக்ஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்